Registered as a News Paper in Sri Lanka

5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

● வெள்ளி மஞ்சரி ●

நாதம் 01 பிரமோதூத ஸூ வைகாசி மீ 11 ஆம் உ வெள்ளிக்கிழமை (25 - 05 - 1990) ஹிஜ்ரி 1410 ஷவ்வா 29 ஓசை 96

## ஆபிரிக்காவையும் ஐரோப்பாவையும் இணைக்க 1000 கோடி டாலரில் சுரங்கம்

கிரேக்க தொல்சீர் இலக்கியங்களின்படி, ஆபிரிக்காவிலிருந்து ஐரோப்பாவை மீட்பதற்காக கிரேக்க வீரகாவிய நாயகன் ஹெர்க்குளிஸ், ஜிப்ரோல்டர் நீரிணையை உண்டாக்கினான் என்பது ஐதீகம். இந்த ஐதீகம் இன்று உண்மையாகிறது.

இந்த இரு கண்டங்களையும்--ஐரோப்பாவையும், ஆபிரிக்காவையும் ஓர் சுரங்கப்பாதை அல்லது பாலத்தின் மூலம் ஒன்றிணைப்பதற்கு உலகினிலுள்ள 300 நிபுணர்கள் கூடி ஆலோசித்து வருகிறார்கள். ஸ்பெயினிலும் மொறக்கோவிலும் உள்ள இரு நிறுவனங்கள் கடந்த பத்து வருடங்களாக இரு கண்டங்களையும் இணைப்பது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றன. ஸ்பானிய அரசனான யுவான் கரனிஸ்சும், மொறக்கோவின் அரசனான ஹுசையினும் இந்தப் திட்டத்துக்கான ஆலோசனையை முதலில் (4ஆம் பக்கம் பார்க்க)

# வட - கிழக்கு மாகாணசபை; இரு வாரத்தில் முடிவு தெரியும்!

## ஜனாதிபதி சட்ட ஆலோசனை செய்வதாக அமைச்சர் ரஞ்சன் தகவல்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணசபை சம்பந்தமாக ஜனாதிபதி சட்ட ஆலோசனை செய்து வருகிறார் என்றும் இரண்டு வாரங்களில் வடக்கு-கிழக்கு மாகாணசபை பற்றி ஒருமுடிவு தெரிந்து விடுமென்றும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ரஞ்சன் விஜேரத்தினா நேற்று நடந்த வாராந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபை பற்றிய மற்றுமொரு கேள்விக்கு அமைச்சர் ரஞ்சன் பதிலளிக்கையில் அரசியலமைப்புக்கு மாறாக நடந்தவர்கள் அதன் விளைவை அனுபவித்துத்தானாக வேண்டும் என்று கூறினார்.

அமைச்சர் பெயர் குறிப்பிடாவிட்டாலும் ஈழ சோஷலிசக் குடியரசு பிரகடனத்துக்கு ஒருவரு-- அவகாசம் கொடுத்து வடக்கு-கிழக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றிய வரதராஜப் பெருமாளையும் அவரது சகாக்களையுமே கூறினாரென்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு கிழக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடைபெறும்பொழுது சர்வகட்சி முறை பின்பற்றப்படுமென் (4ஆம் பக்கம் பார்க்க)

## கைலஞ்சம் குற்றத்தில் அறுவைச் சிகிச்சை நிபுணர்

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தில் ஆஸ்பத்திரி ஒன்றில் கடமையாற்றும் அறுவைச் சிகிச்சை நிபுணா, நோயாளி ஒருவரிடமிருந்து ரூபா 750 லட்சம் பெறும்போது லஞ்சத் திணைக்கள அதிகாரிகளிடம் கையும் மெய்யுமாக மாட்டிக் கொண்டார்.

அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்கு ரூபா 750 சந்தோஷமாகத் தரும்படி அறுவைச் சிகிச்சை நிபுணர் நோயாளியிடம் கேட்டுள்ளார். நோயாளி மேற்படி தொகையை நிபுணருக்கு வழங்கும் முன் கொழும்பிலுள்ள லஞ்சத் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து நுவ (4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் வசிக்காதோர் வங்கிக் கணக்குவைக்க அனுமதி

(கொழும்பு)

வெளிநாட்டு வாடிக்கையாளர்கள் இலங்கையில் வசிக்காதவர்கள் சார்பில் வங்கிக் கணக்குகளை அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகளில் வைத்திருப்பதற்கு நாணய சபை அனுமதியளிக்கும் பொருட்டு வங்கிச் சட்டத்தில் கொண்டு வருவதற்கான திருத்தங்களை நிதிஅமைச்சரும் பிரதம மந்திரியுமான டி.பி. விஜேதுங்கா வர்த்தமானியில் பிரசுரித்துள்ளார்.

நடைமுறைக் கணக்கு, சேமிப்புக் கணக்கு வைப்புக் கணக்கு, ஆகிய பல கணக்குகளை வைத்திருப்பதற்கு இச் சட்டத் திருத்தம் வசதி செய்கிறது.

ஆனால் இக்கணக்குகளுக்கு கடன் வசதிகள் அளிக்கப்பட (4ஆம் பக்கம் பார்க்க)

100 கிராம் பாண்

## பேக்கரிகள் தயாரிக்காவிட்டால் மா விநியோகத்தில் வெட்டு

(கொழும்பு)

உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமராச்சி மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து 100 கிராம் பாண் இன்று முதல் கொழும்பில் விற்பனையாகவுள்ளது. 100 கிராம் பாணின் விலை 1 ரூபா 25சதமாகும்.

முதற் கட்ட நடவடிக்கையாக ஒரு லட்சம் பாண் விற்பனைக்கு விடப் படும்.

கொழும்பிலுள்ள பேக்கரிகள் இத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்காமல் பகிஷ்கரித்தால் பற்றிஸ், கட்லட் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு பேக்கரிகளுக்குவழங்கப்படும் மாக்கோட்டா நிறுத்தப்படும் எனஅமைச்சர் பேக்கரி உரிமையாளர்களை எச்சரித்துள்ளார்.

பொரளை விற்பனைத் திணைக்கள சமயற் கூட்டத்திலும் இன்றுமுதல் 100கிராம் பாண் விற்பனை செய்யப் படும்.

## உதவி அரசாங்க அதிபர்களுக்கு

## புலிகளின் உயர் மட்டத்துடன் பேசுகிறார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் பற்றிக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் பற்றி விடுதலைப்புலிகளின் உயர்மட்டத்துடன் நீதிஅமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் பேச்சுவார்த்தை நடத்திவருகிறார் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்றுப் பத்திரிகையாளர் மாநாட்டில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## டில்லி மறுப்பு!

(டில்லி)

பசுபிக் சமுத்திரத் தீவான பிஜியின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடவில்லைஎன புதுடில்லி நேற்று முன்தினம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

1987-ல்இடம்பெற்ற இரண்டு இராணுவச் சதிகளுக்குப்பிறகு பிஜித் தீவில் ஆட்சி செய்யும் இடைக்கால அரசாங்கம், இந்தி தூதரகத்தை 24 மணி நேரத்தில் மூடும்படி உத்தர விட்டிருந்தது.

## மோதலை

மதவாச்சி மாகாணசபை

## உறுப்பினரின் பாதுகாவலர் நால்வர் பொலிசாரால் கைது

(வவுனியா)

வடமேல்மாகாணசபைஉறுப்பினர் நிஸங்கதிஸ நாயகாவின் பாதுகாவலர் நான்கு பேர் மதவாச்சி பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

வேறொரு உறுப்பினரின் பாதுகாவலர்களை தாக்கிய குற்றத்திற்காக இவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)



## அரிசி இறக்குமதி

(கொழும்பு)

ஐம்பதாயிரம் தொன் வெள்ளைப்பச்சை அரிசியையும் ஐம்பதாயிரம் தொன் புளுங்கல் அரிசியையும் உடனடியாக இறக்குமதி செய்வது என்று அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது.

## சேமலாப திட்டத்தில் மாற்றமில்லை!

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியை மாதாந்த ஓய்வூதியமாகக் கொடுக்கும் திட்டத்தை அமுலாக்காமல் நிறுத்திவைக்கத் தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதியை மொத்தமாகக் கொடுக்காமல் மாதாந்தம் ஓய்வூதியமாகக் கொடுக்கும் அரசாங்கத்தின் புதிய திட்டத்தை தொழிற் சங்கங்கள் எதிர்த்ததன் கார (4ஆம் பக்கம் பார்க்க)

## மா விநியோகத்தில் வெட்டு

(கொழும்பு)

உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமராச்சி மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து 100 கிராம் பாண் இன்று முதல் கொழும்பில் விற்பனையாகவுள்ளது. 100 கிராம் பாணின் விலை 1 ரூபா 25சதமாகும்.

முதற் கட்ட நடவடிக்கையாக ஒரு லட்சம் பாண் விற்பனைக்கு விடப் படும்.

கொழும்பிலுள்ள பேக்கரிகள் இத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்காமல் பகிஷ்கரித்தால் பற்றிஸ், கட்லட் போன்றவற்றைத் தயாரிப்பதற்கு பேக்கரிகளுக்குவழங்கப்படும் மாக்கோட்டா நிறுத்தப்படும் எனஅமைச்சர் பேக்கரி உரிமையாளர்களை எச்சரித்துள்ளார்.

பொரளை விற்பனைத் திணைக்கள சமயற் கூட்டத்திலும் இன்றுமுதல் 100கிராம் பாண் விற்பனை செய்யப் படும்.

## உதவி அரசாங்க அதிபர்களுக்கு கூடுதல் அதிகாரம்

(கொழும்பு)

சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் விரைவில் கூடுதலான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படவிருக்கின்றன.

சகல உதவி அரசாங்க அதிபர்களும் புனர் நிர்மாண புனரமைப்பு புனர்வாழ்வு, சமூக நல உதவிப் பணிப்பாளர்களாகவும் கடமையாற்றுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வருட காலமாக நாட்டில் இடம்பெற்ற வன்செயல்கள், இயற்கை அழிவுகள் காரணமாகச் சொத்துக்களுக்கும், உடைமைகளுக்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு, திருமலைக்கு இணைப்பு ரயில் சேவை

(மண்டூர்)

மட்டக்களப்பு, திருக்கோணமலை ரயில் பயணிகளுக்கான புகையிரத இணைப்பு இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கென இரண்டு ரயில் பெட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன.

இதேவேளை மட்டக்களப்பு புகையிரதப் பயணிகளின் வசதி கருதி அடுத்த மாதம் 4ஆம் திகதி முதல் மட்டக்களப்பு புகையிரத நிலையத்தில் படுக்கை, உறங்கல் இருக்கை ஆகியன பதிவு செய்ய புகையிரதப்பகுதி வர்த்தக முகாமையாளரினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப்போது மட்டக்களப்பில் இருந்து கொழும்பு செல்லும்

(4ஆம் பக்கம் பார்க்))

### வாழைச்சேனையில்

## கட்டிடப் பொருள் உற்பத்தித் தொழிற்சாலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கட்டிடப் பொருள் உற்பத்தி தொழிற்சாலை ஒன்று ஜப்பான் அரசின் உதவியுடன் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் கே. பத்மநாதன் தெரிவித்தார்.

ஜப்பான் அரசின் உதவியுடன் இலங்கை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்தே மேற்படி திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

கையில் தெரிவித்தார்.

## டில்லி மறுப்பு!

(டில்லி)

பசுபிக் சமுத்திரத் தீவான பிஜியின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடவில்லைஎன புதுடில்லி நேற்று முன்தினம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

1987-ல்இடம்பெற்ற இரண்டு இராணுவச் சதிகளுக்குப்பிறகு பிஜித் தீவில் ஆட்சி செய்யும் இடைக்கால அரசாங்கம், இந்திய தூதரகத்தை 24 மணி நேரத்தில் மூடும்படி உத்தர விட்டிருந்தது.

## மோதலை விரும்பவில்லை!

(கொழும்பு)

''சகல பிரச்சினைகளுக்கும் நல்லிணக்கம், கலந்தாலோசனை கருத்தொருமைப்பாடு என்பனவற்றின் மூலம் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் விரும்புகிறது'' என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்றுப் பத்திரிகையாளர்மாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்.

அரசாங்கம் மோதல்களைத் தவிர்த்துக் கொள்ள விரும்புவதோடு சகலரையும் நீதியாகவும் நியாயமாகவும் நடத்த விரும்புகிறதென்றும் அமைச்சர் ரஞ்சன் மேலும் சொன்னார்.

## மேயர் மாரடைப்பால் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரசபையின் மேயர் இரா. அம்பலவாணர் (67 வயது) நேற்று நண்பகல் மட்டக்களப்பு பொது மருத்துவமனையில் மாரடைப்பால் காலமானார்.

1977-ல் மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினராக அரசியலில் பிரவேசித்த இவர் 1983-ல் மாநகர சபை தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு மேயராக தெரிவுசெய்யப்பட்டார்.

1983 ஆகஸ்டில் அரசியல் அமைப்புத் திருத்தம் ஆறாவது சரத்தின்படி சத்தியப் பிரமாணம் செய்யாத காரணத்தினால் தனது பதவியை இழந்தார். (37)

சபை பற்றிய மற்றுமொரு கேள்விக்கு அமைச்சர் ரஞ்சன பதிலளிக்கையில் அரசியலமைப்புக்கு மாறாக நடந்தவர்கள் அதன் விளைவை அனுபவித்துத்தானாக வேண்டும் என்று கூறினார்.

அமைச்சர் பெயர் குறிப்பிடாவிட்டாலும் ஈழ சோஷலிசக் குடியரசு பிரகடனத்துக்கு ஒருவருக்கு அவகாசம் கொடுத்து வடக்கு-கிழக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றிய வரதராஜப் பெருமாளையும் அவரது சகாக்களையுமே கூறினாரென் வடக்கு கிழக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடை முறை பின்பற்றப்படுமென்

(4ஆம் பக்கம் பார்க்க)

### மதவாச்சி மாகாணசபை

## உறுப்பினரின் பாதுகாவலர் நால்வர் பொலிசாரால் கைது

(வவுனியா)

வடமேல்மாகாணசபைஉறுப்பினர் நிஸங்கதிஸ நாயகாவின் பாதுகாவலர் நான்குபேர் மதவாச்சி பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

வேறொரு உறுப்பினரின் பாதுகாவலர்களை தாக்கிய குற்றத்திற்காக இவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)



நாவலர் மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை ஐக்கிய அமெரிக்க தகவல் நிலையமும் யாழ். பொதுசன நூலகமும் இணைந்து நடாத்திய புத்தகக் கண்காட்சியை ஆரம்பித்துவைத்து யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஏ. துரைராசா பேசுகிறார். யாழ்.மாநகரசபை ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் அமெரிக்கத் தகவல் நிலையப் பொறுப்பதிகாரி ரொஸ்சுக்கு மலர் மாலை சூட்டி வரவேற்கிறார்.

## நாட்டில் மூன்று விதக் காய்ச்சல்கள்

டெங்கு காய்ச்சல், கொரியன் காய்ச்சல் உட்பட மூன்று விதமான காய்ச்சல் தற்போது நாட்டின் பல பாகங்களிலும் மிகத் தீவிரமாக பரவி வருவதாக பொரளை வைத்திய ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் போக்குவரத்துச் சபை மக்கள் மயப்படுத்தப்படும்

### - மென்டிஸ்

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்து சபையின் டிப்போக்களை மக்கள்மயப்படுத்த அரசாங்கம் முடிவெடுத்துள்ளதாகப் போக்குவரத்து நெடுஞ்சாலை அமைப்பு அமைச்சர் விஜயபால மென்டிஸ் நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மேலும் இந்தத் திட்டம் பற்றி அமைச்சர் விளக்குகையில் ஐம்பது சதவீதமான பங்குகள் உடனடியாக ஊழியர்களின் பெயருக்கு மாற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## காணிப்பங்கீட்டில் இல. தமிழர் தோ. தொழிலாளர் புறக்கணிப்பு

(நுவரெலியா)

அரச காணிப் பங்கீட்டின் போது இப்பகுதியின் தோட்டத் தொழிலாளர்களும், தமிழ்பேசும் மக்களும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

தெல்தெனியாத் தேர்தல் தொகுதியைச் சேர்ந்த மெததும்பர உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள அரச தேயிலைத் தோட்டங்களில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கடவுச் சீட்டு வழங்கலுக்கும் எமக்கும் தொடர்பில்லை

### யாழ்.செயலக அதிகாரி

(யாழ்ப்பாணம்)

யாழ்-செயலகத்தின் மூலம் கடவுச் சீட்டுப் பெறுவதற்கு விண்ணப்பித்தோர் பலமாதங்களாகியும் கிடைக்கப்பெறாது இருப்பின் அவர்கள் தாமாகவே கொழும்பு குடிவரவு குடியகல்வு திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்கும் யாழ்-செயலகத்திற்கும் விண்ணப்பிப்பதை தவிர

(4ஆம் பக்கம் பார்க்க)

திட்டத்தில் மாற்றமில்லை!

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியை மாதாந்த ஒய்வூதியமாகக் கொடுக்கும் திட்டத்தை அமுலாக்காமல் நிறுத்திவைக்கத் தொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதியை மொத்தமாகக் கொடுக்காமல் மாதாந்தம் ஒய்வூதியமாகக் கொடுக்கும் அரசாங்கத்தின் புதிய திட்டத்தை தொழிற் சங்கங்கள் எதிர்த்ததன் கார

(4ஆம் பக்கம் பார்க்க)

## பயிற்சி நெறி வகுப்பு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்று வந்த முறைசாரக் கல்வி படவரைஞர் பயிற்சிநெறி கொட்டடி நமசிவாயம் வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்மாவட்ட முறைசாராப் பிரிவு அறிவித்துள்ளது.

யாழ் இந்துவில் குறிப்பிட்ட பாடத்தில் பயிற்சிபெற்று வந்த மாணவர்களை புதிய பாடசாலையுடன் தொடர்வு கொள்ளுமாறும் இப் பிரிவு அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர் (லோ)

# யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நூற்றாண்டு 1890-1990

**வரிவிளம்பரம்**

தொழிற்கல்வி

Radio Officers (Ship) P.M G Telex Operators International) இரு பாலாரும் Air Conditioning And Refrigeration Electronics (City (and Guilds London) வெளிநாடுகளில் பிரபல்யமானவை சான்றிதழ் வழங்கப்படும் ஆரம்பம் 2- 6- 90 Nesta Technical Institute 59, Station Road, Jaffna.


# சோவியத் - அமெரிக்க அறிவியல்ஆராய்ச்சி நிலையம்

(விளாடிவஸ்தோக்: 21)

ஆர்ட்டிக் பகுதியில் சோவியத்-அமெரிக்க அறிவியல் ஆராய்ச்சி மையம் ஒன்று விரைவில் திறக்கப்படவுள்ளது அமெரிக்காவின் அலாஸ்காப் பல்கலைக்கழகமும், சோவியத் அறிவியல் பேரவையின் தூர கிழக்கு அறிவியல் மையத்தின் உயிரியல் பிரச்சினைகளை ஆய்வு செய்யும் கல்லூரியும் இணைந்து இவ்வாராய்ச்சி மையத்தை நடத்த திட்டமிடப் பட்டுள்ளது.

இவ்வாராய்ச்சி மையம், மண்ணியல், உயிரியல், சுற்றுப்புறச் சூழ்நிலை, சமூகம், பொருளாதாரம் போன்ற பல துறைகளில் ஆய்வுகளை நடத்தும்', என இம் மையத்தின் சோவியத் தரப்பு இயக்குனர் அஸில்பெக்அயதரிலியேவ் கூறினார் ''மேலும் பல பயனுள்ளஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கும், ஓய்வு பெறுவதற்குமான பல வசதிகளை இம்மையம் ஏற்படுத்திக் கொடுக்கும். ஒரு நீச்சல் குளம், விளையாட்டரங்கு, விருந்தினர் விடுதி ஆகியவைகள் கட்டத் தீர்மானிக்கப் பட்டுள்ளது'' என்று அய்தரிலியேவ் மேலும் கூறினார்.

அமெரிக்க தரப்பிலிருந்து அதி நவீன கம்பியூட்டர்களும் அறிவியல் கருவிகளும் அளிக்கப் பட உள்ளன.

இந்த மையத்தில்ஆய்வுசெய்யப்படும் பொருள்கள் இரு நாட்டினருக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# கடிதம் தமிழில் 'வராவிட்டால் திருப்பி அனுப்பவும்

''தமிழில் கடிதங்கள் கிடைக்காது வேறு மொழியில் கடிதங்கள் வந்தால், அவற்றின் புகைப் படப் பிரதியை எடுத்து எமக்கு அனுப்புவதோடு, அக்கடிதத்தை திரும்ப அனுப்பியவர்கட்குபதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு'' இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் தங்களது அலுவலகத் தொடர்புகளைத் தனித் தமிழில் வைத்துக் கொள்ளுமாறும் தமிழ் மொழி அமுலாக்கத்தில் ஆசிரியர்களே முன்னணியில் நிற்க வேண்டுமெனக் கோரியதோடு, எல்லா அலுவலகங்களுடனான தொடர்புக்கும் தமிழ் மொழியினை கட்டாயமாக; பூரணமாக அமுலாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறுகோரிக்கைவிடுத்துள்ளது


## ஆண் உதவித் தாதியர் பயிற்சி நெறி

**TRAINING FOR NURSES - AIDE (MALE)**

ஆண்களுக்கான உதவித் தாதியர் பயிற்சிநெறி **10-06-1990** இல் ஆரம்பமாகவுள்ளன.

பதிவுகளுக்கு

Dr. V. P. சுந்தரராஜன்

**சாயி மெடிக்கல் அக்கடமி**

இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(B.961)



உயர்தர வகுப்பு

மாணவருக்கு நல்வாய்ப்பு!

**சத்தீஸ் மாஸ்ரரின்**

**A/L** இரசாயனம்

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில்

'ஈழநாதம்'

பத்திரிகையில் தொடர்ந்து வெளிவரும்

சனிக்கிழமைகளில்

**அசேதன இரசாயனம்**

**S. P. D தொகுப்பு மூலகங்கள்**

ஞாயிறு

**பௌதிக இரசாயனம்**

**வெப்ப இரசாயனம்**

உங்கள் பிரதிக்கு முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.



கொக்குவில் இந்துக்கல்லூரி

## பரிசளிப்பு விழா - 1990

காலம்: 29. 05.90 செவ்வாய்க்கிழமைபி.ப. 2 மணி

இடம்: கல்லூரி மண்டபம்

பிரதம விருந்தினர்: திரு. கே. சுப்பிரமணியம் அவர்கள் (பொறியியலாளர்)

பரிசு வழங்குபவர்: திருமதி. சுகிர்தலக்சுமி சுப்பிரமணியம் (இளைப்பாறிய உப அதிபர் கொ. இ. கல்லூரி)

பழைய மாணவர், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்.

அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள்.

(B/N 1014)



**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
CLINT EASTWOOD IN HEART BREAK RIDGE
வெகுவிரையில்
ராஜா சின்ன ரோஜா

**வெலிங்டன் (யாழ்)**
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 7.00, 9.30
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
ஜெய்சங்கர் K.R. விஜயா
அசோகன் நாகேஸ்
V. K. ராமசாமி
தேங்காய் சீனிவாசன்
சுருளிராஜன்
நடித்த
திருடி
B 878

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

**ராஜா (யாழ்)**
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·00, 2·00, 4·45,
7·00, 9·45
Terence Hill Bud Spencer
I AM FOR THE HIPPOPOTAMUS

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.30
7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
7-30 9-00
UNMASKING THE IDOL
(Color)

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-30
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, ரேவதி, சுரேஷ், மனோரமா, ஜெய்சங்கர், வை.ஜி. மகேந்திரன்
நடித்த
மருமகள்
அடுத்த வெளியீடு
மாவீரன்
(புதிய பிரதி)

**ஶ்ரீதர் - (யாழ்.)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விசேஷ விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
10.30, 2.30, 6.30, 9.30
ரஜனி, ராதிகா, ரகுவரன்
நடித்த
ஊர்க்காவலன்
50-வது நாளை நோக்கி
B/69


# தொழிலாளர்கள் இருபிரிவு


இதுவரை காலமும் ஒரே அமைப்பாக இயங்கி வந்த முந்திரிகை தோட்டத் தொழிலாளர்கள் தற்பொழுது இருபிரிவுகளாக இயங்கி வருகின்றார்கள்.

தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்த பிளவை தமக்குசாதகமாக்கிக்கொண்ட தோட்டச் சொந்தக் காரர்கள் பல கெடு பிடிகளை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகின்றது.

சம்பள உயர்வு, காலை, மதிய உணவுகளிலேயே இந்த கெடுபிடிகள் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.


உங்கள் வீட்டு நிர்மாண வேலைகளுக்கு

எங்கள் ஆலோசனைகள்



இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்:
(B.961)



கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்.

அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள்.

(B/N 1014)


ளர்கள் தற்பொழுது இருபிரிவுகளாக இயங்கி வருகின்றார்கள்.

தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்த பிளவை தமக்குசாதகமாக்கிக்கொண்ட


கின்றது.

சம்பள உயர்வு, காலை, மதிய உணவுகளிலேயே இந்த கெடுபிடிகள் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.


உங்கள் வீட்டு நிர்மாண வேலைகளுக்கு

# எங்கள் ஆலோசனைகள்....

அங்கீகாரம் பெற்ற கட்டிட படவரைஞர்
கட்டிட ஆலோசகர்
கட்டிட ஒப்பந்தக்காரர்
கட்டிட பொருள் விற்பனையாளர்



**இவற்றுடன்**

**கொங்கிறீற் கற்கள், பூஞ்சாடிகள், கிறில் கற்கள்,**
**மணல், சல்லி, பூச்சுமணல்**

இவை அனைத்தும் மொத்தமாகவும், சில்லறையாவும் கிடைக்கும்.

விபரங்களுக்கு:

REGISTERED TRADE MARK

# Ambal Builders

**(MALAI MAGAL ILLAM)**

No. 20, New Road, Athiyady, JAFFNA.


(B. 947)

# 6-வது திருத்த நீக்கம்-மாகாணசபை கலைப்பு;

# பிரேமாவுக்கு வழி என்ன?

எஸ்.எம்.ஜி

## தென்னிலங்கை அரசியல் ஒரு நோக்கு





பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படுகிறதோ இல்லையோ அவற்றைச் சிறிது காலத்துக்காவது தட்டிக் கழிப்பதற்கு ''ஜனநாயகா'' நாடுகளில் சில வழிகளுண்டு.

ஆணைக்குழு, விசாரணைக்குழு, நீதி விசாரணைக்குழு, சமாதானக்குழு என்று சிலகுழுக்களை அமைப்பது சில வழிகள்

பேச்சுவார்த்தைகள், வட்டமேஜை மாநாடு, சர்வகட்சி மாநாடு என்பன மற்றும் சில வழிகள்.

*1983*-ஆம் ஆண்டில் இலங்கையில் இனக் கலவரம் மிக மோசமாக வெடித்த போது இந்தியப் பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்தி அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவிடன் தொடர்பு கொண்டு இலங்கையில் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இந்தியா உதவி செய்யத் தயாராக இருக்கிறது என்று நேசக்கரம் நீட்டினார். இந்தக் கரத்தைப் பற்றிப் பிடித்தாலும் கஷ்டம், பற்றிக் கொள்ளா விட்டாலும் கஷ்டம் என்பதை நன்குணர்ந்த ஜே.ஆர், உதவியை ஏற்றுக் கொள்ளத் தயார் என்றார்.

ஜி.பார்த்த சாரதி வந்தார்! ஜே. ஆருடனும் மற்றும் அரசியல் தலைவர்களுடனும் பேசினார்.

இந்திரா தன்னை மிரட்டிக் காரியம் சாதிக்கப் பார்க்கிறார் என்பதைப் புரிந்து கொண்டே ஜே.ஆர் சர்வகட்சி மாநாடு கூட்டி இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணப் போவதாகத் தெரிவித்து மாநாடு கூட்டினார் பின்னர் இதை வட்ட மேஜை மாநாடாக மாற்றிபுத்தபிக்குகளையும் அழைத்து உரை நிகழ்த்த வைத்துஒரு வருடகாலத்தைக் கடத்தினார் ''இதற்குள் இந்திராகாந்தியும் கொல்லப்பட்டார். பின்னர் இந்தியாவில் ஆட்சிக்குவந்த பொடிப்பயல் ராஜீவ்காந்தியை தன்னிஷ்டம் போல் செயல்பட வைத்தார்.

ஒப்பந்தம் ஒன்றில் ராஜீவ் காந்தியும்ஜே.ஆரும் கைச்சாத்திட்டனர். அமைதிப் படை என்றபெயரில்இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தது. இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்குப் பதிலாக பிரச்சினை திசை திருப்பப்பட்டது.

ஜே.ஆர். பதவி விலகினார். பிரேமதாசா இலங்கையின் புதிய ஜனாதிபதியானார்.

விடுதலைப்புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு வருமாறுபிரேமதாசா அழைத்தார். காட்டுக்குள் சென்றாவது புலிகளைச் சந்தித்துப் பேசத் தயாராக இருக்கிறேன் என்று பிரேமதாசா தமது உறுதியை வெளியிட்டார்,

இந்தியப்படை இலங்கைக்கு வந்த இரண்டாவது வருடப் பூர்த்தி தினமான 1989- ஆம் ஆண்டு ஜூலைமாதம் 29 ஆம் தேதிக்குமுன் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்று பிரேமதாசா அறிவித்தார்.

இந்தியப்படையை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கு அதனுடன் போரிட்டுக் கொண்டிருந்த விடுதலைப்புலிகள் பிரேமதாசாநீட்டியநேசக் கரத்தை பற்றிக் கொண்டு இந்தியப் படையை வெளியேற்றும் முயற்சியில் ஒருமித்த குரல் கொடுத்தனர்.

எந்த ஸ்ரீலங்கா அரசுக்கெதிராக விடுதலைப் புலிகள் போராடிக் கொண்டிருந்தார்களோ அந்த ஸ்ரீலங்கா அரசுடனேயேநட்புறவுடன் பேச்சு நடத்தத் தொடங்கியதும் நடுவராக வந்து எதிரி பக்கம்சார்ந்து நின்ற இந்தியா நிலை குலைந்தது.

டில்லியும் இந்தியப் படையுடன் அதன் பாதுகாப்பில்மீண்டும் இங்கு வந்த குழுக்களும் இந்தியப் படை விலகல்களுக்குச் சாக்குப்போக்குச்சொல்லியும், கட்டாய ஆர்ப்பாட்டங்களை நடத்தியும் பார்த்தார்கள்.

டில்லியில் ஆட்சி மாறியது வி.பி.சிங். தலைமையில் ஜனதா ஆட்சி வந்தது. விடுதலைப் புலிகளின் சடும் தாக்குதலாலும் இலங்கை ஜனாதிபதி பிரேமதாசாவின்வற்புறுத்தலாலும் இந்தியப் படையை திருப்பி அழைக்க டில்லி முடிவு செய்ய வேண்டியதாயிற்று.

இந்தியப் படையுடன் இங்கு வந்த குழுக்களும் இந்தியப் படை திரும்பு முன்னரே இந்தியாவுக்குத் தப்பியோடிச் சென்றன.

ராஜீவ் ஜே.ஆர். ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கும் இந்திய இராணுவம் இலங்கைக்குள் வருவதற்கும் மூல காரணமாக இருந்த இந்திய மத்திய புலனாய்வுத்துறையின் பகுப்பாய்வுப் பிரிவான றோவும டில்லி வெளிவிவகார அமைச்சு அதிகார வர்க்கமும் இந்தியப் படைக்கு ஏற்பட்ட தோல்வியையும் அது திருப்பி அழைக்கப்பட்டதும் ஜீரணிக்கக் கூடியதாக இருக்கவில்லை. அடிபட்ட பாம்பாக அவை இருக்கின்றன.

ராஜீவ்-ஜே.ஆர்.கைச் சாத்திட்ட ஒப்பந்தத்தினால் உருவாக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணசபை அமைப்பு சம்பந்தமான ஷரத்து டில்லி அதிகார வர்க்கத்துக்கும் றோவுக்கும் நல்ல துரும்பாக இருக்கிறது. இலங்கை அரசியலமைப்புக்கும் இந்திய அரசியலமைப்புக்கும் கட்டுப்படாத முறையில் இந்த மாகாண சபை ஷரத்து உருவாக்கப்பட்டிருக்கிறது. வடக்கு கிழக்கு மாகாணசபையைக் கலைக்கவும் முடியாது தொடர்ந்து மூன்று மாதங்கள் சபை கூடாவிட்டாலும் சபை தானாகவும் கலைய முடியாது. முதலமைச்சர் மட்டுமே சபையைக் கலைக்க முடியுமாம். ஆனால் வடக்கு கிழக்கு மாகாண சபை முதல்வர் வரதராஜப்பெருமாள் இப்போது இருக்குமிடம் றோவுக்கும் டில்லி அதிகார வர்க்கத்துக்கும் தான் தெரிந்திருக்க முடியும்.

இது ஒருபுறமிருக்க பிரேமதாசா நீட்டிய நேசக்கரத்தைப் பற்றிப்பேச்சுவார்த்தை நடத்திய விடுதலைப் புலிகள் தமது முதற்கட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டனர்.

இந்தியப் படை இலங்கையிலிருந்து முற்றாக வெளியேற்றப்பட்டு விட்டது.

இரண்டாவது கட்டம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்குத் தடையாக இருக்கும் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதும் வடக்கு, கிழக்கு மாகாண சபையைக் கலைத்துப் புதிய தேர்தல் நடத்தச் செய்வதுமாகும்.

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்குப் பாராளுமன்றத்தில் அரசாங்கமே பிரேரணை கொண்டு வந்தால் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சியினர் பிரேரணையை எதிர்த்தே வாக்களிப்பார்கள். இதனால் அரசாங்கம் இதைக் கடத்தி வருகின்றது. ஆளும் கட்சிக்குள்ளும் இந்தப் பிரேரணையினால் பிளவு ஏற்படலாம் என்ற அச்சமும் அரசுக்கு இருக்கலாம். காலம் கடத்தினால்பிரச்சினைதானாகவே தீரும் என்ற பழைய தந்திரமாகவுமிருக்கலாம்.

எதற்கும் நல்லதொரு சந்தர்ப்பத்தை ஈழவர் ஜனநாயக முன்னணி ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்திருக்கிறது.

ஆறாவது திருத்தத்தை நீக்கக் கோரும் பிரேரணையை தனிப்பட்ட அங்கத்தவர் பிரேரணையாக ஈழவர் ஜனநாயக முன்னணி பாராளுமன்றத்தில் கொண்டுவரவிருக்கிறது.

ஆளும் கட்சியின் நிலையும் எதிர்க்கட்சிகளின் நிலையும் அஷ்ரப்பின் நிலைப்பாடும் இதில் தெளிவாகிவிடும்.

விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது டில்லி அதிகார வர்க்கத்துக்கும் றோவுக்கும் விரும்பாத விஷயம். இதை எப்படியாவது குழப்ப வேண்டுமென்பதற்காகவே கலைஞரின் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்ட பத்தொன்பது அம்சக் கோரிக்கையுடன் ஈ. பி. ஆர். எல். எவ் வை இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைக்கு வலிந்தூட்டி அனுப்பியிருக்கின்றன. இன்னும் குழப்பத்தைக் கூட்டுவதற்காக ரெலோவும் அரசுடன் தனியாகப் பேச்சு நடத்தத்தொடங்கியிருக்கிறது

பிரேமதாசா அரசும் நிலைமையைச் சமாளிக்க பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவை ஈ. பி. ஆர்.எல். எவ், ரெலோ குழுக்களுடன் பேச்சு நடத்த ஒதுக்கிவிட்டிருக்கிறது.

நீதி அமைச்சரும் சமாதானக் குழுத் தலைவருமான ஜனாப். ஏ. ஸி. எஸ். ஹமீத் விடுதலைப் புலிகளுடன் மட்டுமே தமது பேச்சுக்களைத் தொடர்ந்துநடத்திவருகிறார்

ஆறாவது திருத்தத்தை நீக்குவதும் வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதும்அரசியலமைப்புக்குட்பட நிறைவேற்ற முடியாவிட்டால் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு ஒரெயொரு வழிதான் உண்டு அதாவது சமாதானத்தை நீடிக்க விரும்பின் அரசியலமைப்பை நிறுத்தி வைத்து, பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு நாட் குறித்து புதிய அரசியலமைப்பைத் தேர்தலின் பின் உருவாக்குவதாக அறிவித்துவிட்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற முறையில் வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைக்க யோசிக்கலாம்!

இலங்கை அரசியலமைப்பில் திருத்தம் செய்வதோ மாற்றம் செய்வதோ என்றால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு வாக்குகளைப் பெற வேண்டும். இல்லையேல் சர்வஜனவாக்கு கணிப்பு நடத்தி மக்கள் சம்மதம் பெற வேண்டும். அரசியலமைப்பும் சிக்கலாக்கியே வைக்கப்பட்டிருக்கிறது.விகிதாசாரப்பிரதிநிதித்துவம் எந்தக்கட்சிக்கும் மூன்றில்இரண்டு பெரும் பான்மைப் பலத்தைக் கொடுக்காது. இதனால் அரசியலமைப்பிலும் சுலபமாகத் திருத்தம் செய்ய முடியாது.

---

# புதிய தென்னாபிரிக்க ஜனாதிபதிக்கு இருந்த பழைய நெருக்கடி நீங்குமா?





கடந்த பெப்பிரவரி மாதம் பதினொராம் திகதி ஆபிரிக்க கறுப்பினத் தலைவர் நெல்சன் மண்டேலா விடுதலையானதைத் தொடர்ந்து தென்னாபிரிக்காவின் அரசியலில் பெரும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கி உள்ளது. தென்னாபிரிக்காவின் வெள்ளையர்கள்- சிறுபான்மையினர்- ஆளும் ஆட்சியின் இன ஒதுக்கல் கொள்கையே பெரும் மாற்றத்திற்குள்ளாகியது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இது தென்னாபிரிக்க அரசின் அடிப்படைக் கொள்கையில் ஏற்பட்ட ஒரு மாற்றமாகும். இதற்கு காரணம் என்ன?

ளின் வெளியுறவு அமைச்சர்களும் சிம்பாப்வேயின் தலைநகரான ஹராரேயில் கூடி பிரிட்டோரியா (தென்னாபிரிக்கா) அரசுக்கெதிராக உலகின் அனைத்து நாடுகளும்

தற்போதைய முக்கிய கனிப்பொருள் தேவையை பூர்த்தி செய்யும் நாடான தென்னாபிரிக்காவுடன் இரகசிய வர்த்தகங்கள் ஏராளமாக செய்து கொண்டுதான் இருந்தது

இன ஒதுக்கலுக்கு ஆதரவு நல்கிவந்தன.

ஆனால் ரேகன் நிர்வாகத்திற்கெதிராகவும் இங்கிலாந்து பிரதமர் தாட்சரின் நிர்வாகத்திற்கெதிராகவும் அங்கங்க

செய்து பல நாடுகளுடனும் முறிந்துவிட்ட பழைய உறவுகளைப் புதுப்பிப்பதில் முன் முயற்சி செய்து வருகிறார். மண்டேலா விடுதலை செய்யப்பட்டதன் முழு நோக்கமுமே இதுவாகத்தான் இருக்க முடியும். தென்னாபிரிக்க அரசுடன் பொருளாதார முதலீடுகள் உட்பட கலை, கலாசாரம் விளையாட்டு என அனைத்துத் தொடர்புகளையும் உலக நாடுகள் முறித்துக்கொண்டன. இவை அனைத்தையும் மீண்டும் ஏற்படுத்திக்கொள்வதில் தற்போது தென்னாபிரிக்க அரசு பெரும் முயற்சி செய்து வருவது வெளிப்படை

உலக அரசியல் நோக்கு

# புதிய தென்னாபிரிக்க ஜனாதிபதிக்கு இருந்த பழைய நெருக்கடி நீங்குமா?

லோகன்

கடந்த பெப்பிரவரி மாதம் பதினொராம் திகதி ஆபிரிக்க கறுப்பினத் தலைவர் நெல்சன் மண்டேலா விடுதலையானதைத் தொடர்ந்து தென்னாபிரிக்காவின் அரசியலில் பெரும் மாற்றங்கள் ஏற்பட தொடங்கி உள்ளது. தென்னாபிரிக்காவின் வெள்ளையர்கள்- சிறுபான்மையினர்- ஆளும் ஆட்சியின் இன ஒதுக்கல் கொள்கையே பெரும் மாற்றத்திற்குள்ளாகியது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இது தென்னாபிரிச்க அரசின் அடிப்படைக் கொள்கையில் ஏற்பட்ட ஒரு மாற்றமாகும். இதற்கு காரணம் என்ன?

## மண்டேலா

பெரும்பான்மை இனமாக கறுப்பின மக்களை கொண்ட இந்நாடு இனவெறிக் கொள்கையால் கறுப்பினத்தவருக்கு ஒரு சட்டம் ஆளும் வெள்ளை இனத்தவருக்கு ஒரு சட்டம் என வேறுபாடுகாட்டியது. இந்த இன வெறிக் கொள்கை ஒரு கறுப்பின மனிதனுக்கு உணவு, உடை, வாழ்விட வசதி என்பன அனைத்திலும் தனது ஆக்கிரமிப்பை செலுத்துவதற்கு வசதி செய்து கொடுத்தது. ஒரு வெள்ளை இனத்துப்பிரஜை செய்யும் கடமைகளில் ஒரு சதவீதம் கூட தென்னாபிரிக்க கறுப்பினத்தவன் செய்வதற்கு உரிமை இல்லை. இந்த நிலையில் அவர்களுடைய போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

தென்னாபிரிக்காவை ஒரு குடியரசு நாடு ஆக மாற்ற வேண்டும் என 1960ஆம் ஆண்டு வெள்ளை இன அரசால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பேரில் ஒரு பொதுசன கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது இவ்வாக்கெடுப்பில் வாக்களிக்க உரிமையுடையோர்கள் வெண்நிறத்தோரே என்று சட்டம் கொண்டுவரப்பட்டது. இதில் குறிப்பிடக் கூடியதாகும். இச்சட்ட மூலத்தை எதிர்த்து பல எதிர் இயக்கங்களை உருவாக்கி அதன் மூலம் தென்னாபிரிக்க அரசுக்கு பெரும் தலையிடியை கொடுப்பதில் முன்னின்றவர் அத்துடன் பல ஆபிரிக்க நாடுகளின் வரவேற்பையும் பெற்றவர். கறுப்பினத்தலைவரான நெல்சன் மண்டேலா ஆவார். கறுப்பின குடிகளுடன் தலைமறைவாக வாழ்ந்த மண்டேலாவைப்பிடித்து தென்னாபிரிக்க பொலிசார் 1964ஆம் ஆண்டு ஆயுட்காலசிறைக்குள் அடைத்தனர் அன்றிலிருந்து உலகில் தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவு



நல்கிவரும் அனைத்து நாடுகளாலும் கறுப்பினத்தலைவரை விடுதலை செய்யுமாறு பல கண்டனங்களும் வேண்டுகோள்களும் விடுவிக்கப்பட்டன. ஆனால் தென்னாபிரிக்க அரசோ இதற்கு என்றும் செவிசாய்த்ததே இல்லை.

## காலம் வந்தது

மண்டேலாவின் விடுதலை குறித்து ஆபிரிக்காவின் கறுப்பின அரசாங்கங்களை அமைத்துள்ள முன்னணி நாடுகள் அவ்வப்போது குரல் எழுப்பின தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் பக்கபலத்துடன் திரட்டப்பட்ட ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (A.N.C) இயக்கம் ஆயுதம் தாங்கி தென்னாபிரிக்க பொலீசார் மீதும் தாக்குதல்கள் மேற்கொண்டு வந்தது, உக்கிரமிக்க வெகுஜன போராட்டம் எந்நேரமும் இனவெறி ஆட்சியைத் தூக்கி எறிவதற்கும் இன ஒதுக்கலை ஒழித்துக்கட்டுவதற்கும் தயாராய் இருந்து தொல்லை கொடுத்தது. இவற்றைவிட அணிசேராநாடுகள் அமையம் உட்பட உலகின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்கும் சர்வதேச ஸ்தாபனங்கள் ஆகியன அடிக்கடி தென்னாபிரிக்க அரசுக்கெதிராக குரலெழுப்பியமை தென்னாபிரிக்க இன விடுதலைப் போராட்டத்தை என்றென்றும் அணையாத சுவாலையாக சர்வதேச மட்டத்தில் பாதுகாத்து வைத்திருந்தன.

இவற்றுடன் 1986ஆம் ஆண்டு ஆபிரிக்க முன்னணி நாடுகளான மொசாம்பிக், அங்கோலா, தன்சானியா, சிம்பாப்வே, சாம்பியா, பொட்சுவானா ஆகிய ஆறுநாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் சிம்பாப்வேயின் தலைநகரான ஹராரேயில் கூடி பிரிட்டோரியா (தென்னாபிரிக்கா) அரசுக்கெதிராக உலகின் அனைத்து நாடுகளும் பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என வலியுறுத்தின. இத் தீர்மானம் இந்தியா போன்ற சில அணிசேரா நாடுகளால் முன்னின்று வரவேற்கப்பட்டன. ஏனைய சில நாடுகள் தமது உள்நாட்டு குழப்பங்களை மறைத்துக் கொள்வதற்கும் வெளிநாட்டிற்கு தம்மை காட்டிக் கொள்ளவுமாக இத்தீர்மானத்தை வரவேற்றன.

இதனால் பிரிட்டோரியா அரசுக்கு ஆதரவாக இருந்த பல வெளிநாட்டு வங்கிகள் அதற்கு கடன் வசதிகளை செய்து கொடுக்கத் தவறின. ஆரம்பத்தில் ஆசிய ஆபிரிக்க நாடுகள் மட்டும் தென்னாபிரிக்காவுக்கு எதிராக பொருளாதார தடைகளைவெளிப்படையாக செய்துவந்தன ஆனால் காலப் போக்கில் அமெரிக்க ரேகன் அரசுக்குக் கூட வெளிப் பூச்சுக்காகவேனும் பொருளாதாரத் தடைகளை விதிப்பதாக அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தென்னாபிரிக்காவுக்கான பொருளாதார தடை விதிக்கப்படவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையில் கூட தீர்மானம் கொண்டு வரப்பட்டு விட்டபோதிலும் அதற்கு சாக்குப் போக்கு கூறிவந்த அமெரிக்க ரேகன் அரசு அதற்கு முறையான உள்நாட்டு ஆட்சியில் காங்கிரஸ் சபையில் எதிர்த்தரப்பினரால் பலத்த நெருக்குதல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு உள்ளாக வேண்டியதை அடுத்து தென்னாபிரிக்க அரசு மீது மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார தடைகளை விதிப்பதாக அறிவித்தது. இருந்தும் அமெரிக்காவின் தற்போதைய முக்கிய கனிப்பொருள் தேவையை பூர்த்தி செய்யும் நாடான தென்னாபிரிக்காவுடன் இரகசிய வர்த்தகங்கள் ஏராளமாக செய்து கொண்டுதான் இருந்தது இதேபோல இங்கிலாந்து தென்னாபிரிக்காவுடன் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. இங்கிலாந்து, ஐரோப்பிய சமூக நாடுகள் தென்னாபிரிக்காவுக்கு எதிராக தீர்மானங்கள் எடுப்பதையே தடுத்து வந்தது இதனால் தென்னாபிரிக்காவுக்கு இங்கிலாந்தும் அமெரிக்காவும் பக்கபலமாக இருந்ததானது தென்னாபிரிக்கா தனது இன ஒதுக்கல் கொள்கையை கைவிடாதிருப்பதற்கு வழிவகுத்தது.

இவ்வாறு இங்கிலாந்தும் அமெரிக்காவும் இன ஒதுக்கலுக்கு உறுதுணையாக நின்றதற்கு முக்கிய காரணம் தென் ஆபிரிக்காவிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த தங்கம், யுரேனியம், பிளாட்டினம் போன்ற முக்கிய மூலப் பொருள்களாகும் இவை மூன்றும் இராணுவ தளபாட உற்பத்திக்கு மிக முக்கியத்துவமான கனிப்பொருள்களாக இருந்தன. இரண்டாவது காரணம் வெள்ளை சிறுபான்மை இனத்தின் ஆட்சியிலிருந்த தற்போதய சிம்பாப்வே (பழைய ரொடீசியா) பெரும்பான்மையின கறுப்பர்களின் கைக்குமாறியமையால் ரொடீசியாவுடன் செய்து கொண்ட பல வியாபாரங்கள் புதிதாக உருவான சிம்பாப்வேயுடன் செய்து கொள்ள முடியாது போனது. இதே பிரச்சனை எதிர்காலத்தில் தென்னாபிரிக்காவிலும் ஏற்படலாம் என நினைத்து இவ்விரு நாடுகளும் இன ஒதுக்கலுக்கு ஆதரவு நல்கிவந்தன.

ஆனால் ரேகன் நிர்வாகத்திற்கெதிராகவும் இங்கிலாந்து பிரதமர் தாட்சரின் நிர்வாகத்திற்கெதிராகவும் அந்தந்த நாட்டு மக்கள் நெல்சன் மண்டேலா விடுவிக்கப்பட வேண்டும். இனவெறிக் கொள்கை அகற்றபபடவேண்டும் என கோரி பெரும் ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால் சர்வதேச மட்டத்தில் இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிர்ப்புகள் கிளர்த்தெழுந்த அதே வேளை உள்நாட்டிலும் தென்னாபிரிக்க ஜனாதிபதி பீட்டர் வில்கின்சன் போத்தாவுக்கெதிராக இயக்கங்கள் பல உருவாகி போராட்டங்கள் பல ஆரம்பமாகின. இதனால் நாட்டில் அவசரகால சட்டத்தைப் பிரகடனப்படுத்தினார். முப்பதினாயிரம் ஆர்ப்பாட்டகாரர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இனவெறிக் கொள்கைக்கு எதிராக பல சுரங்க தொழிளாளர்கள், தொழிற்சாலை வேலையாட்கள் ஆகியோரின் தொழிற்சங்கங்கள் நாடுதழுவிய போராட்டங்களில் ஈடுபட்டன.

இதனைத் தொடர்ந்து அதிபர் பீ. டபிள்யூ. போத்தாவின் தளர்வுப் போக்குகள் தென்படலாயின. இதனைத் தொடர்ந்து மண்டேலாவைத் தவிர்ந்த ஏனைய சில இரண்டாம் மட்டத் தலைவர்களை விடுவிப்பதாக அறிவித்தார். கறுப்பின மக்களுக்கு வாக்குரிமைவழங்குவது பற்றிஆலோசனைகள் பல செய்து வந்தார் ஆனால் அனைத்துத் தரப்பினாலும் இன வேற்றுமைக் கொள்கையை அகற்றக்கோரி நடந்த மிக உக்கிரமான போராட்டத்தின் விளைவாக போத்தா அவர்கள் தமது பதவியையே ராஜினாமாச்செய்ய வேண்டியநிலைக்குள்ளானார்.



புதிய இடைக் காலத் தலைவர் எவ். டபிள்யு. டி. கிளார்க் தாம் பதவியேற்றபோதே தமது மிதமான போக்கைக் காட்டிவந்தார். இருபத்தேழு வருடங்களாகச்சிறையில்வாடிவரும் நெல்சன்மண்டேலாவை விடுதலை செய்வது பற்றி அறிவித்தார். ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் உட்பட பலமுக்கிய தொழிற் சங்கங்களின் தலைவர்களும் விடுவிக்கப்பட்டனர் தொடர்ந்து இவ்வருடம் பெப்ரவரி மாதம் இரண்டாம்திகதி 1964 ஆம் ஆண்டு கம்பிகளுக்குப் பின்னால் தள்ளப்பட்ட தலைவர் மீண்டும் வெளியுலகில் சஞ்சரிக்க விடப்பட்டார்.

மண்டேலாவின் விடுதலையைத் தொடர்ந்து தென்னாபிரிக்க அரசின் இன ஒதுக்கல் கொள்கையின் முடிவின் ஆரம்பம் மக்கள் மனங்களில் உதயமாயின. தொடர்ந்து தென் ஆபிரிக்காவிலிருந்து இனஒதுக்கல் கொள்கை படிப்படியாக எடுக்கப்பட்டது. கடற்கரைகளில் இரு இனத்தவருக்கும் ஒரே இடங்களில் குளிப்பதற்கு வசதி செய்யப்பட்டது. வைத்தியசாலைகளுக்கு இரு இனத்தவரும் அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு பாடசாலை, திரையரங்கு, விளையாட்டு மைதானம் என அனைத்தும் எல்லா இனத்தவரும் ஒரே வேளையில் அனுபவிக்கக்கூடிய வகையில் மாற்றப்பட்டது.

## விடுதலையின் பின்

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன்மண்டேலா விடுதலையானதைத் தொடர்ந்து தமக்குச் சர்வதேசரீதியில் இருந்த சில அழுத்தங்கள் குறையும் என எதிர்பார்த்து தென்னாபிரிக்க அரசுத் தலைவர் டி. கிளார்க் தமது செயற்பாடுகளை மாற்றலானார். இதன் முதற்கட்டமாக சர்வதேச நாடுகளுக்கு விஜயம் செய்து பல நாடுகளுடனும் முறிந்துவிட்ட பழைய உறவுகளைப் புதுப்பிப்பதில் முன் முயற்சி செய்து வருகிறார். மண்டேலா விடுதலை செய்யப்பட்டதன் முழுநோக்கமுமே இதுவாகத்தான் இருக்க முடியும். தென்னாபிரிக்க அரசுடன் பொருளாதார முதலீடுகள் உட்பட கலை, கலாசாரம் விளையாட்டு என அனைத்துத் தொடர்புகளையும் உலக நாடுகள் முறித்துக்கொண்டன. இவை அனைத்தையும் மீண்டும் ஏற்படுத்திக்கொள்வதில் தற்போது தென்னாபிரிக்க அரசு பெரும் முயற்சி செய்து வருவது வெளிப்படையாகி உள்ளது. தற்போது டி. கிளாக் அவர்கள் ஒன்பது ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்து தென்னாபிரிக்காவுடன் செய்துகொள்ள வேண்டிய பொருளாதார, சமூக உறவுகள் பற்றிப்பேசி வருவது இதற்குச் சான்றாக உள்ளது. இதே வேளை விடுதலையான நெல்சன் மண்டேலா அவர்கள் தொடர்ந்து உலகநாடுகள் அனைத்தும் ஒருவருக்கு ஒருவாக்கு என சகல இனத்தவருக்கும் வாக்குரிமை வரும்வரை தென்னாபிரிக்காவின் மீது எந்த ஒரு நாடும் தமது தடைகளைத் தளர்த்திக் கொள்ளக்கூடாது என தமது விடுதலையின் பின் அறிவித்திருப்பதும் நிறவேற்றுமைக்கெதிரான ஆயுதப் போராட்டம் மேலும் தீவிரமாக்கப்பட வேண்டும் என அறிவித்திருப்பதும் விடுதலையான மூன்று மாதங்களுக்குள் ஆபிரிக்கக்கண்ட நாடுகளில் இருந்து அமெரிக்கா, இங்கிலாந்து என அனைத்து நாடுகளுக்கும் புறப்பட்டு தமது வேண்டுகோள்களை தெரிவிப்பதும் தென்னாபிரிக்க அரசு ஆபிரிக்க தேசிய காங்கிரசுடன் தற்போது நண்பர்களைத் தேடிக்கொள்ளும் போட்டியில் இறங்கி உள்ளது என்பது வெளிப்படையாக தெரிகிறது. மண்டேலா அவர்கள் உத்தியோகபூர்வமாக நாட் குறித்து விஜயம் செய்யும் நாடுகளுக்கெல்லாம் அவருக்கு முன்னதாக டி. கிளார்க் அவர்கள் உத்தியோகப்பற்றற்ற முறையில் விஜயம் செய்து வருகிறார். இதனால் மண்டேலாவின் பிரச்சாரங்களை முறியடிக்க முடியுமென தென்னாபிரிக்காவால் தற்போது தந்திரோபாயம் வகுக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா இங்கிலாந்து போன்ற நாடுகள் தொடர்ந்தும் தென்னாபிரிக்க அரசுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. இந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper at the G. P. O

ஈழநாதம்

தலை...

பரந்தன் இர... கூட்டுத்தாபன தலைவர்திரு உபாலி தசில்வா எதிர்வரும் 3ம் திகதி தொழிற்சாலைக்கு விஜயம் செய்கிறார். தொழிற்சாலை புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்து வருவதால் இறுதிக்கட்ட வேலைகளை நேரடி மேற்பார்வை செய்வதற்காக ஒரு சில நாட்கள் தங்கி நிற்பார். (37)

# "புலிகளால் தமிழ் நாட்டில் குழப்பம்; தி.மு.க.அரசைக் கலைக்கவேண்டும்"

## லோக்சபாவில் தமிழ்நாடு காங்கிரஸ் கோரிக்கை

(புதுடில்லி)

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் சில நடவடிச்கையில் ஈடுபடுவதாக வெளியான தகவல்கள் குறித்து இந்திய லோக்சபையில் உறுப்பினர்கள் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளால் உருவாகியுள்ள நிலைமை குறித்து சபையில் நடந்த சிறப்பு விவாதத்தில் அவர்கள் பேசினார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சில நடவடிக்கைகளால் தமிழ் நாட்டில் நெருக்கடி நிலை ஏற்பட்டு வருவதாக சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

சிறப்பு விவாதத்தை தமிழ் நாட்டைச் சேர்ந்த இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் ரங்கராஜன் குமார மங்கலம் தொடக்கினார். தி.மு.க. அரசு தொடர்ந்து பதவி வகிக்குமானால் தமிழ் நாட்டிலும் பஞ்சாப்போன்ற நிலைமை உருவாகி விடும் என்றும் கூறினர்.

இதனால் மாநிலத்தில் ஆளுனர் ஆட்சியை அமுல் செய்ய வேண்டுமென்றும் ரங்கராஜன் கோரினார்.

தமிழீழ விடுலைப் புலிகளின் சட்ட விரோத பிரிவினைவாத நடவடிக்கைகளை தி.மு.க. அரசு ஊக்குவிக்கின்றது என்றும் அவர் குற்றம் சாட்டினார். திராவிடக் கழகம் என்ற கழகத்திற்கு தி.மு.க. அரசு ஆதரவு அளிக்கின்றது என்றும் அவர் புகார் கூறினார்.

இதற்கு முன்னர் இந்திரா காங்கிரஸ் அரசும் எம். ஜி. இராமச்சந்திரன் தலைமையிலான அ இ அ. தி. மு க. அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களும் இதர உதவிகளும் அளிக்க உதவின என்று பாரத ஜனதாக்கட்சி உறுப்பினர் யத்வின் சிங் சுட்டிக் காட்டினார்.

இந்திய அரசின் "றோ" என்ற உளவுப் பிரிவிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமுள்ள தொடர்பானது தேசிய நலனுச்கு எதிராகச் செயற்பட்டது என்றும் யத்வின்சிங் குறிப்பிட்டார். தங்களுக்குள் சண்டையிடும் தமிழ்ப்போராளி குழுக்களை ஒற்றுமைப் படுத்த தமிழக அரசு தமது செல்வாக்கைப் பயன் படுத்த வேண்டுமென்றும், மத்திய அரசு கேட்டுக் கொள்ள வேண்டுமென்று மார்ஸ்சிக் கட்சி உறுப்பினர் திருமதி பாகினி அலி தெரித்தார்.

தமிழர்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்கும் வடகிழக்கு மாகாணக் கவுஸ்சில்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கவும் தனக்குள்ள பொறுப்பை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டுமென்று இந்திய அரசு கேட்டுக் கொள்ள வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தமிழக அரசு உடந்தையாக இருந்து செயற்படுகிறதென்றும் கூறப்படும் புகார்களை பவானி சங்கர் கோடா (ஜனதாதளம்) மறுத்தார்.




பரந்தன் உற்பத்திகளைத் தொடங்கியதும்

## குளோரின் இறக்குமதி உடனடியாக நிறுத்தப்படும்

(மட்டக்களப்பு)

பரந்தன் இரசாயன தொழிற்சாலை இயங்கத் தொடங்கியதும் குளோரின் இறக்குமதி உடனடியாக நிறுத்தப்படும். தற்போது மாதாந்தம் 12 மெற்றிக் தொன் குளோரின் இறக்குமதி செய்யப்படுகிறது.

இத்தகவலை பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன தலைவர் உபாலி தசில்வா மட்டக்களப்பில் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தொழிற்சாலை செயல்படத் தொடங்கியவுடன் தினசரி 5 மெற்றிக் தொன் குளோரின் உற்பத்தி செய்யப்படும்.

மாதாந்தம் 13 சிலிண்டர்களில் 12 மெற்றிக் தொன் குளோரின் இறக்குமதி செய்யப்படுகிறது

தொழிற்சாலை புனரமைப்புக்கு இதுவரை 50 லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 50 லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக உடனடியாக குளோரின் உற்பத்தி ஆரம்பிக்கப்படுவதால் ஜூலை முதல் இறக்குமதி நிறுத்தப்படும். பின்பு கோஸ்ரிக் சோடா (Caustic Soda) உற்பத்தி ஆரம்பிக்கப்படும். 25 சத வீதம்தான் உற்பத்தி செய்யப்படும். 75 சத வீதம் தொடர்ந்து இறக்குமதியாகும்.

தொழிற்சாலைக்கு 786 ஊழியர்கள் தேவை. 306 பேர்தான் உள்ளனர். தொழிற்சாலை செயல்படத் தொடங்கியவுடன் புதிய ஊழியர் நியமனம் இடம்பெறும் என்றார், (37)

கட்டிடப்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலநடை

வளர்ச்சுல்)

இலங்கை வங்கி

## ஸ்ரான்லிவீதிக் கிளையில் நாளை நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையில் நாளை காலை 9 மணிமுதல் நண்பகல் ஒரு ரூபாய் பணத்தினை அரியாலை கிழக்கு, கோண்டாவில் கிழக்கு, திருநெல்வேலி மேற்கு, நல்லூர் வடக்கு,

### கடவுச்சீட்டு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேறு எதுவிததொடர்புகளும் இல்லை என அதிகாரிகள் கூறுகின்றனர்.

இருந்தும் பலர் தமக்கு கடவுச் சீட்டுகள் கிடைக்கவில்லை என முறையிட்டதைத் தொடர்ந்து தாம் கொழும்பு அதிகாரிகளுக்கு கடிதம் ஒன்று எழுதி வேலைகளை விரைவுபடுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர் தற்போது நானூறுக்கும் மேற்பட்ட கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளது ஆனால் அவற்றில் எத்தனை விண்ணப்பங்களுக்கு பதிலோ அல்லது கடவுச்சீட்டுகளோ கிடைத்தது என்ற விபரம் இன்னும் தெரியவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

### வட - கிழக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும் அமைச்சர் ரஞ்சன் மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் சொன்னார்.

மலையகத் தமிழர் குடியேற்றம்

மலையகத் தோட்டத் தமிழர்களை வடக்குக் கிழக்கு

### இலங்கைப்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றப்படும் என்றார். எஞ்சிய ஐம்பது சதவீத பங்குகளும் மூன்று தொடக்கம் ஐந்து வருடங்களுக்குள் படிப்படியாக ஊழியர்களுக்கு வழங்கப்படும் இதன்பின்னர் பிரயாணிகளுக்கான போக்குவரத்துச் சேவைகள் ஊழியர்களின் உடைமையாகிவிடும். அவர்களே அதனை நிர்வகிப்பார்கள். அடுத்தமாதம் முதலாம் திகதிதொடக்கம் இந்தத் திட்டம் படிப்படியாக அமுலாக்கப்படும்.

இந்த மக்கள் மயப்படுத்தும் திட்டத்தில் சேர்ந்து கொள்ள விரும்பாத ஊழியர்கள் சுய விருப்பத்தின் பேரில் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ள முடியும். அவர்களுக்கு ஓய்வு பெறுவதற்கான நஷ்டஈடு, சேமலாபநிதிக் கொடுப்பனவுகளும் சேவைப்பணிப் பொருட்களும் வழங்கப்படும்.

பிரயாணிகளுக்கான போக்குவரத்துச் சேவையின் முகாமைத்துவம் செயற்பாடு ஆகியவற்றில் அரசாங்கம் சம்பந்தப்படமாட்டாது. சிறந்த போக்குவரத்துச் சேவையை உறுதிப்படுத்தும் வகையில் தேசிய போக்கு

### ஆபிரிக்கா . . .

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

வழங்கியவர்களாம் இந்த இரு அரசர்களின் ஆதரவில் இரு நாடுகளிலுமுள்ள நிறுவனங்கள் ஆராய்ச்சியை மேற்கொண்டு வருகின்றன.

ஆபிரிக்காக் கண்டத்துக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலான ஜிப்ரோல்டர் நீரிணையின் தூரம் 16 கி. மீ. (10 மைல்) ஆகும். இது 3,200 அடி ஆழமுள்ளது. ஜிப்ரோல்டர் நீரிணையின் ஊடாக ஒரு சுரங்கப் பாதையை அமைப்பதற்கு 500 கோடி டாலர் செலவாகும் என மதிப்பிடப் பட்டுள்ளது. ஒரு பாலத்தை அமைப்பதென்றால் செலவு அதிகமாகும். ஸ்பானிய நிறுவனம் ஒன்று சுரங்கத்தை அமைப்பதற்கு 1000 கோடி டாலர் செலவாகும் என்று மதிப்பிட்டுள்ளதாம்.

### சேமலாப

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணமாகவே தொழில் அமைச்சு இத்திட்டத்தைக் கைவிட்டுள்ளதாம்.

அரசாங்கம்அறிமுகப்படுத்தவிருந்த இத் திட்டத்தினால் ஊழியர் பல நன்மைகளை இழந்து விடுவார்கள் என்று தொழிற்சங்கங்கள் சுட்டிக்

சாயன கூட்டுத்தாபன தலைவர் உபாலி த சில்வா மட்டக்களப்பில் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தொழிற்சாலை செயல்படத் தொடங்கியவுடன் தினசரி 5 மெற்றிக் தொன் குளோரின் உற்பத்தி செய்யப்படும்.

மாதாந்தம் 13 சிலிண்டர்களில் 12 மெற்றிக் தொன் குளோரின் இறக்குமதி செய்யப்படுகிறது

ஜூலை முதல் இறக்குமதி நிறுத்தப்படும். பின்பு கோஸ்ரிக் சோடா (Caustic Soda) உற்பத்தி ஆரம்பிக்கப்படும். 25 சத வீதம்தான் உற்பத்தி செய்யப்படும். 75 சத வீதம் தொடர்ந்து இறக்குமதியாகும்.

தொழிற்சாலைக்கு 786 ஊழியர்கள் தேவை. 306 பேர் தான் உள்ளனர். தொழிற்சாலை செயல்படத் தொடங்கியவுடன் புதிய ஊழியர் நியமனம் இடம்பெறும் என்றார், (37)

அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களும் இதர உதவிகளும் அளிக்க உதவின என்று பாரத ஜனதாக்கட்சி உறுப்பினர் யத்வின் சிங் சுட்டிக் காட்டினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தமிழக அரசு உடந்தையாக இருந்து செயற்படுகிறதென்றும் கூறப்படும் புகார்களை பவானி சங்கர் கோடா (ஜனதா தளம்) மறுத்தார்.

பப்பட்டுள்ளது ஆனால் அவற்றில் எத்தனை விண்ணப்பங்களுக்கு பதிலோ அல்லது கடவுச்சீட்டுகளோ கிடைத்தது என்ற விபரம் இன்னும் தெரியவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

தும் திட்டத்தில் சேர்ந்து கொள்ள விரும்பாத ஊழியர்கள் சுய விருப்பத்தின் பேரில் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ள முடியும். அவர்களுக்கு ஓய்வு பெறுவதற்கான நஷ்டஈடு, சேமலாபநிதிக் கொடுப்பனவுகளும் சேவைப்பணிப் பொருட்களும் வழங்கப்படும்.

பிரயாணிகளுக்கான போக்குவரத்துச் சேவையின் முகாமைத்துவம் செயற்பாடு ஆகியவற்றில் அரசாங்கம் சம்பந்தப்படமாட்டாது. சிறந்த போக்குவரத்துச் சேவையை உறுதிப்படுத்தும் வகையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஒன்று நிறுவப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அமைச்சர் விஜயபால மெண்டிஸ் ஊழியர்கள் அளவுக்கு அதிகமாக இருப்பதால் இலங்கை போக்குவரத்துச் சபை நஷ்டத்தில் இயங்குவதற்குப் பிரதான காரணம் என்று சொன்னார். புதிய சட்டத்தின் கீழ் 2000 பஸ்கள் பழுதுபார்க்கப்பட்டதன் பின்னர் சேவையில் ஈடுபடுத்தப்படுமென்றும், மேலும் சிறந்த சேவையை வழங்கும்வகையில் இந்த மேலதிக ஊழியர்களின் சேவை பயன் படுத்தப்படும் என்றும் அமைச்சர் விஜயபால மெண்டிஸ் தெரிவித்தார்.

உலக வங்கி இதற்கென 60 கோடி ரூபாவை வழங்கும் போக்குவரத்துசபை பங்குகள் ஊழியர் பெயருக்கு மாற்றப்பட்டபின்னர்சபைகளின் முன்னைய கடன் மற்றும் கடப்பா

பதற்கு 500 கோடி டொலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு பாலத்தை அமைப்பதென்றால் செலவு அதிகமாகும். ஸ்பானிய நிறுவனம் ஒன்று சுரங்கத்தை அமைப்பதற்கு 1000 கோடி டாலர் செலவாகும் என்று மதிப்பிட்டுள்ளதாம்.

## சேமலாப

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணமாகவே தொழில் அமைச்சு இத்திட்டத்தைக் கைவிட்டுள்ளதாம்.

அரசாங்கம்அறிமுகப்படுத்தவிருந்த இத் திட்டத்தினால் ஊழியர் பல நன்மைகளை இழந்து விடுவார்கள் என்று தொழிற்சங்கங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

## கட்டிடப்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத் தொழிற்சாலைகளில் வீடு கட்டுவதற்குத் தேவையான கதவு, ஜன்னல், செங்கல், ஓடு போன்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன.

மேற்படி திட்டத்தின் கீழ் மாவட்டத்திலுள்ள பத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## புதிய தென்னாபிரிக்க

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தியா போன்ற மூன்றாம் உலகநாடுகளின் ஒத்துழைப்பு என்றென்றும் தேசிய காங்கிரசுக்கு இருக்கும் என்பதும் உறுதியாகக் கூறலாம்

ஆனால் தென்னாபிரிக்க அரசு ஒரு நபருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் வாக்குரிமையைக் கொண்டுவரும் என்பது எதிர்பார்க்க முடியாததாகும். ஏனெனில் சனத்தொகை அடிப்படையில் இத்தகைய வாக்குரிமையால் சிம்பாப்வேயில் நிகழ்ந்த அதே கதிதான் தென்னாபிரிக்க அரசுக்கும் நிகழும் என்பது நிதர்சனமானதாகும்.

எப்படியிருப்பினும் இருபத்தேழு வருடங்களாக சிறையில் இருந்து விடா மன உறுதியைப் பெற்றுவிட்ட நெல்சன் மண்டேலாவின் வெற்றி கவிர்க்க முடியாததாகும். ஏனெனில் உறுதியும் நேர்மையும் மிக்க தலைவர்களால் வழிநடத்தப்படும் எந்த ஒரு போராட்டமும் என்றென்றும் தோல்வி கண்டதில்லை என்பதை நாம் நிதர்சனமாக கண்ட உண்மையாகும். ஆகவே எதிர்காலத்தில் இனவெறி ஆட்சி தூக்கி எறியப்பட்டு ஒரு தென்னாபிரிக்க பல்தேசிய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவது உறுதியாகிவிட்ட உண்மையாகும்.

★

## கால்நடை வளர்த்தல் பயிற்சிவகுப்பு

(கிளிநொச்சி)

கால்நடை வளர்த்தல் சம்பந்தமான 10 நாள் பயிற்சி ஒன்று வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணையில் நடைபெற்றது.

ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த 15 படித்த வேலைவாய்ப்பற்ற இளம் யுவதிகளுக்கே இப் பயிற்சி நடாத்தப்பட்டது.

கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தால் நடாத்தப்பட்ட இப் பயிற்சியில் பங்குபற்றி பயிற்சியை முடித்து கொண்டு வெளியேறிய யுவதிகளுக்கு ஆடுவளர்ப்பு, ஆட்டுத் தொழுவம் அமைத்தல் சம்பந்தமான ஒரு நாள் கருத்தரங்கும் நடாத்தப்பட்டது. (ஏ9)

## மட்டக்களப்பு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரயாணிகள் மேற்படி ஆசனப் பதிவுகளைப் கொழும்பிலேயே செய்ய வேண்டியுள்ளது.

இந்த அவல நிலை குறித்து பல்வேறு தரத்தினராலும் சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்தே இந்த வசதி செய்யப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 4ஆம் திகதி முதல் மட்டக்களப்பில் இருந்து செல்வதற்கான 1ஆம், 2ஆம் வகுப்பு உறங்கல் இருக்கை, படுக்கை வசதிகளை மட்டக்களப்பில் மட்டுமே பதிவு செய்யலாம். கொழும்பில் பதிவு செய்ய முடியாது.

பிரயாணம் செய்யும் தினத்திற்கு 10 தினங்கள் முன்னர் முதல் பதிவுகளைச் செய்ய முடியும் என்று மட்டக்களப்பு புகையிரதப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31- ஆம் இலகத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 25-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது

## இலங்கை வங்கி

# ஸ்ரான்லிவீதிக் கிளையில் நாளை நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையில் நாளை காலை 9 மணிமுதல் நண்பகல் ஒரு மணிவரை மீளக்குடியமர்தல் நிவாரணமும் உற்பத்தித் திறன் வாய்ந்த நன்கொடைப் பணமும் வழங்கப்படவுள்ளன.

மீளக்குடியமர்தல் நிவாரணம் 2ஆம் கட்ட ஆயிரம் ரூபாய் பணத்தினை அரியாலை கிழக்கு, கோண்டாவில் கிழக்கு, திருநெல்வேலி மேற்கு, நல்லூர் வடக்கு, கொக்குவில் மத்தி கந்தர்மடம், கொக்குவில் கிழக்கு, கோண்டாவில் மேற்கு, கொக்குவில் மேற்கு, வண்ணார்பண்ணை வடகிழக்கு, வண்ணார்பண்ணை வடமேற்கு, திருநெல்வேலி கிழக்கு, அரியாலை மத்தி ஆகிய கிராம சேவகர்கள் பிரிவில் வசிப்பவர்கள் பெறவுளளார்கள்.

மீளக்குடியமர்தல் நிவாரணம் இரண்டாயிரம் ரூபாய் பணத்தினை கொழும்புத்துறை, அத்தியடி, சுண்டிக்குழி, குருநகர் மேற்கு, குருநகர் கிழக்கு, யாழ்ப்பாணப் பட்டினம், அரியாலை மேற்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்கிழக்கு, கொக்குவில் மேற்கு ஆகிய கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்கள் பெறவுள்ளன.

உற்பத்தித் திறன்வாய்ந்த நன்கொடைப் பணம் ரூபா நாலாயிரத்தினை வண்-வட மேற்கு, வண்-வட கிழக்கு, கந்தர்மடம், நல்லூர்வடக்கு, நல்லூர் தெற்கு, திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு ஆகிய கிராமசேவகர் பிரிவைச்சேர்ந்த குடும்பங்கள் பெறவுள்ளார்கள்.

## இலங்கையில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டாது. இக் கணக்குகளில் வைக்கப்படும் பணம் வெளிநாட்டுக் கரன்சிகளாகவே இருக்கவேண்டும்.

இச்சட்டத்திருத்தத்தின்படி இக் கணக்குளை வைத்திருப்பவர்களின் பெயர் விபரங்கள் எதுவும் வெளியிடப்படமாட்டா. இரகசியமாகவே வைத்திருக்கப்படும்.

இரகசியமாக வைத்திருக்கப்படும் இக் கணக்குகள் பற்றிய விபரங்களைத் தெரிவிக்கும் எந்த வங்கி அதிகாரியும் தண்டிக்கப்படுவார்.

## கைலஞ்சம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரெலியா மாவட்டத்துக்கு வந்த லஞ்சத் திணைக்கள உத்தியோகத்தர்கள் பதுங்கியிருந்து, நோயாளி, டாக்டரிடம் பணத்தைக் கொடுக்கும் போது டாக்டரைப் பிடித்துள்ளார்கள்.

சந்தேகநபரான அறுவைச் சிகிச்சை நிபுணர் கொழும்பில் நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டு ரூபா 3.000 பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## உதவி அரசாங்க

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட சேதங்கள் சம்பந்தமாக நஷ்டஈடுகோரி போலியான கோரிக்கைகள் அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஒ. எம் என். அதிகாரி இந்நடவடிக்கையை எடுத்துள்ளார் என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## உறுப்பினரின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதையடுத்து மாகாணசபை உறுப்பினர் நிஸங்கதிசநாயகா பொலிஸ் மா அதிபரோடு தொடர்பு கொண்டதன் பின்னர் கைது செய்யப்பட்ட பாதுகாவலர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை. மதவாச்சி மக்களுக்குத் தலைமை தாங்கிய டி வவுனியாவிற்கு சமாதான பாதயாத்திரையை வடமேல் மாகாணசபை உறுப்பினர் நிஸங்க திஸநாயகா மேற்கொண்டது தெரிந்ததே.

## வட - கிழக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றும் அமைச்சர் ரஞ்சன் மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் சொன்னார்.

### மலையகத் தமிழர் குடியேற்றம்

மலையகத் தோட்டத் தமிழர்களை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வந்து குடியேற வேண்டும் என்பது விடுதலைப் புலிகள் கூறியிருக்கிறார்களே இதற்கு அரசாங்கம் சம்மதிக்கிறதா? என்று ஒரு நிருபர் கேட்டபோது அமைச்சர் ரஞ்சன் பதிலளிக்கையில் ''இவர்கள் எங்கு சென்று குடியேற வேண்டுமென்பதை அரசாங்கம்தான் தீர்மானிக்க வேண்டும். வேறெவரும் தீர்மானிப்பதற்கு உரிமை இல்லை'' என்று கூறினார்.

### வேறு குழுக்களும் இருக்கின்றன

மற்றொரு கேள்விக்கு அமைச்சர் ரஞ்சன் பதிலளிக்கையில் வடக்கு-கிழக்கு மாகாணம் சம்பந்தமாக விடுதலைப் புலிகள் தவிர மற்றும் ஏழு குழுக்கள் இருக்கின்றனவென்றும் இந்தக் குழுக்களுடனும் பேச்சு நடத்தவே விரும்புவதாகவும் தெரிவித்தார்.

## காணிப்பங்கீட்டில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள தோட்டத் தொழிலாளர்களும் பகுதியில் உள்ள தமிழ் பேசும் மக்களும் விண்ணப்பித்திருந்தனர்.

என்றாலும் கூட தமிழ் பேசும் விண்ணப்பதாரிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய சிங்கள விண்ணப்பதாரிகள் மட்டும் அழைக்கப்பட்டு கடந்த வாரம் காணியும் பகிர்ந்துஅளிக்கப்பட்டுள்ளது.

எனவே இது இப்பகுதி தமிழ்பேசும் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளதுடன் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைக்கும் மாறுபட்டதாகவே உள்ளது என்றும் தெரிவித்தனர்.

இவருடன் வந்திருந்த பாதுகாவலர்கள்மறுநாள் வேறொரு மாகாணசபை உறுப்பினரின் பாதுகாவலர்கள் 'கிண்டல்' செய்தார்கள் என்றும், இதன் காரணமாகவே தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதென்றும் கூறப்படுகிறது. (தி)

## நாட்டில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பர்மா வியட்நாம் இந்தோனேசியா, தாய் லாந்து, பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளில் பலரை பலியெடுத்த மேற்படி காய்ச்சல்கள் தற்போது இலங்கையிலும் பரவி வருகின்றன.

டுகளை அரசாங்கமே பொறுபேற்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சர் விஜயபால மெண்டிஸ் மேலும் தகவல்தருகையில் அரசாங்கத்தின் தேசியமயப்படுத்தும் நடவடிக்கைகள் தோல்வி அடைந்ததன் காரணமாகவே அரசாங்கம் பஸ் சேவையை மக்கள் மயப்படுத்த முடிவுசெய்தது என்று கூறினார்.


# மரண அறிவித்தல்

**இராஜரட்ணம் அம்பலவாணர் காலமாகிவிட்டார்**

(முன்னாள் மட்டக்களப்பு மேயர்)

அன்னார் ஆனந்தலட்சுமியின் அன்புக் கணவரும் லவக்குமார் (கனடா) உதயக்குமார் (இலங்கை சட்டக் கல்லூரி) ஜோகக்குமார், சிவகுமார், விஜயகுமார், அரவிந்தகுமார் ஆகியோரின் அருமைத் தந்தையும் காலஞ்சென்ற பரமேஸ்வரி பத்மநாதன், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற S. R. தளையசிங்கம் இரத்தினம்மா அவர்களின் அன்பு மருமகனும் அருணகிரிநாதன் (சிரேஷ்ட தொழில் உதவி ஆணையாளர்) காலஞ்சென்ற யோகநாதன் (வழக்கறிஞர்) சண்முகநாதன், இராமநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இல. 21 ஈஸ்வரன் ஒழுங்கை மட்டக்களப்பு இல்லத்திலிருந்து எதிர்வரும் சனிக்கிழமை 26 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு இறுதிக் கிரிகைகளுக்காக ஆலையடிச் சோலை சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்


(R/304) த. சண்முகநாதன்

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி

சுதந்திரமும் உயிரைப்போன்றதே. ஓர் உடலிற்கு உயிரை சிறிது சிறிதாக வழங்க முடியாது. சுவாசத்தை முதலில் வழங்கிவிட்டு உடம்பை வழங்காதிருக்க முடியாது. இருதயத்தை வழங்கி விட்டு குருதிக் குழாய்களை வழங்காமலிருக்க முடியாது. சுதந்திரம் முழுமையான ஒன்று. அதனை முழுமையாகவே பெறவேண்டும். அப்படிப் பெற முடியாதவிடத்து அது சுதந்திரம் அல்ல.

மாட்டின் லூதர் கிங்





## புது மலர்ச்சி

இனங்களும் மதங்களும்
ஜாதி பேதங்களும்
இவர்களின் இதழ் விரிப்பில்
தோற்றுப் போயினவோ?
"நாங்கள் இம்மண்ணின்
இளஞ்சிட்டுக்கள்'' என்ற
இனிய கீதம் தானோ
இவர்களின் இதயங்களில்!
எத்தனை காலங்களின் பின்
இந்த வசந்த காலம்!
பசிக்கு உண்ணவும்
பள்ளிக்குப் போகவும்
வீட்டுச் சிறையுடைத்து
வீதிகளில் சுதந்திரமாய்
நடந்து திரியவும் - சொந்த
மண்ணில் மனம் மகிழ்ந்து
துள்ளி விளையாடவும்
வழியொன்று பிறந்ததென்று
உள்ளம் மலர உலகை மறந்து
உதடுகள் விரித்தனரோ?

— சந்திரா ரவீந்திரன்

ஆகாயத்தைத் தனது பச்சைக் குழைகளால் மூடி அடைக்கமுனைந்து கொண்டிருக்கும் அடர்ந்த காட்டின் நடுவே.... எமது 'பாசறை.... காலைநேரம்...., வழமைபோல் தோழர்கள் யாவரும் தத்தமது வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

எனக்குத் தரப்பட்ட வேலையைச் செய்து முடித்துவிட்டு அதைச் சரிபார்ப்பதற்காக எமது பொறுப்பாளரைச் சென்றடைகிறேன்...... அப்பொழுதுதான் அந்தச்செய்தி என்னிடம் சொல்லப்பட்டது... அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டு பெண்களின் கூடாரத்தை நோக்கி நடக்கிறேன்... என்மூலம் தோழிகள் யாவரும் செய்தியை அறிந்து கொண்டனர். வெகுதூரம்... மிக நீண்ட தூரம் .. நீயுமா

ளில் களைப்படைந்த, சோர்வடைந்த தோழிகள் மத்தியில் ''வியட்னாம் போராளிகளின் வெற்றிக்குக் காரணம் அவர்களின் தன்னம்பிக்கை. நாம் அவர்களையும் விடத் தன்னம்பிக்கை அதிகம் கொண்டவர்கள், இலட்சியதாகமும் உறுதியும் உடையவர்கள் புறப்படுவோம்'' என எம்மை உற்சாகப்படுத்துவாய்.. துன்பத்தை மறந்தோம்... விரைவில் பாசறை சேர்ந்தோம்.



உடலை எதிரி கைப்பற்றி விடக் கூடாது என்ற ஆவேசத்தில் நீயும் உன் தோழிகளும் எவ்வளவோ முயன்றீர்கள். முடியாமற் போனபோது நீ அடைந்த வேதனை...

மரணித்துவிட்ட எம் தோழர்களின் தியாகங்களை நினைவுகூரும் அஞ்சலி நாட்களை ஒழுங்கு செய்து, அவர்களின் சேவைகளைப் புதிய தோழர்களின் நெஞ்சத்தில் நிலைநிறுத்துவதிலும், அதன் மூலம் எம் எண்ணங்களைப் புனிதப்படுத்துவதிலும், இலட்சிய உறுதியை வளர்ப்பதிலும் முன்னின்று செயற்பட்டவள் நீ.

பாரதி சொன்னான் 'ஒரு குழந்தையை வையாதே பாப்பா' என்று. உன்னைப் போன்றவர்களிடம் தான் பாரதி இதைப் படித்

குறைந்த எண்ணிக்கையானாலும் உறுதியான பெண்கள் அமைப்பொன்றை நெல்லியடிப் பிரதேசத்தில் கட்டியெழுப்பினாய். முதலில் பதினைந்து பெண்கள் அளவில் உன்னுடன் சேர்ந்து இரகசியமாகப் பங்காற்றினாலும் நாளடைவில் இது அதிகரித்தது.

இவ்வாறு தேச விடுதலைக்குப் பெண்களை அணிசேர்ப்பதிலும், இப்பெண்களுக்குரிய சமூகப்பிரச்சினைகளை அணுகுவதிலும் நீ முனைப்போடு செயற்பட்டதால், உன்



நிலையங்களை நிறுவி மக்களுக்குள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்ய துணிந்ததோடு இவ்வமைப்புகளுக்கூடாக தேசவிடுதலை இயக்கத்திற்கும் மக்களுக்கும் இடையில் மிக நெருக்கத்தை ஏற்படுத்தினாய்.

நாட்டில் நமக்கென்ன பிரச்சினை என்பதைப் புரிந்து கொள்ளாத பெண்கள் எத்தனை பேர்? அந்நியனின் அடிவருடிகளான ஆயுதக் குழுக்களினதும் துரோகத்தனத்தைப் புரிந்துகொள்ளாதவர் எத்தனை பேர்? சமூகம் பெண்களை எவ்வாறு ஒடுக்குகின்றது என்பதைக்கூட விளங்கிக் கொள்ளாமல் எத்தனை பேர்? பெண்கள் விழிப்படைந்தால்தான் நாடு விடுதலை அடைய முடியும் என்ற உண்மைக் கருத்தை உணர்ந்துகொண்ட நீ இப்பெண்கள் மத்தியில் கலந்துகொண்ட கலந்துரை

வர் பிரிந்துவிட்டோம். இச்சூழ்நிலையில் நீ துணிந்து ஒரு காரியத்தைச் செய்தாய்...... நீயும் உன் தோழிகள் இருவரும்... சாதாரண குடும்பப் பெண்போல் வேடம் தரித்து இரண்டு பெரிய தடை முகாம்களைக் கடக்கிறீர்கள். கால் நடையாகவே தென்மராட்சியை அடைகின்றீர்கள்.

இச்சம்பவங்களின் பின் 1987 'ஜூலை' யில் நூறு பெண்கள். ஆயுதப்பயிற்சி பெற்றோம். இதில் பவானியாகவல்ல- நித்திலாவாக நீயும் இணைந்து கொண்டாய் பயிற்சியை முடித்துக்கொண்டு புதிய வேகத்துடன் புதிய தெம்புடன் உன்கடமையைத்தொடர ஆரம்பித்தாய். பெற்றோரின் வேண்டுதலுக்காகப் படித்துக் கொண்டிருந்த நீ இப்போது படிப்பை முற்றாக நிறுத்திவிடப் போவதாக இயக்கத்திடம் சொன்னாய். ஆனால் எப்பொழுது வரை படிப்பைத் தொடர முடியுமோ அப் பொழுது வரை படிப்பைத் தொடரும்படி இயக்கம் முடிவு சொன்னது. எனவேட்டித்துக் கொண்டேயாழ் நகரப்பகுதியில் சமூக அரசியல் வேலைத்திட்டத்தில் ஈடுபட்டாய் அத்தோடு இயக்கத்தில் இருந்துகொண்டு படிப்பைத் தொடரும் தோழிகளுக்குவேண்டிய சகல தேவைகளையும் கவனிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டாய்.

இலங்கை- இந்திய கூட்டுச்சதியை எதிர்த்து இந்தியாவின் துரோகத்தனத்தை மக்களுக்குத் தோலுரித்துக் காட்ட திலீபன் உண்ணாவிரதம் மேற்கொண்ட சமயம் மகளிர் படைப்பிரிவு ஒழுங்கு செய்த பாதயாத்திரையில் பிரதான பங்குவகித்தாய்... இதன்மூலம்.... தமிழீழ மக்கள்மீது அந்நிய சக்திகள் விரித்துள்ள சூழ்ச்சிவலையை மக்களுக்குப் புரியவைத்தோம் ...இதில் உனது பங்கு முக்கியமானது.

அந்நியனை அடிவருடிக் கொண்டிருந்த துரோகக் கும்

நடைபெற்ற மிகவும் எழுச்சி கொண்ட வெகுஜனப் போராட்டங்கள்... உனது கடமைகளை நீ திறம்பட ஆற்றியிருப்பதை எமக்கு உணர்த்தின.

தொடர்ந்து பத்தாம் மாதம் தமிழீழ- இந்தியப் போர்வெடித்தது. துப்பாக்கியேந்தி களம்புகுந்த தோழியரில் நீயும் ஒருத்தியானாய். பெண்களின் குழுவொன்றிற்குத் தலைவியானாய்.

ஓர் ஆண்டும் எட்டு மாதங்களும் ஓடி மறைந்தன........ பச்சை முகடுகளின் கீழ்......... நாங்கள் மண்வெட்டியாலும், சவளினாலும் மண்ணை அகற்றிக் காவல் அரண்களை அமைத்தபோது......சோடரியாலும், வாளினாலும் மரங்களைத் தறித்து கூடாரங்களை அமைத்தபொழுது....... கப்பியில் இருவர்......மண்ணிழுக்கும் கயிற்றில் மூவர் ... கிணற்றிற்குள் இருவர் நின்று கிணறு தோண்டிய பொழுது மண்ணில் குளித்திருந்தாலும் மகிழ்ந்திருப்போமே, அந்தப் பொழுது............நடையாய் நடந்து......முதுகொடியச் சுமந்தாலும்........அதை விரும்பினோமோ...........அந்தப் பொழுது......எள்ளானாலும், ஏழாய்ப் பிரித்தோமல்லவா.... அந்தப் பொழுதில்......உன் தோழிகளோடு நீ சுதந்திரமாய்........மிகக் குதூகலமாய் .... இருந்ததெல்லாம் இப்போது ''அல்பங்களில்'' நிழற்படங்களாய்.....நெஞ்சங்களில் நினைவுப் படங்களாய் ......நித்திலா......! நீ வரமாட்டாயா! எத்தனை கனவுகளைச் சுமந்து கொண்டிருப்பாய்.. ...

எங்கள் பாசறைக்கு வந்து எங்களைக் காணப்போவதை எண்ணி எவ்வளவு களிப்படைந்திருப்பாய் .....சமூக, அரசியல் வேலைகளில் உனக்கேற்பட்ட பிரச்சினைகள் எத்தனையை எம்மோடு விவாதிக்க எண்ணியிருப்பாய்..... அத்தனை கனவுகளும்.... தவிடுபொடியாக... உன்னோடு கூடவே மேஜர் மாறன், மகேந்தி, கேசவன், சுமன், ரூபன், பொபி, சபா, அர்ச்சுதன், அகிலன், விஜயன், நவம், லெப். அருள், முரளி ...பன்றிக்கெய்த குளத்தில் வஞ்சகரோடு நடத்திய போரில், உடல்கள் சன்னங்களால் சல்லடையாக்கப்பட்டதை எண்ணும் போது.... இதயமே வெடித்து விடாதா?

தாய்க்குத் தலைமகளாய் பின் மூன்று தம்பியரைக் கொண்டிருந்தாய்...அதில் இருவரைஉன்பாதையில் தந்துவிட்டாய்...ஒவ்வொரு தமிழனும் தன கடமையை உணரவேண்டும்......வீட்டிற்கொரு மகளை, மகனை விடுதலைக்காக தரவேண்டும் என்பாய்...

காலைநேரம்.... வழமைபோல் தோழர்கள் யாவரும் தத்தமது வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

எனக்குத் தரப்பட்ட வேலையைச் செய்து முடித்துவிட்டு அதைச் சரிபார்ப்பதற்காக எமது பொறுப்பாளரைச் சென்றடைகிறேன்....... அப்பொழுதுதான் அந்தச்செய்தி என்னிடம் சொல்லப்பட்டது... அதிர்ச்சியைத் தாங்கிக் கொண்டு பெண்களின் கூடாரத்தை நோக்கி நடக்கிறேன்... என்மூலம் தோழிகள் யாவரும் செய்தியை அறிந்து கொண்டனர். வெகுதூரம்... மிக நீண்ட தூரம்.. நீயுமா எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டாய்.. நித்திலா... இந்தச் செய்தி பிழையாக இருக்கக் கூடாதா.? நீஉயிர் பிழைத்து விட்டாய். உன் இனியதோழர்களைச் சந்திக்க ஓடோடி வந்துகொண்டிருக்கிறாய்...... என்று ஒரு புதிய செய்தி கிடைக்காதா...? பதில் கிடைக்க முடியாத கேள்வியோடு... வானத்தைப்பார்க்கிறோம்... பச்சை முகடுகளுக்குப் பின்னாலிருந்த சூரியன் தன் பற்கள் தெரியஏளனமாசச் சிரிக்கிறான்.... ''தார் வீதியில் குப்புறப் பிணமாய்க் கிடந்த அவளின் உயிரற்ற உடலைக் காலையில் உனது தோழர்களுக்கு இனம் காட்டியது நான்தானே...... பொய்யாகுமா?'' என்பதுபோல்.

பழகும் இனிமைக்கு இணையற்றவளே... உன்னிடமிருந்து படித்துக்கொள்ள... எமக்கு நிறையவே இருந்தது... நீலநிறமாய் இருந்த உனது பழைய 'ஜீன்ஸ்' நொய்ந்துநரைத்துப் போய்... வெள்ளையாய்க் கிடக்கும்... ஆனால், கிடைக்கின்ற புதியதை எம்மிடம் தந்துவிட்டு நீ பழையதையே தோய்த்துப் போடுவாய். எதிலுமே எமது தேவையை முதலில் நிறைவேற்றி... பின்புதான் உன்னைப்பற்றிச் சிந்திக்கும்...... உனக்கே உரிய... உனது எளிமைக் கோலத்தால் எமது இதயங்களிலே ஏறி அமர்ந்து கொண்டாய்.. உலவித்திரிந்த விடுதலை நெருப்பு நீ. உன்னுடல் மண்ணுக்குள் புதைக்கப்பட்டு விட்டது.... ஆனால், தமிழீழத்தவர் நெஞ்சங்களுள் நீ மூட்டிய தீ இன்று பற்றி எரியத் தொடங்கிவிட்டது.

''வியட்னாம் போராளிகளின் தன்னம்பிக்கை'' இது நித்தம் உன் வாய்க்குள் இருந்து வரும் வார்த்தை. எமக்குத் தேவையான உணவுப் பொருட்களை மிக நீண்ட தூரத்திலிருந்து கொண்டு வந்து சேர்ப்பது எமது அன்றாடக்கடமை. இந்நேரங்க தன்னம்பிக்கை அதிகம் கொண்டவர்கள், இலட்சிய தாகமும் உறுதியும் உடையவர்கள் புறப்படுவோம்'' என எம்மை உற்சாகப்படுத்துவாய்.. துன்பத்தை மறந்தோம்... விரைவில் பாசறை சேர்ந்தோம்.




ஒடிசலான, உயர்ந்த உன் தோற்றத்தைப் பார்த்து நாங்கள் கிண்டல் செய்வோம். ''காற்றுச் சிறிது பலமாக அடித்தால்.... சுற்றியுள்ள மரக்கொப்புகளில்தான் நாம் உன்னைத் தேடவேண்டும்'' என்போம், எதிரியை நோக்கி என் ஆயுதத்தை உயர்த்துவதற்கு எனது கைகளிற்குப் பலம் இருக்கிறது ''என கைகளை நீ உறுதியாய்ப்பிடித்துக்காட்டி...'' உள்ளத்தில் தளராத உறுதி இருக்கின்றது... இதனால் நான் விடுதலைப் புலிகளில் இருப்பதற்குத் தகுதியுடையவள் என்று எமது கிண்டலை ரசித்தபடி புன்சிரிப்போடு கூறுவாய்.

03-07-88 அன்று விஸ்வமடுச் சந்திக்குமிக அண்மையில் அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் மீது பதுங்கித்தாக்குதல் ஒன்றை மேற்கொண்ட சமயம் எதிர்பாராத விதமாக நாலாபக்கமும் எதிரி இராணுவத்தால் சூழப்பட்டோர்கள். எதிரியிடம் இருந்து எஸ்.எல்.ஆர் துப்பாக்கியைக் கைப்பற்ற முடிந்தது. ஆனால் எமது தரப்பில் பெண் போராளி மரியாவை இழக்க நேர்ந்தது. நெற்றிப் பொட்டில் சூடுபிடித்து மரணத்தின் மடியில் படுத்துவிட்டாள் மரியா, உனது தோழியின் மரணித்துவிட்ட எம் தோழர்களின் தியாகங்களை நினைவுகூரும் அஞ்சலி நாட்களை ஒழுங்கு செய்து, அவர்களின் சேவைகளைப் புதிய தோழர்களின் நெஞ்சத்தில் நிலைநிறுத்துவதிலும், அதன் மூலம் எம் எண்ணங்களைப் புனிதப்படுத்துவதிலும், இலட்சிய உறுதியை வளர்ப்பதிலும் முன்னின்று செயற்பட்டவள் நீ.

பாரதி சொன்னான் 'ஒரு குழந்தையை வையாதே பாப்பா' என்று. உன்னைப் போன்றவர்களிடம்தான் பாரதி இதைப் படித்தானோ...? ஒரு போராளியைக்கூட மிச்சம் வைக்க மாட்டாய்... நாம் குதூகலமாய்க் கூடுகின்ற கலை நிகழ்ச்சிகளில் மிச்சமின்றி ஒவ்வொருவரும் பங்காற்றவேண்டும் என வற்புறுத்துவாய்.. நாம் ஒவ்வொருவரும் உலக நடப்பை அறிந்துகொள்ள வேண்டும் என்பதில் அக்கறை கொண்டாய். பத்திரிகைச் செய்திகளைப் படித்து, வானொலிச் செய்திகளைக் கேட்டு எம்மோடு கலந்துரையாடி, அவற்றினை அறிவதில் எமக்கு ஆர்வம் காட்டினாய்.... இன்று எம்மிற் பலர் அதை எண்ணிப் பார்க்கிறோம் எமது வளர்ச்சியில் எவ்வளவு அக்கறைப்பட்டாய்... உயர்தர வகுப்புப் படிக்கின்றபோது இயக்கத்துடனான தொடர்பை ஏற்படுத்திக்கொண்ட நீ பாடசாலைக் கல்வியில் கவனம் செலுத்தவில்லை. தேசவிடுதலை இயக்கம்பற்றி அறிந்துகொள்வதற்கும், விவாதிப்பதற்கும் தலைமறைவாக இயங்கி வரும் போராளிகளுடன் தொடர்பு கொள்வதற்கும், படிப்பதற்குரிய நேரத்தையும், சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொண்டாய். தேச விடுதலையில் உனக்கிருந்த ஈடுபாடு காரணமாகவும், உனதுசெயற்றிறன், கடின உழைப்புக் காரணமாகவும் 1985 'ஜனவரியில்' நெல்லியடிப் பிரதேசத்தில் தேச விடுதலைக்காதரவாக பெண்களை அணிதிரட்டுவதற்கும், அவர்களின் சமூகப் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கும் பொறுப்பாக விடப்பட்டாய். 84ஆம் ஆண்டின் இறுதியில் 'மார்கழியில்' ஆரம்பிக்கப்பட்ட 'சுதந்திரப் பறவைகள்' பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் ஒருத்தியானாய்.

பாடசாலை மாணவிகள் மத்தியிலும், கிராமப் பெண்கள் மத்தியிலும் இரகசியத் தொடர்புகளை ஏற்படுத்தி, உன்னுடன் சேர்ந்து இரகசியமாகப் பங்காற்றினாலும் நாளடைவில் இது அதிகரித்தது.

இவ்வாறு தேச விடுதலைக்குப் பெண்களை அணிசேர்ப்பதிலும், இப்பெண்களுக்குரிய சமூகப்பிரச்சினைகளை அணுகுவதிலும் நீ முனைப்போடு செயற்பட்டதால், உன்


லெப். நித்திலா

பொறுப்பு அதிகரித்தது மேற்கண்ட வேலைகளைத் திட்டமிடுவதற்கும் வடமராட்சிப் பிரதேசம் முழுவதற்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டாய். வெய்யில்என்றும் மழை என்றும் பாராமல், உணவையும், உறக்கத்தையும் பொருட்படுத்தாமல் உனது கடமைகளை நிறைவேற்றக் கடுமையாக உழைத்தாய். இச்சமயத்திலேயே (1986) பௌதிக விஞ்ஞானப் பட்டப் படிப்பிற்காக பல்கலைக் கழக அனுமதி கிடைத்தது.

தேசவிடுதலைக்கான உனது கடமையோடு படிப்பையும் கூட நீ தொடர்ந்தாய். விடுமுறை நாட்களைத் தவிர மேலும் அடிக்கடி 'லீவு' போட்டு உனது பிரதேசங்களுக்குச் சென்றுவிடுவாய். பல பின்தங்கிய கிராமங்களுக்குள் பிரவேசித்து அங்குள்ள மக்களோடு பழகி அங்குள்ள குறைபாடுகளைக் கண்டு அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கடுமையாக உழைத்தாய். குறிப்பாக மழலைகளின் எதிர்காலத்தைக் குறித்து மிகவும் அக்கறை கொண்டிருந்தாய். இயக்கத்தின் வேலைத்திட்டங்களான இலவச பாலர் பாடசாலைகள், ஆரம்ப சுகாதாரநிலையங்கள், தும்பு, பன்னம், தையற் கைத்தொழில் பயிற்சி நிலையங்களை நிறுவுவதில் எவ்வளவு விரைவாகவும், துடிப்பாகவும் செயற்பட்டாய். இவற்றோடிணைந்த மாதர்சங்கங்கள், மகளிர் நூல்

ஏற்படுத்தினாய்.

நாட்டில் நமக்கென்ன பிரச்சினை என்பதைப் புரிந்து கொள்ளாத பெண்கள் எத்தனை பேர்? அந்நியனின் அடிவருடிகளான ஆயுதக் குழுக்களினதும் துரோகத்தனத்தைப் புரிந்துகொள்ளாதவர் எத்தனை பேர்? சமூகம் பெண்களை எவ்வாறு ஒடுக்குகின்றது என்பதைக்கூட விளங்கிக் கொள்ளாமல் எத்தனை பேர்? பெண்கள் விழிப்படைந்தால் தான் நாடு விடுதலை அடைய முடியும் என்ற உண்மைக் கருத்தை உணர்ந்துகொண்ட நீ இப்பெண்கள் மத்தியில் கலந்துகொண்ட கலந்துரையாடல் கூட்டங்கள்தான் எத்தனை ? ஏன் இன்றுகூட எமது பாசறையில் 'பெண்களின உரிமைப்போராட்டமானது ஆண்களுக்கு எதிரானது அல்ல.... ஆண்கள் ஆதிக்கம் செலுத்துகின்ற சமூக அமைப்பிற்கு எதிரானது என்ற கருப்பொருளில் நீ ஆற்றிய உரை.... உனது உரிமைக் குரல்... சகல போராளிகளின் மனத்திலும் தீர்க்கமாய் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

கிராமங்களுள் ஒளிந்திருக்கும் ஆண்கள், பெண்கள் கலைஞர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்கள் மூலம் சிறந்த கலைப்படைப்புக்களை நவீன பாரம்பரிய கலையம்சங்களோடும், புரட்சிகர கண்ணோட்டத்தோடும் தயாரித்துமக்கள்முன் கொண்டு வருவதில் முன்நின்றாய். குறிப்பாக '' பாப்பாக்களின் பிரகடனம்'' என்ற சிறுவர் கவிதா நிகழ்வு மக்களை வெகுவாகக் கவர்ந்ததல்லவா?

1987 மே 'ஒப்பறேசன் லிபறேசன்' பொழுது சிறிலங்கா இராணுவத்தின் கெடுபிடிக்குள் குண்டுவீச்சு விமானங்களால் தொடர்ச்சியாகக் குண்டுகள் வீசப்பட்டன. 'ஆட்லறி ஷெல்கள்' அடிக்கப்பட்டன. மக்கள் மாண்டுகொண்டிருக்கின்றார்கள். மடிந்துகொண்டிருக்கின்றார்கள்...... நாம் அவசர அவசரமாக உணவுசமைத்துக் களத்தில் நிற்கும் போராளிகளுக்கு உணவுப் பாசல்களை அனுப்பிக்கொண்டிருந்தோம் ... .... எமது பக்கம் இழப்புக்கள் அதிகரித்தன. ஈற்றில் எதிரி தீவிரமாக முன்னேறுகிறான். நாம் பாதுகாப்பற்ற நிலையில் தலைமறைவாகிவிட்டோம் ...... மேலும் இரண்டு நாட்கள் இராணுவத்தின் கைகளிற்கு நடுவில் எவ்வாறோ தப்பித்துக் கொள்கின்றோம். ஆனால் ஒருவரை ஒரு

இலங்கை- இந்திய கூட்டுச் சதியை எதிர்த்து இந்தியாவின் துரோகத்தனத்தை மக்களுக்குத் தோலுரித்துக் காட்ட திலீபன் உண்ணாவிரதம் மேற்கொண்ட சமயம் மகளிர் படைப்பிரிவு ஒழுங்கு செய்த பாதயாத்திரையில் பிரதான பங்குவகித்தாய்... இதன்மூலம்.... தமிழீழ மக்கள்மீது அந்நிய சக்திகள் விரித்துள்ள சூழ்ச்சிவலையை மக்களுக்குப் புரியவைத்தோம் ...இதில் உனது பங்கு முக்கியமானது.

அந்நியனை அடிவருடிக் கொண்டிருந்த துரோகக் கும்பல்கள் அவர்களின் தயவில் இருந்துகொண்டு நிராயுதபாணிகளான எமது தோழர்களைப் படுகொலை செய்து போட்ட நேரம் துரோகிகளை எதிர்த்து யாழ் நகரில் சுமன், ரூபன், பொப்பி, சபா, அர்ச்சுதன், அகிலன், விஜயன், நவம், லெப். அருள், முரளி ....பன்றிக்கெய்த குளத்தில் வஞ்சகரோடு நடத்திய போரில், உடல்கள் சன்னங்களால் சல்லடையாக்கப்பட்டதை எண்ணும் போது.... இதயமே வெடித்து விடாதா?

தாய்க்குத் தலைமகளாய் பின் மூன்று தம்பியரைக் கொண்டிருந்தாய்...'அதில் இருவரைஉன்பாதையில் தந்துவிட்டாய்...ஒவ்வொரு தமிழனும் தன் கடமையை உணர வேண்டும்......வீட்டிற்கொரு மகளை, மகனை விடுதலைக்காக தரவேண்டும் என்பாய்...

இறுதி மூச்சுவரை இலட்சிய தாகத்திற்காகவே உழைத்து களத்தில் வீர மரணத்தைத் தழுவிக் கொண்ட இருபத்தி மூன்றாவது பெண்புலியான உன் வரலாற்றை யார் மறப்பார்கள் ☐

## தம்பிக்கு நித்திலாவின் கடிதம்

25-02-89

*அன்பின் நவீனன் அறிவது,*

*நலம். உனது கடிதம் கிடைத்தது. உனக்குப் பயிற்சி முடிந்திருக்கும் என்று நினைக்கிறேன். இந்த வாழ்க்கை உனக்குப் புதிது. பல கஷ்டங்களைச் சந்திப்பாய். ஆனால் இவற்றைத் தாங்குகின்ற மனச் சக்தி இருந்தால்தான் உன்னால் உறுதியாகப் போராட முடியும். உனக்குப் பொறுப்பாகவுள்ளவர் சொல்வதைக் கேட்டு நட. எல்லோரிடமும் அன்பாகப் பழகு. உனது எழுத்தை விளங்கக்கூடியதாய் எழுதினால் மட்டும் காணாது. வடிவாய் எழுதப் பழகு.*

*நான் பாமாவைச் சந்திக்கிறனான். மற்றவர்களைச் சந்திக்கவில்லை. உன்னைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது எனது காட்டு வாழ்க்கையின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறேன். எனக்குக் கடிதம் எழுதிறதைத் தவிர்த்துக் கொள்.*

*நான் உன்னிடம் எதிர்பார்ப்பது நீ இயக்கம் விரும்புகிற மாதிரி உன்னை வளர்த்துக் கொள்வதையே.*

*நீ வீட்டைப்பற்றி ஒன்றுக்கும் யோசிக்காதே. மிகுதி சந்திக்கும்போது கதைப்போம்.*

*இப்படிக்கு*
*அன்புடன் நித்திலா*

நன்றி: சுதந்திரப்பறவைகள் ☐

**''மக்கள் கேள்விகளும் மாத்தயா பதில்களும்''**

பகுதி தவிர்க்க முடியாத காரணங்களால் இவ்வாரம் வெளிவரவில்லை-
அடுத்தவாரம் வழமைபோல் வெளிவரும்.

ஆ - ர்




## ●● சிறுவர் பகுதி ●●

## தேடி எடுத்துப் டடியுங்கள்

### பினோச்சியோவின் சாகசங்கள்

கெப்பெற்றோஎன்பவர் ஒரு தச்சுத் தொழிலாளி. பொம்மைகளை ரத்தினால் செய்வதில் ஆர்வமுடையவர். மரத்தைக் கொண்டு விதவித மான பொம்மைகளைச் செய் வார்.

அன்றும் அப்படித்தான் மரத்தில் ஒரு பொம்மையைச் செய்தார். ஒரு சிறுபையனின் வடிவில் அந்தப் பொம்மை யைச் செய்தார். பொம்மை யைச் செய்து ஓரிடத்தில் வைத்துவிட்டு வேறு வேலை யாகச் சென்றார். வேலை முடிந்ததும் திரும்பி வந்தார். பொம்மையை எடுக்கச் சென் றார். வைத்த இடத்தில் பொம்மையைக் காணவில்லை. இதென்னடா வம்பாகப் போய் விட்டது. வைத்த இடத்தில் பொம்மையைக் காணவில்லையே எனக்கவலை கொண்டார். அப்போது வெளியே கலவரச் சத்தம் கேட்டது.

என்ன கலவரம்? கெப் பெற்றோ வெளியே சென்று பார்த்தார். என்ன ஆச்சரி யம்?....

அவரது பொம்மைப்பையன் வீதியில் ஓடிக் கொண்டிருந் தான். ஏற்கனவே அவர் பொம்மைக்கு 'பினோச் சியோ' என்ற பெயரிட்டிருந் தார்.

வீதியில் ஓடிக்கொண்டிருந்த பொம்மைப் பையனை ''பினோச்சியோ இங்கு வா'' எனக் கூப்பிட்டார். பினோச் சியோ வந்தது. பொம்மை உயிர் பெற்று விட்டதல்லவா! இனி அதனைத் தன் நண்ப னாக வைத்துக் கொள்ளலாம் என எண்ணி கெப்பெற்றோ அதற்கு கவர்ச்சியாக அலங் கரித்தார்.

இப்போது பினோச்சியோ பொம்மை மிக அழகாகி விட் டது. அத்துடன் பல சாகசங் களை செய்யத் தொடங்கி யது மிகவும் ரசிக்கக் கூடிய தாகவும் சிரிக்கக் கூடியதாக வும் அதன் சாகசங்கள் இருந் தன

அப்படி என்ன சாகசங்களை பினோச்சியோ சாதித்தது. தயவு செய்து அதைமட்டும் கேட்காதீர்கள். ஏனெனில் இதன் சாகசங்கள் பெரிய புத் தகமாகவே வந்துள்ளது அந் தப் புத்தகம் 'Adventures of Pinnochio' என்ற தலைப்பில் இருக்கும். இதுதவிர பினோச் சியோவின் ஒவ்வொரு சாகச மும் ஒவ்வொரு சிறு கதை யாகவும் வெளிவந்துள்ளது. 'வால்ட் டிஸ்னி' என்ற சித் திரக்கதை நிறுவனம் பினோச் சியோவின் சாகசங்களையும், புதிய தாக சில சாகசங் களைச் சேர்த்து சித்திரக் கதைப் புத்தகமாக வெளியிட் டுள்ளது. அத்துடன் காட்டூன் திரைப்படங்களாகவும் வெளி யிட்டுள்ளது. 'Pinnochio' என்ற தலைப்பில் இக்காட் டூன திரைப்படங்கள் வீடியோ நாடாக்களிலும் வந்துள்ளது.

இந்த பினோச்சியோவை எழுதியவர் ஒரு இத்தாலியர். இத்தாலிய மொழியில் 1880 இல் எழுதப்பட்டது. ஆனால் தற்போது வெளிவந்துள்ளவை 'கார்லோ கொல்லொடி' என் பவரால் மொழி பெயர்க்கப் பட்டவையாகும்.

இது தமிழில் 'நவாலியூர் செ. நடராஜன்' என்பவரால் தழுவி எழுதப்பட்டது. 'பொம்மை வண்டி' என்றபெய ரில் புத்தகமாக பல ஆண்டு களுக்கு முன் வெளியிடப்பட் டது. இது தற்போது கிடைக் குமா? என்பது சந்தேகம்.

இவ்வளவு தகவலும் போதும் தானே? தேடி எடுக்க .....

## அவந்தி கதைகள்

### அவமானம் சமாளிப்பு

சீனதேசத்தில் அரசர் ஒருநாள் தன நாட்டின் அறி வாளிகளை அழைத்து அவர் களுக்கு ஆடைபோர்த்திக் கௌரவித்தார். இந்த அறி வாளிகளுள் அவந்தியும் அடங் கினார்.

மன்னர் எல்லோருக்கும் புதிய ஆடைகளைப் போர்த் தினார். அவந்தி கடை சியாகநின்றார். ஆடை எது வுமில்லை. உடனே அரசர் தன் கழுதையின் மேலிருந்த போர்வையை எடுத்துப் போர்த்தினார்.


அவந்திக்கு வலு அவமா னமாகப் போய்விட்டது. ஆனாலும் அவந்தி நிலைமை யைச் சமாளிக்க முயன்றார். ''இதோ பார்த்தீர்களா? மன்னர் உங்களுக்கெல்லாம் புதிய ஆடைகளை போர்த்தி னார். ஆனால் எனக்கோ தன் ஆடையையே போர்த்தியுள் ளார்'' என்றார் அவநதி.

### இரு கழுதைப் பொதி

ஒரு நாள் அரசர் வேட் டைக்குச் சென்றார் கூட அவந்தியும்... வேட்டையில் களைத்து விடவே அரசரும், அவரது அமைச்சரும் தம் மேலாடையை அவந்தியிடம் கழற்றிக்கொடுத்தனர். அவந்தி ஆடைகளைச் சுமந்து தொடர்ந்தார்.

அவந்தி! ஆடைகள் சுமப் பதைக்கண்ட மன்னர் ''என்ன அவந்தி ஒரு கழுதை தூக்கும் சுமையை சுமந்து வருகிறாயே' என கேலி பேசினார்.


உடனே அவந்திக்கு கோபம் வந்தது. இருந்தும் சாதுரிய மாக 'இல்லை அரசே நான் இரு கழுதைகளின் சுமைக ளையல்லவா சுமந்து வருகின் றேன்'' என பதில் கூறினான்.



கடலின் அடியில் உள்ள புதையலை எவர் அடைவார்? - கண்டுபிடியுங்கள்

## கணனியின் கதை - 3

யால் இதன் சுருக்கமாக IBM



படம்: ஆதிகால ரெரோசர் பறவைகள்

## ●●●● பறவைகளின் கதை 3

''தாத்தா இறந்தபறவை கள் என்று சொன்னீர்களல் லவா அந்தப்பறவைகளைப் பற்றிச் சொல்லுங்கோ'' அடுத்த நாள்மாலை அப்பு சாமித் தாத்தாவைச்சுற்றிய சிறுவர் கூட்டம்வேண்டுகோள் விடுத்தது.

''சரி சொல்கிறேன்'' அப்பு சாமி கூறத்தொடங்கினார். இறந்தபறவைகள் என்றால் அறுநூறு எழுநூறுகோடி ஆண்டுகளுக்குமுதல் வாழ்ந்த பறவைகள். அப்பு நாங்க இருக்கிற பூமியில் மனிதர்கள் ஆகியநாங்கள் இல்லை ஒரே விலங்குமயம் தான் பெரிய மலையளவு உயரத்தில் பல் லிகளும் எறும்புகளும் இருந் தன. இதைப்போல பெரிய பெரிய பறவைகளும் இருந் தன கூரான சொண்டு (அலகு) இருக்கும். பெரிய பல்லுகள் இருக்கும். இவை பறவைகள் இல்லை. விலங்குகளுக்குத் தான் செட்டை முளைத்துப் பறந்தன. பல்லிகளுக்கெல் லாம் செட்டை இருந்து பறந் தது. இவைதான் பறவைகள் என அழைக்கப்படுகின்றன.

'அந்தப்பல்லிப் பறவைக ளுக்கு பெயரில்லையா தாத் தா?' காந்தனின் கேள்விஇது.

''உண்டு. ரெரோசர் (Ptero saurs) என்ற பறவை இருந் தது. அது 20 அடிநீளமான செட்டைகள் கொண்டது. பறவை இராட்சத வடிவான னது ஆனால் கால்கள்மெல் லியவை வலுவில்லாதவை. இவை மலைஉச்சிகளில்வாழ்ந் திருக்கலாம் என்று ஆராய்ச் சியாளர்கள் சொல்கிறார் கள்.''

''இதுதவிர வேறு பறவை கள் இல்லையா தாததா'' மறுபடி காந்தன்.

''இருக்கிறது. அதன் பெயர் ஆர்க்கியோரெரிக்ஸ் (Archaeo Pteryx) இதுவும் முதற்ச் சொன்ன ரேரோசர் போன்ற பறவை தான்''.

''இந்தப்பறவை இருக்கும் போது எல்லா விலங்குகளை யும் தின்றிருக்கும் என்ன''? துர்கா கருத்து வெளியிட...

''இல்லை அவை பெரிய வடிவம் தானேதவிர அவைக்கு மூளைவளர்ச்சியடையவில்லை இவையின் உணவு புல்லுத் தான்''

அப்ப பரவாயில்லை. நாங் கள் பயப்படத்தேவையில்லை

''அது சரி தாத்தா! இந்தப் பறவைகள் இருக்கும் போது மனிதர்கள் இல்லை என்றீர் களே. பிறகுஎப்படி? மனிதர் களுக்கு இந்தப் பறவைகள் இருந்தது தெரியவந்தது?'' பிரபன்கேள்வி யெழுப்பினான்

தாத்தா பதில்தருகிறார்

''பல நாடுகளில் இந்தப் பற வைகளின் எலும்புக் கூடுகள் நிலத்திற்குள் புதைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதன் எலும்புக் கூடுகளை வைத்துத் தான் அவற்றைக் கண்டுபிடித் தார்கள்''

''அப்ப தாத்தா! எங்கட ஊரிலையும் நிலத்தைக் கிண் டிப்பார்த்தா அந்த எலும்புக் கூடுகள் இருக்குமோ?'' என பெரியகேள்வியை கஜன் கேட் டான்.

''இல்லைப் பிள்ளையள் அவை ஆபிரிக்கா, ஐரோப் பாக் கண்டத்திலதான் இருந் தது என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். சிலவேளை எங்கடை இடத்தில கிடைத் தாலும் கிடைக்கும். இதுக் காகநிலத்தைக் கிண்டத் தொடங்கிவிடாதேயுங்கோ. அதை ஐந்நூறு அறுநூறு அடி ஆழத்திலதான் கண்டு பிடிக்க ஏலும். சரி உங்களுக்கு இன்னொரு ஆதிகா லப் பறவையைப்பற்றிச் சொல்லிப்போட்டுப் போகப் போறன். அதுக்கு முதல் எல் லாரும் உங்கடை வீட்டுக்கு போய்தேத்தண்ணிகுடிச்சிட்டு வாங்கோ'' தாத்தா பிள் ளைகளை அனுப்பிவிட்டு தானும் தேனீர் குடிக்கச் செல்கிறார்.

(தொடரும்)

## அகிம்சைப் போராட்டக் கதை

'அப்பா அப்பா! இன்றைக்கு பள்ளிக்கூடத்தில ரீச்சர் அகிம்சைப் போராட்டம்

அவர்களை நாம்அடிக்க அவர் கள் நம்மைத் திருப்பி அடித் தால் நிறையப்பேர் இறப்

இதனை

எங்கடையையும் நினைக்க வில்லை. அவைக்கு போட்டி யான நாடுகளும் கூட ஒவ் வொரு நாடு அவையோட

அவரது பொம்மைப்பையன் வீதியில் ஓடிக் கொண்டிருந்தான். ஏற்கனவே அவர் பொம்மைக்கு 'பினோச்சியோ' என்ற பெயரிட்டிருந்தார்.

வீதியில் ஓடிக்கொண்டிருந்த பொம்மைப் பையனை ''பினோச்சியோ இங்கு வா'' எனக் கூப்பிட்டார். பினோச்சியோ வந்தது. பொம்மை உயிர் பெற்றுவிட்டதல்லவா! இனி அதனைத் தன் நண்பனாக வைத்துக் கொள்ளலாம் என எண்ணி கெப்பெற்றோ அதற்கு கவர்ச்சியாக அலங்கரித்தார்.

எழுதியவர் ஒரு இத்தாலியர். இத்தாலிய மொழியில் 1880 இல் எழுதப்பட்டது. ஆனால் தற்போது வெளிவந்துள்ளவை 'கார்லோ கொல்லொடி' என்பவரால் மொழி பெயர்க்கப்பட்டவையாகும்.

இது தமிழில் 'நவாலியூர் செ. நடராஜன்' என்பவரால் தழுவி எழுதப்பட்டது. 'பொம்மை வண்டி' என்றபெயரில் புத்தகமாக பல ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்டது. இது தற்போது கிடைக்குமா? என்பது சந்தேகம்.

இவ்வளவு தகவலும் போதும் தானே? தேடி எடுக்க .....

□ □

### அன்பான சிறுவர் சிறுமியரே!


துருவன் பகுதிபற்றி உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்.
இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்புங்கள்.
வேறு என்ன விடயங்கள் புதுமையாக புதியதாகச் சேர்க்கலாம் என்று உங்கள் ஆசைகளை எழுதுங்கள்.
வரும் இதழ்கள் உங்களுக்கு பிடித்த சுவையான விடயங்களைத் தாங்கி வரவுள்ளதை இப்போதே சொல்லிவைக்கிறோம்.

(ஆ-ர்)

## கண்டுபிடியுங்கள்



சிக்கலுக்குள் ஒளிந்துள்ள சேர்க்கஸ்மிருகத்தை 'A' இல் இருந்து ஆரம்பியுங்கள்



கடலின் அடியில் உள்ள புதையலை எவர் அடைவார்? - கண்டுபிடியுங்கள்

# கணனியின் கதை - 3

கி. மு. 450ஆம் ஆண்டு சீனநாட்டில் சட்டத்தில் மணிகளைக் கோர்த்து அதன்மூலம் கணக்குகளை செய்து வந்தார்களாம். இந்த மணிச்சட்டத்தின் பெயர் அபாகஸ். இதுவே முதற்கணக்கீடு ஆகும். எக்கணக்குகளையும் இதன் மூலம் இலகுவாக தீர்க்கக் கூடியதாக இருந்ததாம். அதனால் இந்த அபாகஸை அன்றைய கணக்கு இடப்பட்ட அத்திவாரம் என்கின்றார்கள்.

சரி, இனி இன்றைய இலத்தினியல் கணனியின் ஆரம்பத்தைப் பார்ப்போம். கணக்கிடும் இயந்திரம் (Calculator) சார்ள்ஸ் பாபேஜ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இது கணனி அல்ல. கணனியின் ஆரம்பம் தான் சார்ள்ஸ் பாப்பாஜின் கணக்கிடும் இயந்திரம்.

இதை அடுத்து 1914 ல் முதல் கணனி இயந்திரம் அமெரிக்காவின் ஹவார்ட் பல்கலைக்கழகத்தின் ஹோவார்ட் அய்கண் என்பவர் தலைமையினால் தயாரிக்கப்பட்டது. இது 'எனிவோக்' கணனி எனப் பெயர்பெற்றது.

இதனை உருவாக்குவதில் சர்வதேச வர்த்தக இயந்திர கூட்டுத்தாபனம்(Internationa Business Mechine Corperation) ஒத்துழைப்பு நல்கியமையால் இதன் சுருக்கமாக IBM எனவும் முதற்கணனி அழைக்கப்பட்டது. இதன்வேலை இன்று நாம் கணக்கிடும் இயந்திரங்கள் செய்யும் கணக்கிடுதல்தான். வேறு எச்செயலையும் செய்யாது.

இதனை அடுத்து 1950 ல் செய்யப்பட்ட 'யுனிவோக்' கணனி நினைவுத்தன்மையைக் கொண்டதாக இருந்து. 1952 ல் பொரெஸ்ரர் என்பவர் சுறுசுறுப்பாக வேகமாக இயங்கக்கூடிய சிறந்த கணனியைத்தயாரித்தார். தரமான கணனி மொழிகளை உருவாக்கினார்.

இதன் பின் படிப்படியாக கணனிகள் அபிவிருத்தியடைந்தன. எதிர்காலத்தையே நிர்ணயிக்கும் அளவிற்கு தற்போது மேலான கணனிகள் (Suqer Computer) செய்யப்பட்டுள்ளன. கணனியினால் இயந்திர மனிதர்கள் உருவாக்கப் படுகின்றன.

கி. பி 2000 ஆண்டில் இந்த உலகம் இருந்தால் உங்களை ஒரு கணனி தான் ஆளும். உங்களின் எந்தச் செய்கையையும் கணனிதான் நிர்ணயிக்கும் நீங்கள் கதிரையில் இருக்க வேண்டுமானால் கூட கணனியிடம்கேட்டுத்தான் இருக்க வேண்டும்.

'' ஐயய்யோ இந்தக் கணனி வேண்டாம்'' என இப்போது நீங்கள் அலறுவீர்கள்.... உண்மைதானே? □

## கண்டுபிடிப்புகள்

| | | | |
|---|---|---|---|
| குளிர்சாதனப் பெட்டி | பெக்கின்ஸ் | அமெரிக்கா | 1834 |
| குளிர்பதனி (AC) | கார்லர் | அமெரிக்கா | 1911 |
| காற்றாடி பம்பி | வான் குவெரிக் | ஜேர்மனி | 1650 |
| தூக்கி (elivator) | லார்சன் | அமெரிக்கா | 1922 |
| தீப்பெட்டி | ஜோண்ஸ் | இங்கிலாந்து | 1830 |
| ஒலிவாங்கி (mic) | பேலினர் | அமெரிக்கா | 1877 |
| சாப்பு முகச்சவரம் (Safty raor) | கில்லெட் | அமெரிக்கா | 1904 |
| மின்சவரக்கருவி (Electric razor) | ஸகிக் | அமெரிக்கா | 1931 |
| பியானோ | கிறிஸ்டோ போட் | இத்தாலி | 1769 |
| ஒட்டுப்பலகை (Plywood) | இமானுவல் நோபல் (நோபலின் தந்தை) | சுவீடன் | 1930 |
| அமுக்க அடுப்பு (Pressure Cooker) | டெனிஸ் பாபின், ரோபட் பொய்ல் | பிரான்ஸ் | 1679 |

லாம் செட்டை இருந்து பறந்தது. இவைதான் பறவைகள் என அழைக்கப்படுகின்றன.

'அந்தப்பல்லிப் பறவைகளுக்கு பெயரில்லையா தாத்தா?' காந்தனின் கேள்விஇது.

''உண்டு. ரெரோசர் (Pterosaurs) என்ற பறவை இருந்தது. அது 20 அடிநீளமான

''அது சரி தாத்தா! இந்தப் பறவைகள் இருக்கும் போது மனிதர்கள் இல்லை என்றீர்களே. பிறகு எப்படி? மனிதர்களுக்கு இந்தப் பறவைகள் இருந்தது தெரியவந்தது?'' பிரபன்கேள்வி யெழுப்பினான்

தாத்தா பதில்தருகிறார்

சொல்லிப்போட்டுப் போகப் போறன் அதுக்கு முதல் எல்லாரும் உங்கடை வீட்டுக்கு போய்தேத்தண்ணிகுடிச்சிட்டு வாங்கோ'' தாத்தா பிள்ளைகளை அனுப்பிவிட்டு தானும் தேனீர் குடிக்கச் செல்கிறார்.

(தொடரும்)

# அகிம்சைப் போராட்டக் கதை

'அப்பா அப்பா! இன்றைக்கு பள்ளிக்கூடத்தில ரீச்சர் அகிம்சைப் போராட்டம் என்றால் என்ன? என்று கேட்டு வரச்சொன்னார். எல்லாருக்கும் முதல் நான் போய் ரீச்சருக்கு அகிம்சைப் போராட்டம் என்றால் என்ன என்று சொல்லவேண்டும்.

அகிம்சைப்போராட்டம் என்றால் என்னஎன்று சொல்லுங்களப்பா? என அப்பாவிடம் கெஞ்சிக் கெஞ்சிக் கொண்டிருந்தாள் நித்யா.

அப்பா சொல்லத் தொடங்கினார். '' நாங்கள் மற்ற உயிர்களுக்கு தீமைசெய்யாமல் இருப்பது தான் அகிம்சை. உன்னை ஒருத்தி அடித்துவிட்டாள் என்றுவை. உடனே நீ அவளுக்கு திருப்பி அடிக்கக்கூடாது. அவளுக்கு நல்லது கூறவேண்டும். அல்லது அவள் வெட்கப்படும் படியாக நல்லது செய்யவேண்டும். இதுவும் ஒருவகையில் அகிம்சைதான்''

''சரி அப்பா அகிம்சைப் போராட்டம் என்றால் என்ன?''

''உங்கடைபள்ளிக் கூடத்தில உங்களை விளையாடக் கூடாது என்று ரீச்சர் சொன்னா நீங்கள் என்ன செய்வீர்கள்''

''விளையாட விடச்சொல்லிக் கேட்போம்''

''விளையாட விடவில்லை என்றால்''

'குத்துவோம்'

'இதுதான் அகிம்சைப் போராட்டம். உங்கடை வகுப்பைப்போல ஒருநாட்டை நினைத்துக்கொள். அவர்களை வேறு ஒரு நாட்டுக்காரன் ஒன்றும் செய்யவிடாமல் அடக்கி அடிமைப் படுத்தி வைக்கிறான் என நினை. அப்ப என்னசெய்யவேண்டும்'?

'அவர்களை அடித்துத் துரத்தவேண்டும்' இது நித்யா

'இது தவறு அவர்களை எதிர்த்து ஆயுதம் ஏந்தாது உண்ணாவிரதங்கள், இருந்து ஊர்வலங்கள் செய்து உரிமைகளைப் பெறவேண்டும். இது தான் அகிம்சைத்தத்துவம். அவர்களை நாம் அடிக்க அவர்கள் நம்மைத் திருப்பி அடித்தால் நிறையப் பேர் இறப்பார்களல்லவா இதனை அகிம்சை தவிர்க்கிறது'

'அப்ப அவர்கள் அடித்தால்'

'நாம் திருப்பி அடிக்காது எதிர்த்துப் போராடவேண்டும்'

'இந்த அகிம்சையில் யாராவது போராடினார்களா அப்பா'

ஆமாம்! இந்தியாவுட்பட பலநாடுகளை முன்பு வெள்ளைக்காரன் அடிமைப்படுத்தி வந்தான். அவர்களது அடிமைத்தளையைநீக்கமகாத்மா காந்தி அகிம்சைப் போராட்டம் நடத்தினார். இவரது போராட்டத்தின் பின் இந்தியா சுதந்திரம் பெற்றது. இன்று உலகமெல்லாம் அகிம்சையில் போராடினதால் காந்தியை தெய்வமாக மதிக்கிறார்கள்'

'எங்களைச் சிங்கள அரசாங்கம் அடிமைப் படுத்தினது தானே அப்பா! அப்ப நாங்களும் அகிம்சையில் போராடி இருந்தால் இப்ப நாங்கள் சுதந்திரமாக இருந்திருக்கலாமல்லவா?' என நித்தியா வினவினாள்

'நித்தியா, முதலில் நாங்களும் சிங்கள அரசாங்கத்திடம் அகிம்சையில் தான் போராடினம். ஆனா எங்கட போராட்டத்தை சிங்கள அரசாங்கம் மதிக்கவில்லை. அகிம்சையில் போராடினவர்களை அடித்தார்கள், கொன்றார்கள். அதனால் தான் நாங்கள் ஆயுதம் ஏந்திப் போராடத் தொடங்கினாங்கள்.

அப்பா முந்தி இந்தியன் ஆமி வரேக்க திலீபன் என்ற அண்ணா உண்ணாவிரதமிருந்து இறந்தவரல்லோ! அதுவும் அகிம்சைப்போராட்டம் தானே. ஏன்? அகிம்சைப் போராட்டம் நடத்தி சுதந்திரம் வேண்டின இந்தியாவின் ஆமி திலீபன் அண்ணாவின் அகிம்சைப் போராட்டத்தை மதிக்கவில்லை.

'இப்ப அவர்கள் ஆயுதம் உற்பத்தி செய்யிற பெரிய நாடு. அவர்கள் தங்கட சுதந்திர போராட்டத்தைப்போல எங்கடையையும் நினைக்கவில்லை. அவைக்கு போட்டியான நாடுகளும் கூட ஒவ்வொரு நாடு அவையோட சண்டைக்கு காத்துக்கொண்டு நிக்கினம். அவை ஆரும் எங்கடை நாட்டுக்கு வந்து இந்தியாவை அடித்தால் .... இந்தப்பயத்திலதான் அவை இங்கைவந்தவை.'

'அவர்கள் இங்கை செய்த அநியாயத்தைப் பாருங்கோ. அப்பா...... அவங்கள்எல்லோரையும் சுடவேண்டும்என்றாள் நித்யா ஆவேசமாக. உடனே அப்பா 'என்ன இப்ப அகிம்சையைப் பற்றிக்கேட்டிட்டு இப்ப சுடுகிறன் என்கிறாய்' என்று கூற,

'அகிம்சைக்கு மதிப்பில்லையே அப்பா' நித்யா பதில்தர சரி சரி நீ வளர்ந்ததற்குப்பிறகு நீ போராடலாம் முதலில் படி' என அப்பா அறிவுரை கூறினார்.

அகிம்சையை அசைபோட்டவாறே முகம்கழுவி விட்டு படிக்கச்சென்றாள் நித்யா.

□

### வாரம் ஓர் அறிவுரை

**நண்பன்**

- நண்பன் என்பவன் உலகில் பெற்றோருக்கு அடுத்தபடியாகஒருவனின் மதிப்புக்கு, நம்பிக்கைக்கு, அன்புக்கு உரியவனாவன்.
- துன்பத்தின் போதும் துணையாயிருப்பவனே நல்ல நண்பன்.
- உலகில் நல்ல நண்பன் கிடைப்பது என்பது மிகவும் அரிதான செயலே.
- தீய நண்பன் பகைவனைவிடகொடுமையானவன்.
- நல்ல நண்பனாக இருங்கள். நல்ல நண்பன் உங்களுக்கும் கிடைக்கும்.

# ஈழத்துத் தமிழ் இன உணர்வின் இலக்கிய வெளிப்பாடு

கலாநிதி - நா - சுப்பிரமணியன்

ஈழத்துத் தமிழ் இன உணர்வின் ஒருகூறான பிரதேச பாதுகாப்புணர்வின் வெளிப்பாடாக ஆரியச்சக்கரவர்த்திகள் கால ஆக்கங்கள் சில முன்னர் நோக்கப்பட்டன. அவற்றை அடுத்துச் சிலநூற்றாண்டுகளின் பின்னர் இந்த இருபதாம் நூற்றாண்டிலேயே இன உணர்வு இலக்கியத்தில் இடம் பிடிக்கத் தொடங்குகிறது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியில் ஈழத்தில் நவீன தமிழிலக்கியத் துறைகளிற் சமூக உணர்வு படிப்படியாக வளரத்தொடங்கியது. தமிழ் இனம், தமிழ் மொழி என்பன தொடர்பான எண்ணக்கருக்கள் இலக்கிய உள்ளடக்கங்களாகத் தொடங்கின. குறிப்பாக பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை அவர்களின் 'யாழ்ப்பாண சுவதேசக்கும்மி', 'எங்கள் தேச நிலை', 'இதோபதேச கீதரச மஞ்சரி' ஆகிய பாடற்பகுதிகளில் இவற்றை அவதானிக்கலாம். இவற்றிற் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத் தமிழர் சமூகமே கவனத்திற் கொள்ளப்பட்டது. இப்பாடல்களிற் சில தமிழ் மொழியின் பெருமை பேசின. இவரை அடுத்து சோமசுந்தரப் புலவர் க. சச்சிதானந்தன் ஆகியோர் பாடல்களிலும் தமிழின் பெருமை பேசப்பட்டதை அவதானிக்க முடிகிறது. இவற்றை இன உணர்வு சார்ந்தவை என்று பொதுவாகக் கொள்ளலாமாயினும் ஈழத்துத் தமிழர் அனைவரையும் இணைத்துச் சிந்திக்கும் பண்பினை இவற்றிற் காண்பதற்கில்லை என்பது சுட்டத்தக்கது. முப்பதுகளிலும் நாற்பதுகளிலும் பௌத்த சிங்கள பேரின வாதம் படிப்படியாகத் தன்னை இனங்காட்டி வெளிப்படுத்திக் கொண்ட சூழலை அடுத்தே ஈழத்துத் தமிழ் இனம் என்ற உணர்வு படிப்படியாக இலக்கிய உள்ளடக்கமாகத் தொடங்குகிறது. 1947 இல் வெளிவரத் தொடங்கிய சுதந்திரன் இவ்வுணர்வுசார்ந்த வெளியீட்டுக் களம் ஆகும். 1930 இல் இருந்து வெளிவரத் தொடங்கிய ஈழகேசரி 1940 களின் பிற்பகுதியில் இவ்வுணர்வுசார்ந்த ஆக்கங்களையும் பிரசுரிக்கத் தொடங்கியது.

1936 இல் பாரொண் ஜயதிலக அமைத்த தனிச்சிங்கள மந்திரிசபை, 1940 காலப் பகுதியில் தமிழ்க்காங்கிரஸ் உருவாகி 50 : 50 என்ற கோரிக்கையை முன் வைத்த சூழல், 1947 தேர்தலில் - சோல்பரியின் அரசியல் திட்டத்துக்கமையத் தமிழன் இரண்டாந்தர பிரஜையாக்கப்பட்ட பின்னணியில் நிகழ்ந்த தேர்தலில்

## பகுதி - 2

காங்கிரஸ் முன்வைத்த "தமிழன் என்று சொல்லடா; தலை நிமிர்ந்து நில்லடா" என்ற உணர்ச்சிக் கோஷம் என்பன ஈழத்தின் பல பிரதேசத் தமிழரையும் உணர்வு பூர்வமாக ஒன்றுபடுத்திச் சிந்திக்கத்தக்க சூழலைத் தோற்றுவித்தன. 1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்த போது அச் சுதந்திரத்திலே தமிழரின் பங்குரிமை என்ன என்றவினாவும் கூடவே உருவாகிற்று. அதேவேளை தமிழர் பிரதேசங்கள் பல நிலையிலும் பொருளியல் அபிவிருத்தியை எதிர்பார்த்து நின்றன. இத்தகைய சூழ்நிலையில் சமூக - பொருளியல் உணர்வு, இன உணர்வு என்பன தமிழ் இலக்கியத்துக்கும் பொருளாகத் தொடங்கின. இவ்வகையில் ஈழகேசரி இதழில் (22-02-1948இல்) 'சாரதா' (கவிஞர் க. சி. சரவணமுத்து) எழுதிய "சிந்தனைக்கடிதம்" என்ற தலைப்பில் அமைந்த கவிதை நமது கவனத்துக்குரியதாகிறது. யாழ்ப்பாணத்தவரை நோக்கி எழுதப்பட்ட கடிதம் இது. இதன் பகுதிகள் சில:

"யாழ்ப்பாணச் சோதரர்க்கு எழுதுஞ் செய்தி
இயற்கையிலே அதிவரண்ட தெங்கள் சூழல்!
ஆட்கணக்கிற் குறைவில்லை; ஆனா லிங்கே
அரைவயிற்றுப் பட்டினியின் அவலந்தீர்க்க
நாட்கணக்கில் நின்றுழைத்து நரம்பிளைத்து
நடைப்பிணம் போல் வாழ்கின்றோம் நரக வாதை!
பாழ்ங்கிணற்றுத் தேரைபோற் பட்டும் பட்டும்
பனை விட்டுக் கிளம்பாது பழகி விட்டோம்."

"சிங்கப்பூர் வரும்படியும் உத்தியோகச்
செல்வாக்கும் இனி நமக்குச் சித்திக்காது,
இங்கிலீஷ் படிப்பை நம்பி யாழ்ப்பாணத்தார்
இனியிலங்கை முன்னணியில் இருத்தற் கில்லை;
சங்கையுடன் வாழ்ந்த தமிழ் உபாத்திமார்க்கும்
சந்தோஷமாயிருக்கத் தடைக ளுண்டு;
மங்குதசை வந்த தெம்மூர்ப் புகையிலைக்கும்
மானமில்லை; அரசியலும் மாற்றந்தானே?"

□

"தென்னிலங்கைப் பகுதிகளில் றப்பர் தென்னை
தேயிலை நெல் காய் கறிகள் செழிக்கும் தோட்ட
நந்நிலங்கள் பலவுண்டு; கூட்டி யேனும்
நாந்துணிந்து கொண்டு குடி யேற வேண்டும்;
வன்னிகளிற் கூட எங்கள் யாழ்ப்பாணத்தார்
மனம் வைத்தால் தானியங்கள் மலிந்து தேங்கும்
உண்மையிலே பொருளாதா ரத்தா லன்றி
உயர்ச்சி பெற நமக் கொருநல் லுபாய மில்லை"

"பெரும்பான்மை மக்களை நாம் எதிர்த்து நின்று
பெறப்போகும் உரிமைகளைப் பிறகு பார்ப்போம்
சுறுசுறுப்பு விடாமுயற்சி துணிவு ஆதி
சுப குணங்கள் பெற்ற வெங்கள் சோத ரர்கள்
வருமானம் இல்லாத வழியில் நின்று
மாய்வது தான் ஆச்சரியம்;..........

□

"இன்னு மொரு சிறுகுறிப்பு; சாதிபேதம்
என்ற வெறும் பகுப்புகளும் இங்கு மோசம்,
மண்ணுலகை வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மாவின் மணி மொழியை மதிக்கும் நாங்கள்
அன்னகுறை களை யொழித்துக் கீழ்மாகாண
அன்பருடன் உறவுமுறை அதிகம் வைத்துத்
தென்னிலங்கைத் தமிழரையும் சேர்த்துக் கொண்டால்
செழித்தோங்க வழிபிறக்கும் சிந்தியுங்கள்."

இக் கவிதையின் பொருள் வெளிப்படை. இலங்கை ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்ற சூழலில் மாறிவரும் சமூக-பொருளியல் நிலைத் தேவைகட்கேற்ப யாழ்ப்பாணமக்களின் மனோபாவங்களிலும் பொருளியல் நடவடிக்கைகளிலும் மாற்றம் அவசியமாகிறது என்பது இதில் உணர்த்தப்பட்டுளது. சாதி ஏற்றத் தாழ்வை அகற்றுதல், கீழ்மாகாணத்தமிழரையும் தென்னிலங்கைத் தமிழரையும் இணைத்து ஓரினமாகச் சிந்தித்தல் என்பன மனோபாவ நிலையில் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இங்கு தென்னிலங்கைத் தமிழர் என அமைந்த சுட்டு மலையகத் தோட்டத் தொழிலாளர்களைக் குறிப்பதாக ஊகிக்க வேண்டியுளது. பொருளியல் நடவடிக்கைகள் என்றவகையில் வன்னிப் பிரதேசம் வளம் படுத்தப்படவேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

பெரும்பான்மையினத்தவரிடம் உரிமைக்குப் போராடுவதை விட சிறுபான்மையினர் தம் பொருளியல் நிலையிலான அபிவிருத்திக்கும் சமத்துவ சிந்தனைக்கும் முதன்மை கொடுப்பதே அவசியமானது என்பது இக்கவிதையின் தொனிப்பொருள் எனலாம். இலங்கை சுதந்திரம் பெற்ற (4- 2- 1948) பதினெட்டு நாட்களுக்குள் எழுதப்பட்ட இக்கவிதை ஈழத்துத் தமிழ் இன உணர்வின் அன்றைய முக்கிய சிந்தனைப் போக்கொன்றைப் பிரதிபலிப்பதாகக் கருதத்தக்கது. இலங்கையின் ஏனையபிரதேசங்களில் வாழ தமிழரனைவரையும் யாழ்ப்பாணத் தமிழர் தழுவி இணைத்துச் சிந்திக்க வேண்டும் என்ற வகையிலும் பெரும்பான்மைக் கெதிரான உரிமைப்போரைச் சுட்டியுணர்த்திய வகையிலும் ஈழத்துத் தமிழ் இன உணர்வு இலக்கிய வரலாற்றில் இக்கவிதை காலமுதன்மையுடையது எனலாம். ஈழத்துத் தமிழ் இன உணர்வை ஒரு உணர்ச்சிமயமான கோஷம் ஆக்காமல் சிந்தனைக்குரியதாகச் செறிவான சொற்களில் தந்துள்ளதன் மூலம் இக்கவிதை தரமான தொரு படைப்பாகிறது. அக்காலத் தமிழரின் யதார்த்த உணர்வோட்டத்தை இது பிரதிபலித்துள்ளது எனக்கருத இடமுண்டு.

1948 ஆம் ஆண்டில் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்தியர்-பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டமும் அதைத் தொடர்ந்து 1949 இல் தமிழரசுக்கட்சி என்ற சமஷ்டிக் கட்சி உதயமான சூழலும் இன உணர்வின் வரலாற்றிலே புதிய பரிணாமங்களைத் தோற்றுவிட்டன. இன உணர்வு இலக்கியத்திலே உணர்ச்சி முன்னப்புப் பெறத் தொடங்கியது. சமகாலத்தில் தமிழ் நாட்டில் பாரதிதாசன் முதலியோரால் இலக்கிய முனைப்புப் பெறத் தொடங்கியிருந்த இன உணர்ச்சியும் மொழியுணர்ச்சியும் ஈழத்தில் பிரதிபலிக்கத் தொடங்கியது. இவ்வாறான ஆக்கங்களுக்குச் சுதந்திரன் இதழ் முக்கிய களமாயிற்று. தொடக்கத்தில் இவ்வுணர்ச்சி கவிதைகளாகவே வெளிப்படலாயிற்று. பின்னர் முறையே நாடகம், சிறுகதை ஆகிய இலக்கிய வகைகளில் இது இடம் பெறத் தொடங்கியது. □

# சமீபகால புதைபொருள் ஆய்வுதரும் புதிய உண்மைகள்

விரிவுரையாளர்
புஸ்பரட்ணம் அவர்கள்

அண்மையில் பூநகரிப் பகுதியில் கண்டு பிடிக்கப் ... டன் பூனகரிப் பகுதியில் நெற் செய்கை நடைபெறும் பகுதிகளில் ஏராளமான பெருங்கற் கால தாழிகள் ...

... மூலம் இயற்கையாகவே நாம் எம்மை நிரூபித்துக் கொள்ளலாம்.

இந்த விடயத்தில் எமக்கு பூநகரி பிரதேச ஆய்வுக்கு அப்பகுதி இளைஞர்களும் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களும் பெரும் பாடு ... சுவடுகளை பாதுகாப்பதற்கென பிரதேச ரீதியில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஒவ்வொரு அருங் காட்சியகம் தேவை என்றதுடன் எமது தமிழ்ப் பகுதியின் தலைநகரமான திருக்கோணமலையில் ஒரு மிகப் பெரியதொல் பொருட்காட்சிச் சாலை இருக்க வேண்டும். இதுவே எமது வரலாற்றை பாகாப்பதற்கு எம்மால் செய்யக் ...

## இரு ஆய்வாளர்களின் கருத்துக்கள்

## விண்வெளி விஞ்ஞானம்

### வெள்ளி அஸ்தமிக்கிறது

வெள்ளியைப் பற்றி தொடர்ந்து பார்த்து வந்தோம். இத்தொடரில் அதிக இடத்தைப் பிடித்துக் கொண்ட கிரகம் - வெள்ளி சோடாத்தண்ணீர்க் கடல் நிறைந்த கிரகம், பாலைவனம்போன்ற கிரகம், எண்ணெய்க் கடல்கள் நிறைந்த ...

... கணிக்கப் பட்டது இதற்குமுன் அதன் சுயசுழற்சிக்கால அளவு 250 நாட்கள் எனக் கருதினர் பின், 243 நாட்கள் என முடிவு செய்தனர்.

வெள்ளி தன்னைத்தானே சுற்ற எடுக்கும் காலமும், பூமியின் சுழற்சியுடன் பொருந்தியிருக்கிறது. உதாரணமாக, பூமியும் வெள்ளியும், ஒன்றுக் கொன்று சமீபமாக நிற்கும் காலத்தில், வெள்ளியில் நின்று ஒருவர் ... கிறார்கள். முடிவுகள் ஏதுமில்லை.

இதற்குள் பிற நட்சத்திர மண்டலங்களை அலசுவதில் ஈடுபட்டுள்ளார்கள். சூரியத் தொகுதியில் உள்ளடங்கிய கிரகங்களை விட நட்சத்திரங்களை ஆய்வுசெய்வது இலகு. ஏனெனில் பூமியில் உள்ள வானியில் தொலை நோக்கிகள் சக்தி கூடியவை. அவற்றில் குறித்த தொலைவிற்கப்பால் உள்ளவை மட்டுமே ...

# சமீபகால புதைபொருள் ஆய்வுதரும் புதிய உண்மைகள்

விரிவுரையாளர்
புஸ்பரட்ணம் அவர்கள்

அண்மையில் பூநகரிப் பகுதியில் கண்டு பிடிக்கப் பட்ட கட்டடத் தொகுதி சம்பந்தமாக வரலாற்றுத்துறை விரிவுரையாளர் புஸ்பரட்ணம் அவர்கள் கூறுகையில் மூன்றுவில், செளியாறு, நீராவியடி ஆகிய மூன்று பிரதேசத்தையும் உள்ளடக்கிய பிரதேசத்தில் மிகப் பழைய காலத்தைய கட்டடத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் பத்து தொகுதிகள் இருந்தது. இத்தொகுதிகளில் காணப்படும் சிற்ப வேலைப்பாடுகள், சின்னங்கள் கருங்கற்சிலைகள் சிலவற்றை எடுத்து நோக்கும் போது இவை பல்லவ சோழ காலத்தைய கலை மரபை கொண்டிருந்வையாக இருக்கிறது. ஆகவே இந்த பத்து கட்டிடத் தொகுதிகளும் 11ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை என எம்மால் நிச்சயமாக கூறிவிடக் கூடியதாக உள்ளது.

இதனைக் கொண்டு அந்தப் பகுதிகளில் ஒரு புராதன அரசு ஒன்று அமைந்திருந்ததற்கான அறிகுறிகள் தென்படுகின்றது. அத்துடன் அங்கிருந்து பெறப்பட்ட சில தாழிகள், கல்வெட்டு ஆதாரங்களைக் கொண்டு பார்க்கும் போது இந்த மன்னர் ஆட்சிக் காலத்தின் போது தமிழ்மொழி உபயோகத்திலிருந்தும் அவ்வாறு உபயோகத்திலிருந்தற்கான வரிவடிவங்களைநாம்இந்த பத்துக்கட்டடதொகுதியிவிருந்து பெற்றுக் கொண்டோம்.

இவ்வாதாரங்களைக் கொண்டு நாம் இவ்வளவு காலமும் தமிழர் வரலாறு பற்றி அணுகப்பட்ட எண்ணங்களை மாற்ற வேண்டி ஏற்பட்டுள்ளது. தமிழரின் ஆரம்பகால அரசு வன்னிப் பகுதியிலேயே அமைந்திருந்தது என்றும் அங்கு தான் தமிழ் மன்னர்களுக்கும் சிங்கள மன்னர்களுக்கும் இடையில் யுத்தங்கள் நடைபெற்றிருப்பதற்கான ஆதாரங்களும் பல உண்டு. இவற்று டன் பூனகரிப் பகுதியில் நெற் செய்கை நடைபெறும் பகுதிகளில் ஏராளமான பெருங்கற் கால தாழிகள் காண ப்படுகின்றது. வயல் உழப்படும் போது அங்குள்ள விவசாயிகள் இவற்றை தேவையற்றவை என எண்ணி அவை அனைத்தையும் எடுத்து ஒரு

> பூநகரியில் உள்ள ஒரு பிரதேசம் பாரம்பரியமாக 'ஈழ ஊர்' என அழைக்கப்பட்டு வந்ததை ஓலைச் சுவடிகளில் இருந்தும் ஆவணங்களில் இருந்தும் அறிய முடிகிறது.

மூலையில் குவித்து வைத்திருந்ததை எம்மால் அவதானிக்க கூடியதாக இருந்தது. இந்த தாழிகள் அப்பகுதியில் ஏராளமான பழங்குடிகள் இருந்தற்கான ஆதாரங்களாக கொள்ளலாம்.

பூநகரியில்உள்ள ஒருபிரதேசம்பாரம்பரியமாக 'ஈழ ஊர்' எனஅழைக்கப்பட்டு வந்ததை ஓலைச் சுவடிகளில் இருந்தும் ஆவணங்களில் இருந்தும் அறிய முடிகிறது.

இவற்றை எல்லாம் ஆதாரமாக வைத்து மிகப் பழைய காலத்தில் தமிழர்களின் புராதன அரசு இருந்ததை எம்மால் நிச்சயமாக கூறமுடியும்.

இதன் மூலம் தமிழ் மக்களுக்கு இத்தீவில் பூர்வீக ஆதாரம் இல்லை என்ற அச்சம் ரள்ளளவேனும் ஏற்பட வேண்டியதில்லை.

ஆகவே மேலும் மேலும் எமது பூர்வீகம் பற்றி பல ஆராய்ச்சிகளை நடத்துவதக்கு எமது மக்கள் மத்தியில் ஓர் வரலாற்று உணர்வு ஏற்பட வேண்டும். எமக்கு நிறுவன ரீதியான ஆதரவு இருக்க வேண்டும். இதில் இரண்டாவது விடையத்தில் எமக்கு பாரபட்சம் காட்டப்படுவதால் முதலாவது விடயமான வரலாற்று உணர்வு எம்மத்தியில் இருக்க வேண்டியது அவசியம், இதன் மூலம் இயற்கையாகவே நாம் எம்மை நிருபித்துக் கொள்ளலாம்.

இந்த விடயத்தில் எமக்கு பூநகரி பிரதேச ஆய்வுக்கு அப்பகுதி இளைஞர்களும் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களும் பெரும் பாடு பட்டு உழைக்கின்றனர். இதே போல் எம்மக்கள் எல்லோரது உதவியையும் நாம் எதிர் பார்க்கிறோம்.

## இரு ஆய்வாளர்களின் கருத்துக்கள்

இதன் மூலமே நாம் எமது தொல்பொருள் காட்சிசாலைகளையும் பூர்வீக ஆய்வுகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சுவடுகளை பாதுகாப்பதற்கென பிரதேச ரீதியில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஒவ்வொரு அருங் காட்சியகம் தேவை என்றதுடன் எமது தமிழ்ப் பகுதியின் தலைநகரமான திருக்கோணமலையில் ஒரு மிகப் பெரியதொல்பொருட்காட்சிச் சாலை இருக்க வேண்டும். இதுவே எமது வரலாற்றை பாகாப்பதற்கு எம்மால் செய்யக் கூடிய ஒரே முறையாகும்'

இவர் மேலும் கூறுகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இந்திய இராணுவ அழிப்பிற்கு முன்பிருந்த அரும் பொருட் காட்சிச்சாலையை மீண்டும் புதிதாத அமைப்பதற்கு ஏற்ற வகையில் அதற்கான தளபாட மற்றும் உபகரண வசதிகளை பல்கலைக்கழக துணைவேந்தரின் உதவியுடன் பெற்றுக் கொள்வதற்கு நாம் முயற்சி செய்து வருகிறோம்.

இவ்வாறு புதிதாக அமைக்கப்படும் தொல்பொருள் காட்சிச்சாலையில் காட்சிக்குவைப்பதற்கு என பல அரிய பொருட்களையும் சுவடிகளையும் ஏடுகளையும் நாணயங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும் இதற்கு எமது மக்களின் ஆதரவு என்றென்றும் இருக்க வேண்டும். நாணயங்களும் ஏடுகளும் எம்மால் மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடிந்தாலும் எம்மிடமிருந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனித எலும்புகளைப் பெற்று கொள்ள முடியாது என்பதை நினைக்கும் போதே மனம் கலங்குகிறது.

இந்த வகையில் இந்திய இராணுவத்தினரின் தாக்குதல்கள்எமது வரலாற்றையே நாசம் செய்வதாய் அமைந்துள்ளது என்றார்.

> நாணயங்களும் ஏடுகளும் எம்மால் மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள முடிந்தாலும் எம்மிடமிருந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனித எலும்புகளைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதை நினைக்கும் போதே மனம் கலங்குகிறது.
> இந்த வகையில் இந்திய இராணுவத்தினரின் தாக்குதல்கள் எமது வரலாற்றையே நாசம் செய்வதாய் அமைந்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக
வரலாற்றுத்துறைத் தலைவர்
க. சிற்றம்பலம் அவர்கள்

எமது தமிழ்ப்பகுதிக்கென ஓர் அரும் பொருட் காட்சிச் சாலையின் அவசியம் பற்றி யாழ்ப்பாண பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் அவர்கள் தமது கருத்தில் ''தமிழ் மக்கள் தமது முன்னோர்கள் பற்றிய அறிவை பெற்றுக் கொள்வதற்கும், இத்தகைய வரலாற்று அருஞ்

தொகுப்பு: தேசாந்திரி

---

# விண்வெளி விஞ்ஞானம்

## வெள்ளி அஸ்தமிக்கிறது

வெள்ளியைப் பற்றி தொடர்ந்து பார்த்து வந்தோம். இத்தொடரில் அதிக இடத்தைப் பிடித்துக் கொண்ட கிரகம் - வெள்ளி சோடாத்தண்ணீர்க் கடல் நிறைந்த கிரகம், பாலைவனம்போன்ற கிரகம், எண்ணெய்க் கடல்கள் நிறைந்த கிரகம், இப்படிப் பலவகையான கருத்துக்களுக்கு ஆளாகிய கிரகம் இது.

வெள்ளியைப்பற்றிய விபரங்களை இத்துடன் முடித்துத் கொண்டு. அடுத்த வாரத்தில் இருந்து செவ்வாய்க் கிரகம் பற்றிய விபரங்களைப் பார்ப் போம்.




வெள்ளியில் உள்ள பல விசேஷங்களுள் முக்கிய மானது, அது பின்னோக்கிச் சுழலும் கிரகம் என்பதாகும். வெள்ளி, பின்னோக்கிச் சுழல்கிறது என்று 1962 ஆம் ஆண்டில் உறுதியாக முடிவு செய்யப்பட்டது. 243 நாட்களுக்கு ஒருமுறை, அது தன்னைத் தானே பின்நோக்கிச் சுற்று கிறது.

1964 ஆம் ஆண்டில் பூமிக்குச் சமீபமாக வெள்ளி வந்தது. சுமாராக இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை வெள்ளி, பூமிக்குச் சமீபமாக வரும் 1964 ல் பூமிக்குச் சமீபமாக அதுவந்த போது ஏழு ராடார் நிலையங்கள் அதனைத் துருவித்துருவி, நுணுக்கமாக ஆராய்ந்தன 1966 ல் அது பூமிக்குச் சமீபமாக வந்த போதும் ராடார் நிலைங்ய களின் கணிப்புக்கு வெள்ளி உட்பட்டது.

வெள்ளியில் உள்ள நிரந்தரமான, மலைகள் போன்ற-அடையாளங்களை கண்ணால் தூரதரிசனக் கண்ணாடியினால் கூட, பார்க்கமுடியாது ஆனால் ராடார் அலைகளினால் அவதானிக்கக்கூடிய மலைகள் பீடபூமிகள் போன்ற வற்றை அவதானித்து, அதன்மூலம், வெள்ளியின் சுய சுழற்சிக் காலம் கணிக்கப் பட்டது இதற்குமுன் அதன் சுயசுழற்சிக்கால அளவு 250 நாட்கள் எனக் கருதினர் பின், 243 நாட்கள் என முடிவு செய்தனர்.

வெள்ளி தன்னைத்தானே சுற்ற எடுக்கும் காலமும், பூமியின் சுழற்சியுடன் பொருந்தியிருக்கிறது. உதாரணமாக, பூமியியும் வெள்ளியும், ஒன்றுக் கொன்று சமீபமாக நிற்கும் காலத்தில், வெள்ளியில் நின்று ஒருவர் பூமியைப்பார்த்தால், அவரது உச்சிக்கு மேலே பூமி தெரியும் அவருக்கு, அப்போது நடுநிசியாக - சாமமாக - இருக்கும் பின்னர், அவரைப் பொறுத்தவரை, சூரியன் ஐந்து தடவை வெள்ளியில் உதித்து. மறையும். ஐந்தாவது தடவை வெள்ளியிலே சூரியன் அஸ்தமித்த பிறகு - ஐந்தாவது நடு நிசியின் போது - சரியாக 575 நாட்களின்பின், பூமியானது மீண்டும் அவரது உச்சியிலே நிற்கும்.

□

## செவ்வாய் அறிமுகம்

இன்றைய விண்யுக மனிதனிற்கு பெரும் சந்தேகமாக இருப்பது கோடானு கோடி பிரபஞ்சக்குப்பையில் பூமிமட்டும் தான் உயிரினங்களைக் கொண்டதா அல்லது வேற்றுலகிலும் உயிரினங்கள் உள்ளதா?

இன்று பெரும் விஞ்ஞான சாச்சைக்குரிய விடயம் இது. போதாத நறைக்கு பறக்கும் தட்டுகள் என்ற பீதி கிளப்பி விடப்பட்டது. விடயம் மேலும் சூடுபிடித்தது.

## உடுவில் விவியன் நமசிவாயம்

இன்று விண்ணக ஆய்வில் இறங்கியுள்ள ரஷ்யாவும், அமெரிக்காவும் வேற்றுலக உயிரினவாய்வில் இறங்கின. நாம் தங்கியுள்ள சூரியத் தொகுதியில் இவர்களது முதல் உயிரினவாய்வு ஆரம்பமானது. இருபது ஆண்டுக் கணக்காக ஆராய்வில் ஈடுபடுகிறார்கள். முடிவுகள் ஏதுமில்லை.

இதற்குள் பிற நட்சத்திர மண்டலங்களை அலசுவதில் ஈடுபட்டுள்ளார்கள். சூரியத் தொகுதியில் உள்ளடங்கிய கிரகங்களை விட நட்சத்திரங்களை ஆய்வுசெய்வது இலகு. ஏனெனில் பூமியில் உள்ள வானியில் தொலை நோக்கிகள் சக்தி கூடியவை. அவற்றில் குறித்த தொலைவிற்கப்பால் உள்ளவை மட்டுமே தெரியும். அதனால் கிரகங்களை அவை கண்கணிக்க உதவமாட்டா. ஆகவே விண்கலங்களை அனுப்பியே கிரங்களை ஆராய வேண்டும். இந்த ஆய்வில் இரு வல்லரசுகளும் ஈடுபட்டவேளை வேற்றுப் பிரபஞ்சங்கள். நட்சத்திரங்களிலும் உயிரினவாய்வு நடந்து வருகின்றது.

இந்த வேற்றுலக உயிரின ஆய்வு எதற்காக

1. மனிதன் வாழக்கூடிய சாத்தியம் வேற்றுலகில் உண்டா என அறிவதற்கு
2. மனிதன் குரங்கிலிருந்து பிறந்தானா அவனும் ஒரு வேற்றுலக உயிரினமா என ஆய்வதற்கு
3. இதுவும் ஒரு விஞ்ஞான முன்னேற்றம் இவற்றை கூறியவர் அமெரிக்க விண்ணாய்வாளர்களின் ஒருவரான கார்ல் சாகன் (Carl Sayan)

சரி வேற்று நட்சத்திரமண்டலத்தில் மனிதனை வாழக் கூடிய சாத்தியங்கள் உள்ளன எனக்கொள்வோம். அது பூமியிலிருந்து பல நூறு கோடி மைல்கள் தொலைவில் இருக்கும் மனிதன் அங்கு சென்று குடியேறுவது சாத்தியமா?

ஆகவே இக்கருத்தைக் விடுவோம். இரண்டாவது கருத்தைக் கொள்வோம்...... அது சாத்தியமாகக் கூடியது. பூமியில் டைனோசர்கள் அழிந்த காலத்தின் பின் இன்றைய உலகம் பரிணமிக்கத் தொடங்கியது. பல உயிரினங்கள் தோன்றின. இவற்றின் பின் மனிதன் தோன்றினான். குரங்குகளின் பரிணாம வளர்ச்சியே இன்றைய மனிதன். சார்ள்ஸ் டார்வின் என்ற உயிரியலறிஞரின் கொள்கை. இது அவரால் ஊகிக்கப்பட்ட கொள்கை ஆனால் ஒரு சில ஆதாரங்களையும் காட்டியுள்ளார்.

கோடானு கோடியான பிரபஞ்சங்கள் இந்த அண்டத்தில்

(8ஆம் பக்கம் பார்க்க)

# இலக்கியத்தடம்

## ☐ ஒரு கடிதம்

எமது ஈழநாத வெள்ளி மஞ்சரி ஆசிரியருக்கு 19-5-90 ஆம் திகதி கிடைத்த கடிதம் இது. 27, மாவடி வீதி, பெரிய நிலாவணை வீதி - 02 கல்முனை என்னும் விலாசத்தினை சேர்ந்த நிலாவாசன் என்னும் இலக்கிய நண்பர் எழுதிய கடிதம். முதலில் கடிதத்தினைப் பார்ப்போம்.

"சென்ற 11-05-1990 அன்றைய ஈழநாதம் வெள்ளி மஞ்சரியைப் பார்வையிட்டேன். உண்மையில் ஈழநாத வெள்ளி மஞ்சரி 'தூய வெள்ளி மஞ்சரி' தான். ஆனாலும் ஒரு அசிங்கமும் கண்டேன். இதனால் பெரு வேதனையும் கொண்டேன். நியாயமான அவ்வசிங்கத்தினை உங்களிடம் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

11-05-1990 அன்றைய வெள்ளி மஞ்சரியில் 'தொண்டையூர் எஸ். குகன் என்றபெயரில் வெளியான "கல்மனம்" என்ற கவிதை ஏற்கனவே வீரகேசரி வாரவெளியீட்டில் (04-03-1990) 'மூதூர் மொகமட் ராபி' என்ற பெயரில் "நெஞ்சுரமிருக்குது தோழி" என்ற தலைப்பில் பிரசுரமாகியது என்பது தெட்டத்தெளிவு. இதில் கவிதைகளின் தலைப்புகள்தான் மாற்றம் அடைந்துள்ளதே தவிர ஒரு சொற்கூட கவிதையில் மாற்றம் அடையவில்லை என்பது வெட்ட வெளிச்சம்.

உண்மையில் ஒருவரின் ஒரே ஆக்கம் இரு பத்திரிகைகளில் பிரசுரமாவது மன்னிக்கப்படக் கூடிய ஒன்று ஆனால் ஒரே கவிதைக்கு இருவர் சொந்தம் கொண்டாடுவது "ஒரு பெண்டாட்டிக்கு இரு புருஷர்கள் போன்றது" என்றால் கூட பொருந்தாது. எனவே மேற்படி கவிதையின் உண்மைச் சொந்தக்காரர் யார்? என்பதை நீங்கள் என் போன்ற அனைத்து பத்திரிகைகளையும் வாங்கிப்படிக்கும் வாசகர்களுக்கு தெளிவுபடுத்துவதோடு இனிமேல் இப்படியான 'இலக்கியத் திருட்டு' 'இலக்கியப் பொறுக்கித் தனங்களுக்கு எமது அபிமானமிக்க ஈழநாதம் எவ்வகையிலும் துணைபோகக் கூடாது என்று கண்டிப்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

உண்மையில் 11-05-90ஆம் திகதி ஈழநாதம் வெள்ளிமஞ்

நிலாவாசன் எழுதியது போல 4-3-90 வீரகேசரிவார வெளியீட்டில் அக்கவிதை பிரசுரமாகவில்லை. 11-3-1990 வீரகேசரி வாரவெளியீட்டிலேயே பிரசுரமாகியுள்ளது.

மூதூர் மொகமட் ராபி எழுதிய கவிதையினை அப்படியே பிரதி பண்ணி (சில சொற்கள் மாத்திரம் மாற்றப்பட்டுள்ளன. பார்த்து எழுதும்போது விட்ட பிழையாக இருக்கலாம்.) கவிதையின் தலைப்பினை மாத்திரம் மாற்றி அனுப்பிய தொண்டையூர் குகனின் துணிச்சலை என்னவென்று சொல்வது?

## ☐ இலக்கியத்திருட்டுக்கள்

இவ்வகையான இலக்கியத் திருட்டுக்களும் தில்லு முல்லுகளும் காலம்காலமாக நடந்து வருகின்றன. சிலர் நூற்றுக்கு நூறு வீதமாக (தொண்டையூர் குகன் செய்தது போல) செய்கின்றனர். வேறு சிலரின் படைப்புகளில் ஒரு பகுதியோ சில பகுதிகளோ திருட்டுக்களாக இருக்கும்.

உண்மையான இலக்கிய ஆர்வமும், நேசிப்பும், தங்கள் ஆற்றல்கள்மீது அழுத்தமான நம்பிக்கையும் உள்ள இலக்கிய ஆர்வலர்கள் இவ்வாறான தவறுகளைச் செய்யமாட்டார்கள்.

எழுத்தாளர் என்றும் கவிஞர் என்றும் பிரசுரித்தலினால் கிடைக்கும் பிரபலத்திற்காகவே இவ்வாறான நடவடிக்கையில் சிலர் ஈடுபடுகின்றார்கள் என்றே கருத வேண்டி உள்ளது.

எதையாவது எழுத வேண்டும் என்ற ஆர்வம் கிளர்ந்தெழும் இளைய பருவத்தில் எழுதுவதெல்லாம் பிரசுரமாக வேண்டும். நம்மை யாராவது கவனிக்கவேண்டும் என்ற முனைப்பான எண்ணமும் இருப்பது இயல்புதான். எந்த எழுத்தாளருக்கும் ஆரம்பத்தில் இவ்வாறான எண்ணங்கள் இருந்தாலும் ஆரோக்கியமான விமர்சனங்களாலும், காத்திரமான இலக்கிய படைப்புக்களின் பரீட்சயம் தாம் சார்ந்த துறையின் மீதான அக்கறை, லட்சியம் போன்ற காரணங்களால் பத்திரிகைகளில் பெயர் வரவேண்டும் என்ற எண்ணங்களை கைவிட்டு வேறு நிலைக்கு மாறுகின்றனர்.

எனவே பெரும்பாலும் எழுதத் தொடங்கும் ஆரம்ப காலத்திலேயே பலர் பெயர் பிரபல்யம் போன்றவற்றில் அக்கறை உள்ளவர்களாக உள்ளனர்.

எல்லா இளைய தலைமுறையினரும் இப்படித்தான் என்று அர்த்தமில்லை. அல்லது அனுபவப்பட்ட எழுத்தாளர்கள் எல்லாம் பெயர் புகழில் நாட்டமில்லாமல் இருக்கின்றார்கள் என்றும் எடுத்துக்கொள்ளக்கூடாது.

## ☐ திருட்டுக்கான காரணங்கள்

எழுத ஆர்வம் உள்ளவர்கள் தமது படைப்புக்கள் பிரசுரமாகுமா? தகுதி உண்டா? இல்லையா என்று தமக்குள் சஞ்சலப்பட்டு பிரசுரித்தலை உறுதிப் படுத்திக்கொள்ள விரும்புகின்றனர்.

எனவே ஏற்கனவே பிரசுரமான கவிதை, கதைகளை (தரமற்றவை பிரசுரமானால் கூட) நகல் எடுத்து வேறுபத்திரிகைகளுக்கு அனுப்புகின்றனர். ஏற்கனவே பிரசுரமானவை தகுதியானவைதானே எனவே தமது பெயர்களுடன் அவை பிரசுரமாகும் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு உள்ளது.

இது எவ்வளவு கீழ்த்தரமான வேலை என்பது பற்றி இங்கு விபரிக்க வேண்டிய அவசியமில்லை என்றே நினைக்கின்றேன்.

உடனடியாகக் கிடைக்கும் பிரபல்யத்துக்காக இவ்வாறு செய்ய முனையும் இளைய தலைமுறையினர் ஆற்றல் உள்ள இலக்கியவாதிகளாக, ஆழமான பார்வையுள்ளவர்களாக கடைசிவரை வரமுடியாது என்பதைக் குறிப்பிட்டுத் தான் ஆக வேண்டும்.

**அழலாடிக்குட்டன்**

எழுதும் படைப்புக்களை தகுந்தவர்களிடம் காட்டி, செம்மைப்படுத்துங்கள். பத்திரிகைகளில் பிரசுரமாகவில்லை என்று சோம்பி இராமல் விடாது முயலுங்கள். காலக்கிரமத்தில் உங்கள் திறமைகள் வெளிக்கு வரும்.

யாருடையதிறமைகளையும் யாரும் மறைத்துவிடவும் முடியாது. மறுக்கவும் முடியாது சிலவற்றை சிலரால் சிலகாலம் மட்டுமே மறைக்க முடியும். எனவே உங்கள் திறமை மீது நம்பிக்கை வைத்துச் செயல்படுங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவீர்கள்.

## ☐ வேறு ஒரு வகை

சிலர் செயல்படுகின்றனர். இதனைக் கூட ஒருவகைத் தில்லுமுல்லுஎன்றே கூறலாம்.

ஒரே கதையினை பல பத்திரிகைகளுக்கு அனுப்புவது, ஒரே கதையினை பெயரை மாற்றி வெவ்வேறு பத்திரிகைகளுக்கு அனுப்புவது என்று பல விளையாட்டுக்கள் நடந்துள்ளன. நடக்கின்றன.

சிறுகதைப் போட்டிகளை பல மன்றங்கள், சங்கங்கள், அமைப்புக்கள் நடாத்துகின்றன. அவை நடாத்தும் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டாலும், கதைகளோ, கவிதைகளோ பெரும்பாலும் பிரசுரமாவதில்லை.

இது காரணமாக ஒரு போட்டியில் பரிசு பெற்ற கதை பெயர் மாற்றப் பட்டு வேறு போட்டிக்கு அனுப்பப் படுவது, கதையில் பெண் பாத்திரமாக இருப்பதை ஆண் பாத்திரமாக மாற்றி போட்டிகளுக்கு அனுப்புவதும் உண்டு.

இவ் விதமான செயற்பாடுகளால் தம்மை பரிசு எழுத்தாளர்களாகவும், ஏராளமான படைப்புக்களை படைப்பவர்களாகக் காட்டுபவர்களாகவும் பல எழுத்தாளர்கள் இருந்தனர் இருக்கின்றனர்.

எழுத ஆரம்பித்து உடனடியாக பிரகாசமாக மின்னும் நட்சத்திர எழுத்தாளர்களாக மாற பலர் பல அலுவல்களைச் செய்கின்றனர். இத்தகைய அலுவல்களால் அள்ளுண்டு போய் இலக்கிய உலகில் காணாமல் போனவர்கள் ஏராளம்.

இவ்விதமானவர்களை அளவுக்கு மிஞ்சி புழுகித் தள்ளி விமர்சித்து ஓகோ என்று உச்சத்துக்குக் கொண்டு போய் சேர்த்து தலைவீங்க வைக்க வென்றே ஒரு கூட்டம் இலக்கியப் பிரம்மாக்களும் நம் மத்தியில் உள்ளனர்.

ஒன்றிரண்டை எழுதி விட்டு தலை வீங்கி அது காரணமாக எழுதாமல் உள்ள கவிஞர்கள், எழுத்தாளர்கள், பலர் இப்போதும் இருக்கின்றனர்.

## ☐ சார்ள்ஸ்

சமீப காலத்தில் இலக்கிய உலகில் பிரவேசித்து படைப்புக்களைப் படைத்து வருபவர் 'சார்ள்ஸ்' என்னும் இளங் கவிஞரான விக்னேஸ்வரா ஐங்கரன்.

19 வயதான இவரின் ஆர்

பார்ப்பது இவரது வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதல்ல.

'சார்ள்ஸ்' எனனும் இளம் கவிஞரை முளையிலே நசுக்க வேண்டும் என்ற நஞ்சுத்தனமான எண்ணத்துடன் இங்கு இவற்றினை எழுத முனையவில்லை. சார்ள்ஸைப் போன்ற இளம் கவிஞர்கள் சீரான முறையில் வளர்ந்து எமக்கு பெருமை சேர்க்க வேண்டும் என்ற மேலான அவாவினாலேயே இதனை இங்கு கூற முனைகின்றேன்.

இவருக்கு இருக்கும் வசதிகளையும் (பொருளாதார வசதியையும் தான்) வாய்ப்புக்களையும் வைத்துக் கொண்டு இவரை யாரோ சிலர் (?) தவறாக வழி நடத்துகின்றார்களோ என்று நினைக்க வேண்டியுள்ளது.

04-05-90 ஈழநாதம்வெள்ளி மஞ்சரியில் 'ஹைக்கூ கவிதைகள் ஒரு நோக்கு' என்னும் இவரது கட்டுரைத் தொடர் ஆரம்பமானது.

06-05-90ல் தினகரன் வார மஞ்சரியில் அதே கட்டுரைத் தொடர் தலைப்பு மாற்றத்துடன் ஆரம்பமானது. ஒரே நேரத்தில் ஒரே கட்டுரைத் தொடரை பிரசுரத்திற்குக் கொடுப்பது என்பது எவ்வளவு தூரம் பொருத்தமானது.

ஒரு பத்திரிகைக்கு அனுப்பி அது பிரசுரிக்காமல் போகலாம். ஆனால் அதனை உறுதி செய்த பின்னரே மற்றப் பத்திரிகைக்கு பிரசுரத்திற்குக் கொடுக்க வேண்டும். (ஈழநாதத்தில் இக் கட்டுரைத் தொடர் வெளிவரத் தொடங்கிய பின்னர் தினகரனுக்கு பிரசுரிக்க வேண்டாம் என அவரால் தந்திகள் அனுப்பப் பட்டதாக அறிகின்றோம்.)

வளரும் இளம் கவிஞரான சார்ள்ஸுக்கு இது நன்மையான செயலாக இருக்க மாட்டாது. ஆழமான பயிற்சியும், தேடலும் இவருக்கு எவ்விதம் தேவையோ அவ்விதமே இவ்வாறான தவறுகளைத்தவிர்ப்பதும் அவசியமானது.

இவர் வெளியிட்டுள்ள ஏழு கவிதை நூல்கள் பற்றி அண்மையில் ஒரு பத்திரிகையில் இலக்கியக் குறிப்பில் பின்வருமாறு உள்ளது. (இலக்கியத் தடத்திலும் முன்னர் ஒரு தடவை இது பற்றிக் குறிப்பிடப்பட்டு உள்ளது.)

'ஆசிரியரிடம் ஒரு கேள்வி ஏழு தொகுப்புக்களுக்கும் வேறு வேறு பெயர்கள் இடப்பட்டிருந்த போதும் அனேக கவிதைகள் எல்லாம் புத்தகங்களிலும் திரும்புத்

## மனம் மீண்டும் தோட்டத்தில்..

வெள்ளிகள் சிதறி
வெளிச்சத்தில் போட்டியிடும்
வானம் மண்ணோடு
கைகுலுக்கும்.

மாடு அசை மீட்டிருக்கும்
குடிலின் முன், இலாம்பு
காற்றினை வெறுத்து
முகம் கறுத்திருக்கும்.

தொப்பிக் கட்டற்ற
கிணற்றடிச் சேற்றில்
இயங்கும் நீர்ப்பம்பி
இரைச்சலிலும் ஓர்அமைதி.

புழுதியை முகத்திலும்
புல்லினை முதுகிலும்
சுமந்தும் - நீள
சிரிக்கும் வாய்க்கால் நீர்.

வாய்க்காலின் வெண்மணலை
முத்தமிட்டு, மெல்ல
இழுத்து அணைத்து
வியர்க்கும் மண்வெட்டி.

பழங்கதை நினைவெழ
பாடல் பெருக
நித்திரை மறைவினில்
நிலவு கண் விழிக்கும்.

பனி முழுக்காடி
பசி தீர்ந்த வெண்காயம்
தன் நிறம் மாற்றி
'தன்னிறைவு' காட்டும்.

'கூட்'க்குரலோடு
பம்பி சோர்வுற
பாய்ச்சல் ஓய்ந்த நீர்
பஞ்சியில் கிடக்கும்.

எருது திமிர் முறிக்கும்
வண்டி தலை நிமிர்த்தும்,
நீளத் தெருவில்
மிதிபடும் நிழல்.

தோட்ட வெளியினில்
தோய்ந்த மனதினில்
வீட்டு நினைவுடன் வேகம்.
தெருவிளக்கின் மங்கலிடை
வீழ்ந்திருக்கும் விட்டிலுடன்
விளையாடும் நாய்கள்.

வீட்டு முற்றத்தில்
கைகால் அலம்ப
விடிந்தது போலே
கோழிகள் குதிக்கும்.

தேனீரின் சூட்டுடன்
திண்ணையில் சரிய

கொண்டாடுவது ''ஒரு பெண் டாட்டிக்கு இரு புருஷர்கள் போன்றது'' என்றால் கூட பொருந்தாது. எனவே மேற்படி கவிதையின் உண்மைச் சொந்தக்காரர் யார்? என்பதை நீங்கள் என் போன்ற அனைத்து பத்திரிகைகளையும் வாங்கிப்படிக்கும் வாசகர்களுக்கு தெளிவுபடுத்துவதோடு இனிமேல் இப்படியான 'இலக்கியத் திருட்டு' 'இலக்கியப் பொறுக்கித் தனங்களுக்கு எமது அபிமானமிக்க ஈழநாதம் எவ்வகையிலும் துணைபோகக் கூடாது என்று கண்டிப்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

உண்மையில் 11-05-90ஆம் திகதி ஈழநாதம் வெள்ளிமஞ்சரியில் தொண்டையூர் குகன் எழுதிய கல்மனம் கவிதை மூதூர் மொகமட் ராபி எழுதிய நெஞ்சுரமிருக்கிறது தோழி என்னும் கவிதையின அப்பட்டமான திருட்டுத்தான்.

தெழும் இளைய பருவத்தில் எழுதுவதெல்லாம் பிரசுரமாக வேண்டும். நம்மை யாராவது கவனிக்கவேண்டும் என்ற முனைப்பான எண்ணமும் இருப்பது இயல்புதான். எந்த எழுத்தாளருக்கும் ஆரம்பத்தில் இவ்வாறான எண்ணங்கள் இருந்தாலும் ஆரோக்கியமான விமர்சனங்களாலும், காத்திரமான இலக்கிய படைப்புக்களின் பரீட்சயம்' தாம் சார்ந்த துறையின் மீதான அக்கறை, லட்சியம் போன்ற காரணங்களால் பத்திரிகைகளில் பெயர் வரவேண்டும் என்ற எண்ணங்களை கைவிட்டு வேறு நிலைக்கு மாறுகின்றனர்.

வேறு நிலை என்று எதைச் சொல்வது என்றால் தமது பெயர் பிரபல்யம் பெறுவதைவிட தரமான ஆழமான இலக்கியப் பட்டைப்புகளைப் படைக்க வேண்டும் என்ற ஆர்வம் பிறக்கின்றது.

எழுதும் படைப்புக்களை தகுந்தவர்களிடம் காட்டி, செம்மைப்படுத்துங்கள். பத்திரிகைகளில் பிரசுரமாகவில்லை என்று சோம்பி இராமல் விடாது முயலுங்கள். காலக்கிரமத்தில் உங்கள் திறமைகள் வெளிக்கு வரும்.

யாருடையதிறமைகளையும் யாரும் மறைத்துவிடவும் முடியாது. மறுக்கவும் முடியாது சிலவற்றை சிலரால் சிலகாலம் மட்டுமே மறைக்க முடியும். எனவே உங்கள் திறமை மீது நம்பிக்கை வைத்துச் செயல்படுங்கள் நிச்சயமாக வெற்றி பெறுவீர்கள்'

### வேறு ஒரு வகை

இலக்கியத் திருட்டுக்கள் பற்றி சில விடயங்களை மேலே பார்த்தோம். அடிக்கடி பத்திரிகைகளில் பெயர் வரவேண்டும் அல்லது எல்லாப் பத்திரிகைகளிலும் பெயர் வரவேண்டும் என்றும் சேர்த்து தலைவீங்க வைக்க வென்றே ஒரு கூட்டம் இலக்கியப் பிரம்மாக்களும் நம் மத்தியில் உள்ளனர்.

ஒன்றிரண்டை எழுதி விட்டு தலை வீங்கி அது காரணமாக எழுதாமல் உள்ள கவிஞர்கள், எழுத்தாளர்கள், பலர் இப்போதும் இருக்கின்றனர்.

### சார்ள்ஸ்

சமீப காலத்தில் இலக்கிய உலகில் பிரவேசித்து படைப்புக்களைப் படைத்து வருபவர் 'சார்ள்ஸ்' என்னும் இளங் கவிஞரான விக்னேஸ்வரா ஐங்கரன்.

19 வயதான இவரின் ஆர்வமும் அக்கறையும் பாராட்டப்பட வேண்டியது.

ஆனால் ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தர் போல மிகக் குறுகிய காலத்தினுள் மாபெரும் சாதனை படைக்க வேண்டும் என்று இவர் எதிர் தேவையோ அவ்விதமே இவ்வாறான தவறுகளைத்தவிர்ப்பதும் அவசியமானது.

இவர் வெளியிட்டுள்ள ஏழு கவிதை நூல்கள் பற்றி அண்மையில் ஒரு பத்திரிகையில் இலக்கியக் குறிப்பில் பின்வருமாறு உள்ளது. (இலக்கியத் தடத்திலும் முன்னர் ஒரு தடவை இது பற்றிக் குறிப்பிடப்பட்டு உள்ளது.)

'ஆசிரியரிடம் ஒரு கேள்வி ஏழு தொகுப்புக்களுக்கும் வேறு வேறு பெயர்கள் இடப்பட்டிருந்த போதும் அனேக கவிதைகள் எல்லாம் புத்தகங்களிலும் திரும்பத் திரும்ப இடம் பெற்றுள்ளனவே ஏன்'

சார்ள்ஸ் அவர்களே அவசரப் படாமல் நிதானமாக வளருங்கள். வளமான எதிர் காலம் உங்களுக்கு உண்டு.

மிதிபடும் நிழல்.

தோட்ட வெளியினில்
தோய்ந்த மனதினில்
வீட்டு நினைவுடன் வேகம்.
தெருவிளக்கின் மங்கலிடை
வீழ்ந்திருக்கும் விட்டிலுடன்
விளையாடும் நாய்கள்.

வீட்டு முற்றத்தில்
கைகால் அலம்ப
விடிந்தது போலே
கோழிகள் குதிக்கும்.

தேனீரின் சூட்டுடன்
திண்ணையில் சரிய
தூக்க விழிகளுள்
மீண்டும் தோட்டம்.. ...!

நாக. சிவசிதம்பரம்.



கவிதை

## விருட்சமொன்று விளம்புகின்றது

ஆதவனின் அருள்
எங்களுக்குக் கிடைப்பதேயில்லை...
காலத்திற்குக் காலம்
பரம்பரை மரங்கள்
முன்னின்று தடுத்து
முன்னேற முட்டுக்கட்டைகளாய்...

விரும்பியோ
விரும்பாமலோ
வேரினூடு ஏறும்...
உணர்ச்சி வித்துக்களை
செயலிழக்கச் செய்த
குருட்டு நிழல்கள்-
அந்நிய ஒட்டுண்ணிகள்...
எங்களின் வளர்ச்சிக்கு
தடைக்கற்களாய்...

ஆனாலும்,
நிலைப்பின் உறுதி தளராத
பூக்களின் நுகர்ச்சி
அடிவானத்து ஆதவனாய்
அருள் பாலிக்கின்றதே!!

தயக்கமற்ற தளிர்ப்பின்
அந்தரங்க அவசியத்தை
யாரால் தடுக்க முடியும்?

- சத்தியன்

### பாராட்டும் விதம்

இலங்கையன் ஒருவன் முதல் முதலாக இலண்டனுக்குப் போயிருந்த சமயம், முன்னர் தனக்கு இலங்கையில் அறிமுகமான ஒரு ஆங்கிலக் குடும்பத்துடன் தங்கியிருந்தான்.

ஓர் இரவு, உணவுஉட்கொண்ட பின்னர் எல்லோரும் அமர்ந்து செஸ் விளையாடினர்.

முதலில் இலங்கையன் வெற்றி பெற்றான். 'லக்கி டோக்' -(அதிர்ஷ்ட நாய்) என்று அருகிலிருந்த வெள்ளை மங்கை பாராட்டினாள்.

என்ன நாயா....? என்று கோபித்தான் இலங்கையன்.

இல்லை... அதில் ஒன்றும் தாழ்வு இல்லை. நாங்கள் இங்கே அப்படித்தான்பாராட்டுவோம்... என்று சிரித்தாள் அவள்.

சிறிது நேரம் செல்ல மற்றொரு போட்டியில் ஆங்கிலப் பெண் பெரும் வெற்றியீட்னாள்.

இவன் அவளைப் பார்த்துச் சொன்னான் -'லக்கிபிட்ஸ்'.... (அதிஷ்டப் பெண்நாயே)

### காந்தீயம்

ராஜீவ் காந்தி 'இந்திய ஐக்கியத்தைப் பாதுகாக்க' உண்ணாவிரதம் இருந்தார். -செய்தி

ச்சே... இந்த யோசனை எங்களுக்கு வராமல் போச்சே அவர் எங்கள் ஐக்கியத்தை குலைத்த போது - ஒரு தென்னிலங்கை வாசி.

பிரான்சிலிருந்து பத்தாண்டுகளுக்குப் பின்னர் வீடு வந்தவர்-

இரண்டு வீடுகள் கட்டியிருக்கிறேன் என்று எழுதினாயே எங்கே...?

மனைவி: ஒன்று சிங்களப் படை குண்டுவைத்து தகர்த்தது. மற்றது இந்தியப்படை இருந்து உருக்குலைந்து கிடக்கிறது...

### பிழைக்கும் வழி

இராணி எலிசபெத் முடிசூடிய வெள்ளிவிழாக் கொண்டாட்ட காலத்தில் பத்திரிகைகளில இப்படியொரு விளம்பரம் வந்திருந்தது.

இராணி எலிசபெத்தின் அழகான படம் - 50 பென்ஸ் மட்டுமே (விலாசம்)

அதனைக் கேட்டு பணம் அனுப்பியவர்களுக்கெல்லாம் இராணியின் படம் பொறிக்கப்பட்ட அரை பென்ஸ் முத்திரை அனுப்பிவைக்கப்பட்டது.

பொலிஸ்: என்ன ஆடு திருடினவன்மாதிரி முழிக்கிறாய்?

திருடன்: ஐயோ... நான் திருடியது தேங்காயல்லோ...

### NOTHING...

அறிஞர் பேட்ரண்ட்ரஸ்ஸல் ஒரு இந்திய அறிஞருடன் பேசிக்கொண்டிருந்தார்.

பழங்கலைகளைப் பற்றி பேச்சு எழுந்தது. அப்போது, Indians Invented Nothing என்றார் ரஸ்ஸல். இதைக் கேட்ட இந்தியர் திடுக்கிட்டார். என்ன இந்தியர் எதையுமே கண்டுபிடிக்கவில்லையா...? என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

நான், இந்தியர் ஒன்றுமே கண்டுபிடிக்கவில்லை என்றா சொன்னேன். இந்தியர் கண்டுபிடித்தவற்றுள் மிகச் சிறந்தது கணிதத்தில் பூஜ்யம் அல்லவா? அதைத்தான் சொன்னேன் என்றார். Invented Nothing என்ற தொடர் பூஜ்யம் கண்டுபிடித்துள்ளீர்கள் என்றும் பொருள்படுவதைக் கண்ட இந்தியர் ரஸ்ஸலின் நகைச்சுவையை வியந்தார்.



'உன் பிறந்த நாள் எப்போ? ஒரு பரிசு தர விரும்புகிறேன்.'

தவறிவிட்டாய். நான், பிறந்தது பல ஆண்டுகளுக்கு முன்'.

நீதிபதி குற்றவாளியைப் பார்த்துக் கேட்டார்-உன் சார்பில் வாதாட ஒரு சட்டத்தரணி இல்லையா?

'அவசியமில்லை ஐயா...'

'சரி வழக்கை என்ன செய்ய வேண்டுமென்று நினைக்கிறாய்?'

'என்னைப் பொறுத்தவரை வழக்கை நான் விட்டுவிட ஆயத்தமாயுள்ளேன்.'

### சி. ரி. பி. அனுபவம்

அந்த விமானம் லண்டனுக்குப் பறந்து சொண்டிருந்தது.

பிரபல பத்திரிகையாளர் ஒருவர் அதில் பயணம் செய்தார்.

தொகுப்பு:
**எஸ். பி. கே.**

அவருக்குஅருகில்ஒமானுக்கு வேலை தேடிச் செல்லும் ஒருவர் அமர்ந்திருந்தார்.

அதுதான் அவரது முதல் விமானப் பயணம். இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். விமானத்தின் என்ஜின் ஒன்றில் ஏதோ பிரச்சினை என்று அறிவிக்கப்பட்டது.

ஓமான் பயணி உடனே எழுந்து சீற்றின் அடியில் பதுங்கிக் கொண்டார்.

பயப்பட ஒன்றுமில்லை எழுந்திரு எனறார் பத்திரிகையாளர்.

அவர் சொன்ன பதில் -

'எனக்குத் தெரியும் ஐயா... நான் சி. ரி. பி. பஸ்களில் பயணம் செய் திருக்கிறேன். என்ஜினில் பழுது வரும்போதெல்லாம் பிரயாணிகள் இறங்கித் தள்ள வேண்டும்.'

எழுத்தாளன்: இந்தப் புத்தகத்தை எழுத எனக்கு மூன்றாண்டுகள் பிடித்தன.

நண்பன்: மடையா... பத்து ரூபாய்க்கு ஒன்றை வாங்கியிருக்கலாம்.

### இக்பாலின் புகழ்

அரபுமொழிக் கவிஞர் இக்பால் பல மொழிகளில் புலமை பெற்றவர்.

அவர் எழுதிய 'ஹிந்துஸ்தான் அமாரா' என்னும் உருது கீதம் புகழ் பெற்ற ஒன்று.

அவர் பள்ளி மாணவராக இருந்தபோது ஒரு நாள் வகுப்புக்கு மிகவும் தாமதமாகச் சென்றார்.

''ஏன் இக்பால் இவ்வளவு காலதாமதம்?'' என்று கேட்டார், ஆசிரியர்

'' ஆசிரியர் அவர்களே, இக்பால் காலதாமதமாகத்தானே வரும்'' என்று உடனே பதில் அறிவித்தார் இக்பால்.

இக்பால் எனும் சொல்லிற்கு உருதுமொழில் 'புகழ்' என்று பொருள்.

# சிறைப்படாத சிந்தனைகள்



20 - 11 - 1989

நாய்வாலை நிமிர்த்த முடியாது! என்று சொல்வது இன்று மீண்டும் நிரூபிக்கப் பட்டுள்ளது. கொள்ளையடிக் கப்பட்ட பணங்களையும், பொருட்களையும் ஒழுங்காகத் தம்மிடம் ஒப்படைக்காத தமது 'தோழர்களை' E. P. R. L. F உம் TELO வும் தாங் களாகவே இந்தியாவின் கூலிப் படைகளிடம் ஒப்படைத்து விடுவது வழக்கம். சிலமாதங் கள் இங்கே இவர்கள் 'பதப் பட்ட' பின்னர் மீண்டும் தமது முகாம்களுக்குக் கூட்டிச் செல்வர். இவ்வாறு இங்கே வருபவர்கள் மீண்டும் சிவில் வாழ்க்கைக்குத் திரும்பமுடி யாது என்ற காரணத்தாலும் போராட்டம் என்பது இவர் களுக்குச் சம்பந்தமில்லாத, ஒத்துவராத காரணத்தாலும் மீண்டும் தமது இயக்கத்துக் குச் செல்வதும் வழக்கம். இவ்வாறு மாட்டுக்களவு சம் பந்தமாக இங்கே தடுத்து வைக்கப்படடிருந்த E. P. R. L F தோழர்' றமேஸ் என் பவர் அவரது 'இயக்க விசு வாசம்' காரணமாக மாகாண சபை உறுப்பினராக தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளார் என் றும் அறிந்தேன். இவ்வாறு இவர்கள் விடுதலையாகிச் செல்லும்போது பிஸ்டலைத் தூக்கிக்காட்டி 'வெளியே வாருங்கள் கவனித்துக்கொள் கிறோம்' என்று 'வீரவசனம்' பேசிச் செல்வதும் வழக்கம். இப்படியானவர்கள் இன்று மேஜருக்கு ஒரு விண்ணப்பம் எழுதியிருக்கிறார்கள். அதில் நாங்கள் இந்திய இராணுவத் துக்கு மட்டுமே விசுவாசமான வர்கள் என்றும் தங்களோடு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பலர் பொதுமக்கள் என்ற போர்வையில் இருக்கும் L.T.T.E இனர் என்றும் இது சம்பந்தமாக விசாரணை தேவை என்றும் வேறு சில பிரச்சினைகளும் அதில் குறிப் பிட்டிருந்தது. TFLO வைச் சேர்ந்த முத்துவேலுச்செட்டி யார் என்பவரே இக்கடிதத் தைத் தயாரித்து மற்றவர் களிடம் கையெழுத்து வாங் கியிருக்கிறார். தாங்கள் என்ன நிலையில் இங்கே இருக்கி றோம் என்பதையே மறந்து காட்டிக்கொடுப்பது ஒன்றே தம் கடமையெனச் செயலாற் றிக் கொண்டிருக்கின்றனர்.

இங்கே உண்ணாவிரத நிகழ்ச்சிகள் ஏதாவது நடந் தால் இவர்களுக்கு விஷேச மான சாப்பாடு கிடைக்கும். அப்போது இவர்கள் உண் ணாவிரதப் போராட்டம் பற் றியும் திலீபன் பற்றியும் கிண் டல்பண்ணிக் கொண்டேயிருப் பார்கள். உண்ணாவிரதம் முடிந்த அடுத்தநாள் எமது பையன்களிடம் இதேபோல மீண்டும் கிண்டல் செய்ய முனையும்போது உண்ணா விரதம் மட்டுமல்ல ஆயுதப் போராட்டமும் எமது வழி என்பதை நமது பையன்கள் உணர்த்துவதும் வழக்கம். ஆனாலும் ஒரு தொகுதி விடு தலையாகிச் சென்றால் அடுத்துவரும் தொகுதியும் இந்த வியாதியுடன் தான் வரும். தாங்களும் கைதிகள் என்பதை மறந்து இங்கே இவர்கள் செய்யும் அட்ட காசங்கள் அப்பப்பா...

I.P.K.F விசுவாசிகளும், TELO, E.P.R.L.F இனரும் மட்டுமே முன்னர் சமையல் செய்வதற்கு அனுமதிக்கப்படு வர். பெற்றோல் நிலையக் கொள்ளை சம்பந்தமாக இங்கே தடுத்து வைக்கப்பட் டிருந்த TELOவைச் சேர்ந்த யூட் இவ்வாறு சமையலுக்கு தெரிவுசெய்யப்பட்டவர்களில் ஒருவன். ஒருநாள் கைநிறைய உப்பை அள்ளிப் போட்டு தேநீர் தயாரித்துக் கொடுத் தான். சமையலறையில் வேலை செய்பவர்கள் தனி யாகச் சமையல்செய்து சாப் பிடலாம் என்று இருந்தபடி யால் அவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். வேண்டு மென்றே எமக்கு இவ்வாறு செய்தான்.

புதிதாகப் பிடிபட்டு வரும் பையன்கள் மிகவும் பேதலித்த நிலையில் வருவார்கள். கொஞ் சக்காலத்துக்கு இந்த நிலை நீடிக்கும். 'E' புளொக்கில் இவ் வாறு பிடிபட்டு வந்த சிறுவர் களிடம் பணம் முதலானவற் றைப் பறித்தெடுத்தார்கள் TELOவினர் தரமறுத்த பையன் ஒருவனிடம் கழுத்தை நெரித்துக் காசு பறித்தார்கள். அவர்களை மிரட்டிவாக்குமூலம் எடுத்து விசாரணை அலுவல கத்துக்கு அனுப்பினார்கள். கொஞ்சக் காலம் இந்தநிலை நீடித்தது.

இங்கே நடக்கும் எல்லா விடயங்களையும் இவர்கள் காட்டிக் கொடுத்து விடுவார் கள். இன்ன இன்ன வடிவத் தில் கடிதங்கள் உள்ளே வரு கின்றன. யார் யார் விடுத லைப் போராட்டம் பற்றிய உணர்வை பையன்களுக்கு ஊட்டிக் கொண்டிருக்கிறார் கள். I.P.K.Fக்கு தெரியாமல் எப்படித் தேநீர் வைத்துக் குடிக்கிறார்கள்? எல்லா விப ரத்தையும் ஒழுங்காகக் காட் டிக்கொடுத்து விடுவார்கள். காட்டிக்கொடுப்பதில் அப்படி ஒரு திருப்தி.

ஒரு காலத்தில் எல்லோரும் போராளிகள்தானே என்று ஒருநிலை இருந்தது. இருந் தது. அப்படித்தான் மக்கள் கேட்டார்கள். நிச்சயமாக நாங் கள் வெளியே போகும்போது எல்லோரும் போராளிகளல்ல. போராடியவர்கள், போராடுபவர் கள்தான் போராளிகள். மற்ற வர்கள் எமக்குத் தேவையில்லை என்று மக்கள் சொல்வார்கள். வெளியிலிருந்து வரும் செய்தி கள் இதைத்தான் எமக்குத் தெரிவிக்கின்றன' தங்கள் தலையில் தாங்களே மண்ணை அள்ளிப்போடும் இவர்கள் மக் களால் தூக்கியெறியப்படுவது நிச்சயம்.

இன்றைய சம்பவம் காசி அண்ணாவின்'நாயேம் உனக்கு ஒரு நாடா?' என்ற பாடலை நினைவுக்குக்கொண்டுவந்தது. அப்பாடலில் வரும் 'தாயார் புலம்புகின்ற வேளை மாற் றான் தாளைத் தழுவுகிற கோழை!' என்ற பகுதியை யும் 'காட்டிக் கொடுப்பது தான் தொண்டா? சொந்தக் கண்ணைப் பிடுங்குவது நன்றா?' என்ற பகுதியையும் நினைத்துக் கொண்டேன். வாலைநிமிர்த்த முற்படுவதை விட வாலை ஒட்ட நறுக்கு வதுதான் சரிபோல இருக் கிறது! □

# தாய்த் தமிழின் மண்!

ஊற்றாக நெஞ்சில் உருவான ஈழமெனும்
நாற்றுதனைப் போற்றி நல்லபடி வளர்த்தால்
-மாற்றானின்
கூட்டமது இங்கிருந்து கலைந்தோடும்; நிலையாக
தோட்டாக்கள் என்றும் துணை!

பாத்திரத்தை ஏந்திப் பாதையில் பிச்சைக்குக்
காத்திருக்கும் கயவர் கைவிலங்கு பூட்டுவதோ?
-பூத்திருக்கும்
சோலையிலே புகுந்துவிட்ட சிறுநரியை விரட்டுகிற
நாளையதே நம்மரிய நாள்!

காக்கவென வந்தவர் கன்னியரின் கற்பைப்
போக்குவதைத் தமிழினம் பொறுத்திடுமா?
-நோக்கமெலாம்
ஆக்கமன்றி அழிப்பதுதான் 'அகிம்சை' யென்றால்
தூக்கிடுவோம் துப்பாக்கி துணை!

தெள்ளு தமிழீழத் தென்றலினை நுகர்வதற்கு
கள்ளமதிக் கயவரவர் காலடியில் வீழ்வதிலும்
-வெள்ளமெனத்
துள்ளுகின்ற வீரமுடன் துணிந்து சென்றால்
நல்லபடி நாமடைவோம் நாடு!

முத்துதனைத் தேடி மூழ்குகின்ற கடலோடி
நித்தமும் தன்னுயிரைத் தூசியாய் நினைத்துப்
-புத்தியுடன்
அத்துறையில் இறங்குவதால் அள்ளுகின்ற
-முத்தைப்போல்
எத்தடையும் எம்முயர்வின் ஏணி!

காளையரும் கன்னியரும் கண்மணியாய் இருக்கையிலே
நாளைமலரும் நம்மினிய 'ஈழம்' என்று தோளுயர்த்தி
சூளுரைப்போம்; சுதந்திரத்தின் சுவாலையிலே
மீளுமெங்கள் தாய்த்தமிழின் மண்!

மு. வே. யோ. வாஞ்சிநாதன்




யாழ்ப்பாணத்திலே ...

ஒன்பது வயதிலே முதன் ...


அவர்களுடன் பல்வேறு நாட் டுக்கூத்துக்களை ஆடி வந்த தவர். இருவரும் சேர்ந்து கொழும்பில் பல நாடகங் களை மேடையேற்றியுள் ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக கொழும்பு சரஸ் வதி மண்டபத்தில் மேடை யேற்றப்பட்ட ''சங்கிலியன்'' நாட்டுக் கூத்தில் 'புகுந்தான் யோசேப்' சில்லையூர் செல்வ ராஜன் போன்றோருடன் நடித்ததை நினைவுகூர்ந்தார். வடபகுதி எங்கும் இவரது நாட்டுக்கூத்துக்கள் மேடை யேற்றப்பெற்றன, இலங்கை வானொலியில் இவரது நாட் டுக்கூத்துப்பாடல்கள் ''நாடக மேடைப் பாடல்கள் நிகழ்ச் சியில் ஒலிபரப்பப்பட்டமை ...

...னைந்து வருடங்களுக்கு முன் னர் தமது ஊரிலே உள்ள சென்மேரிஸ்முத்தமிழ் மன்றத் தில் கலையரங்கத் தலைவ ராக இருந்து அரும் கலைப் பணியாற்றி இருக்கிறார். பல நாடகங்களை சென்மேரீஸ் முத்தமிழ் மன்றத்தின் சார் பாகவும், தனிப்பட்ட வகை யிலும் மேடையேற்றி வந் திருக்கின்றமை குறிப்பிடத் தக்கது. அண்ணாவியார் 'அலசு' நாட்டுக்கூத்தின் அலசு வாக பாத்திரமேற்று பாடி நடித்ததை பலர் பாராட்டி யுள்ளார்கள்.

அண்ணாவியார் சிறந்தநாட் டுக் கூத்து நெறிப்படுத்துன ராகவும் ஒப்பாரிபாடுவதில் சிறந்த இசைஞானம் கைவரப் பெற்றிருக்கின்றார். ...

வருகின்றார். இந்த நாட்டுக் கூத்து கலை மூலம் எதுவித மான வருமானத்தையும் எதிர் பாராது ஒரு கலைச் சேவை யாகவே இவர் செய்வது குறிப்பிடத்தக்கதாகும். நாட் டுக் கூத்துக் கலையை வளர்ப் பதில் அரசினரின் ஆதரவு கிடைப்பதில்லைஎன வருத்தப் பட்டதுடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான கலா நிதிசி. மௌனகுரு, கலாநிதி அ. சண்முகதாஸ், கலாநிதி இ. பாலசுந்தரம், கலாநிதி இ. சவரிமுத்து அடிகளார் போன்றோர் ஆர்வத்துடன் உழைப்பதை பாராட்டினார்.

அண்ணாவியார் டானியல் அவர்கள் நெறிப்படுத்திய நாடகங்களுள் வேதசாட்சி ...



நாட்டுக்கூத்துமாமேதை ...

## கலாரதம்

# நாட்டுக்கூத்து மேதை அண்ணாவியார் டானியல் பெலிக்கான்

யாழ்ப்பாணத்திலே நாட்டுக்கூத்து கலை மரபுகளை பேணிப் போற்றி வளர்க்கின்ற இடங்களுள் ஒன்றாகநாவாந்துறைவிளங்குகின்றது. பல நாட்டுக் கூத்து கலைஞர்களையும் புலவர்களையும், எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் உருவாக்கித் தந்த பெருமை இக்கிராமத்தைச் சேர்ந்தது.

நாவாந்துறை வடக்குப் பகுதியிலே வசித்து வருகின்ற நாட்டுக் கூத்துக் கலைஞர் அண்ணாவியார் செ. டானியல் பெலிக்கான் அவர்களைச் சந்தித்து அவரது கலை அனுபவங்களையும் அவருக்கு இக்கலையிலுள்ள ஈடுபாடு பற்றியும் அறியும் முயற்சியே இச்சந்திப்பின் நோக்கமாகும்.

## கலைக் குடும்பம்

அண்ணாவியார் டயானியல் பெலிக்கான் அவர்களை ஈழநாதம் பத்திரிகை சார்பாக சந்திக்க நான் அவரது வீட்டிற்குச் சென்றிருந்த சமயம் அவர் நாடக விடயம் சம்பந்தமாகவே பல கலைஞர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். என்னை நான் முதலில் அவருக்கு அறிமுகம் செய்து கொண்டு வந்த நோக்கத்தையும் தெரிவித்தேன். முகம் மலர வரவேற்ற அண்ணாவியார் கூட இருந்த நாட்டுக் கூத்து கலைஞர்களுக்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்தார்.


அண்ணாவியார் டானியல் பெலிக்கான் அவர்கள் ஓர் உயர்ந்த கம்பீரமான மனிதர் 62 வயதிலும் நாட்டுக்கூத்தின் மீது தீராத ஆர்வம் உள்ளவராக இருக்கின்றார். இவர் ஓர் சிறந்த கலைஞர் மட்டுமல்லாது சிறந்த விளையாட்டு வீரராகவும் யாழ்ப்பாணத்தில் விளங்கியவர். சமூக சேவையிலும் ஈடுபாடு கொண்ட சிறந்த இசைக்கலைஞராகவும் விளங்குகின்றார்.

ஒன்பது வயதிலே முதன் முதலாக ''ஏழு பிள்ளை நல்ல தங்காள்'' என்ற பெண் பாத்திரம் ஏற்று நடித்ததில் இருந்து இத்துறையில் ஈடுபாடு கொண்டு உழைத்து வருகிறார். அண்ணாவியார் டானியல் குடும்பம் ஓர் கலைக் குடும்பம் இவரது தந்தையார் திரு. செபஸ்தியாம் பிள்ளை ஒரு நாட்டுக்கூத்துக் கலைஞராகவும் இசைப்பிரியராகவும் விளங்கியவர். இவர் தான் தனது மகனுக்கு ஆர்வத்தை ஊட்டி வழிகாட்டி நெறிப்படுத்தியவர். அதன்பிறகு புலவர் சூசைப்பிள்ளை, 'கலைக் கவி' நீ எஸ்தாக்கி. 'புகுந்தான்' ம. ஜோசப் ஆகியோர் இவரது கலை ஆர்வத்திற்கு பக்கத்துணையாக நின்றவர்களாவர் அண்ணாவியார் டானியல் பெலிக்கான் அவர்களது பிள்ளைகளான டானியல் அன்ரனி, டானியல் சவுந்திரன், டானியல் ஜீவா ஆகியோரும் எழுத்தாளர்களாகவும், கவிஞர்களாகவும் நாடக ஆசிரியர்களாகவும் விளங்கி வருகின்றார்கள்.

இவர் ஓர்சிறந்தநாட்டுக்கூத்துக் கலைஞராக இருந்தபோதிலும் எதுவிதமான பெருமையோ பெருமிதமோ இவரிடம் இல்லை என்பதனை நேரடியாக அவதானிக்க முடிந்தது. இவரது தம்பியார் திரு. செ.மைக்கல் ராஜா என்பவரும் சிறந்த நாட்டுக் கூத்துக் கலைஞராக விளங்குகின்றார்.

## நடிப்பும் பாட்டும்

அண்ணாவியார் டானியல் பெலிக்கான் அவர்கள் ஈழத்திலே வாழ்ந்த, அத்துடன் தற்பொழுது வாழ்ந்து வருகின்ற புகழ் பூத்த பல அண்ணாவிமார்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர் ஈழத்திலே சிறப்புற்று விளங்கி மறைந்த அண்ணாவியார் 'புகுந்தான்' ம. யோசேப் டுக்கூத்துக்களை ஆடி வந்தவர். இருவரும் சேர்ந்து கொழும்பில் பல நாடகங்களை மேடையேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் மேடையேற்றப்பட்ட ''சங்கிலியன்'' நாட்டுக் கூத்தில் 'புகுந்தான் யோசேப்' சில்லையூர் செல்வராஜன் போன்றோருடன் நடித்ததை நினைவுகூர்ந்தார். வடபகுதி எங்கும் இவரது நாட்டுக்கூத்துக்கள் மேடையேற்றப்பெற்றன, இலங்கை வானொலியில் இவரது நாட்டுக்கூத்துப்பாடல்கள் ''நாடக மேடைப் பாடல்கள் நிகழ்ச்சியில் ஒலிபரப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.வானொலியில் எல்லாமாக ஐந்து நாட்டுக்கூத்துக்கள் ஒலிபரப்பப்பட்டன. அவற்றுள் வீரத்தளபதி செபஸ்தியார், மத்



தேஸ்மகிறம்மா, கருங்குயில் குன்றத்தில் கொலை என்பன குறிப்பிடத்தக்கன. இவரது சிறந்த நாட்டுக்கூத்துக்களில் ஒன்றாக செபஸ்தியாரர் நாட்டுக் கூத்து விளங்குகின்றது. அண்ணாவியார் அவர்கள் செபஸ்தியார் நாட்டுக் கூத்தில்செபஸ்தியாராகநடித்துள்ளார் இதுவே இவரது சிறந்த நாட்டுக்கூத்து எனக்கருதுகிறார். ஒரு கட்டப்பாடல் வருமாறு,

''கட்டிக்கள்ளி நட்டணையாய்<br>
துட்ட வேடர்தான்-வில்லில்<br>
தொட்டு நெஞ்சை பூட்டிஅம்பை<br>
எய்யப் போறாரே''

இவர் இதை தனது கணீரென்ற குரலில் பாடியபோது நானே இசையில்வசமானேன்.

நமது நாட்டுக்கூத்து மரபுகளை பேணுகின்ற நந்நோக்குடன் அவர் தனிப்பட்ட ரீதியிலும், மன்றத்தினூடாகவும் தன்னாலான பங்களிப்பினை அவ்வப்போது செய்துவந்திருக்கிறார். இவர் பதி

சென்மேரிஸ்முத்தமிழ் மன்றத்தில் கலையரங்கத் தலைவராக இருந்து அரும் கலைப் பணியாற்றி இருக்கிறார். பல நாடகங்களை சென்மேரீஸ் முத்தமிழ் மன்றத்தின் சார்பாகவும், தனிப்பட்ட வகையிலும் மேடையேற்றி வந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. அண்ணாவியார் 'அலசு' நாட்டுக்கூத்தின் அலசுவாக பாத்திரமேற்று பாடி நடித்ததை பலர் பாராட்டியுள்ளார்கள்.

அண்ணாவியார் சிறந்தநாட்டுக் கூத்து நெறிப்படுத்துனராகவும் ஒப்பாரிபாடுவதில் சிறந்த இசைஞானம் கைவரப் பெற்றிருக்கின்றார். இவரை நாட்டுக்கூத்து கலையில் ஈடுபடச் செய்வதற்கு காரணங்களில் ஒன்றாக இருந்தது இவருக்கு இயல்பாகப்பாடுகின்ற திறமையே ஆகும். தங்களது ஊரிலே யாரும் இறந்துவிட்டால் இரவில் இறப்பு வீட்டிலும் பின்னர் வீட்டில் இருந்து சேமக்காலைவரை ஒப்பாரிப்பாடல்களை பாடுவதாக அவர் கூறினார்.

## தயாரிப்பும் நெறிப்படுத்தலும்

அண்ணாவியார் டானியல் அவர்கள் ஏறக்குறைய முப்பத்தைந்து நாடகங்களுக்கு மேல் நடித்துள்ளார் பல. நாடகங்ளைதானே தயாரித்து அந் நாடகங்கள் பலவற்றில் முக்கிய பாத்திரங்களை ஏற்றும் நடித்துள்ளார். தற்பொழுது பல நாடகங்களை தயாரித்தும்,நெறிப்படுத்தியும் வருகின்றர்ர். தற்பொழுது' ஏழு பிள்ளையும் நல்ல தங்காளும்' என்னும் நாட்டுக் கூத்தையும் பூநகரி குமுளமுனை கலைஞர்களுக்காக 'சஞ்சுவான்' நாட்டுக் கூத்தையும் நெறிப்படுத்தி வருகிறார். நாட்டுக் கூத்துக் கலையில் கொண்டுள்ள ஆர்வமும் ஈடுபாடுமே தன்னை இத் துறைக்கு மென்மேலும் இட்டுச் செல்ல உதவியது என அவர் கூறினார். அண்மைக் காலங்களாக நாளாந்த வாழ்க்கையின் பெரும் பகுதியினை நாட்டுக் கூத்து கலை வளர்ச்சிக்கே செலவழித்து

மான வருமானத்தையும் எதிர் பாராது ஒரு கலைச் சேவையாகவே இவர் செய்வது குறிப்பிடத்தக்கதாகும். நாட்டுக் கூத்துக் கலையை வளர்ப்பதில் அரசினரின் ஆதரவு கிடைப்பதில்லைஎன வருத்தப்பட்டதுடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்களான கலாநிதிசி. மௌனகுரு, கலாநிதி அ. சண்முகதாஸ், கலாநிதி இ. பாலசுந்தரம், கலாநிதி இ. சவரிமுத்து அடிகளார் போன்றோர் ஆர்வத்துடன் உழைப்பதை பாராட்டினார்.

அண்ணாவியார் டானியல் அவர்கள் நெறிப்படுத்திய நாடகங்களுள் வேதசாட்சிகள், விஜயமனோகரன், ஜெனோவா, மத்தேசு மஜிறப்மா, சங்கிலியன், ஞானசவுந்தரி கருங்குயில் குன்றத்தில், கொலை, நல்லதங்காள், சஞ்சுவான் என்பன குறிப்பிடத் தக்கன.

## நாவாந்துறைக் கலைஞர்கள்


எனது ஊராகிய நாவாந்துறையில் பல்வேறு கலைஞர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். இவர்கள் சிறந்த நாட்டுக்கூத்து தயாரிப்பாளர்களாகவும் புலவர்களாகவும், கவிஞர்களாகவும் இருந்தார்கள், இவர்களது முயற்சியினால் தான்பல நாட்டுக்கூத்துக்கள் இயற்றப் பெற்று, கையெழுத்துப் பிரதிகளாக எழுதப்பட்டிருந்தன.இவர்களது கையெழுத்துப் பிரதிகளைத்தான் தான் பயன்படுத்தி பல்வேறு நாட்டுக் கூத்துக்களை தயாரித்தும் நெறிப்படுத்தியும் நடித்தும் வருவதாககூறினார். இப்பகுதியில்வாழ்ந்துமறைந்த மூன்று புலவர்களின் நாடகப் பிரதிகள் தான் தனக்கு பெரிதும்பயன்பட்டன எனக் கூறினார். அவர்களுள் புலவர் மரியாம்பிள்ளை புலவர் நல்லையா அதிபர் கலைக் கவி நீ. எஸ்தாக்கி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் என்றார்.

நாவாந்துறைப் பகுதியிலே நாட்டுக் கூத்துக்கள் பெரும்பாலும் கோயில் திருவிழாவின் போதும் மற்றும் பொதுவான கொண்டாட்டங்களுக்கும் மேடையேற்றுவது வழக்கமாக உள்ளது.வருடத்தின்ஒவ்வொரு ஆவணி மாதத்தில் தான் பரலோக மாதா கோயிலில் வருடாந்த திருவிழா நடைபெறும் இக்காலங்களிலே கோவிலுக்கு நடைபெறுய் இக்காலங்களிலே கோவிலுக்கு முன்பாக அமைந்திருக்கும் மேடையிலே பல்வேறு நாட்டுக் கூத்துக்கள் நடைபெறும். இரவு தொடங்னால் அடுத்த காலைவரைட்கிம் விடியவிடிய நடைபெறுயுது வழக்கம். அண்ணாவிவாருடைய நாட்டுக் கூத்துக்யகள் பல மேடையேற்றப்படன. குறைந்தது ஒரு நாட்டுக் கூத்து எட்டு மணித்தியாலங்கள் வரை நடைபெறும்.

## நாட்டுக்கூத்து மாமேதைப் பட்டம்

அண்ணாவியார் டானியல் பெலிக்கான் அவர்கள் நாட்டுக் கூத்திலே பெரும்பாலும் கதாநாயகன் பாத்திரம் ஏற்று நடித்துவருகின்றார்.

பெண்பாத்திரங்கள் தாங்கி நடித்த நாடகங்கள் தான் தனக்கு பெரும் பாராட்டையும் புகழையும் தேடித் தந்ததாக கூறுகின்றார். யாழ். மேற்றாசனக் கோயிலின் கட்டிடநிதிக்காகநடாத்தப்பெற்ற எஸ்தாக்கியார் நாட்டுக் கூத்திலே ஸ்தாக்கியாரின் மனைவியாக ஏற்று நடித்தார் இவரது நடிப்புத் திறனைப் பாராட்டி யாழ். நவரச நாட்டுக் கூத்து கலாமன்றத்தின் சார்பில் யாழ்ப்பாண ஆயர் வண. தியோகுப்பிள்ளை தலைமையில் டாக்டர் பிலிப் அவர்களால் பொன் ஆடை போர்த்தி கௌரவித்து, 'நாட்டுக் கூத்து மாமேதை' என்ற பட்டத்தையும் வழங்கியமையும்இவரது நிலைமைக்கு ஓர் சாட்சியாகும். இவரது வீரத்தளபதி செபஸ்தியார் என்ற நாடகம் தான் அனைவரது பாராட்டையும் பெற்றது. அத்தோடு இவருக்கு பிடித்தமான நாட்டுக் கூத்தாகவும் இது அமைந்தது. இவர் பழக்கி நடித்த 'அலங்கார ரூபன்' என்ற நாட்டுக் கூத்து அண்மையில் வீடியோ படமாக தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கூடுதலான இளம் பெண்கள் நடிக்கின்ற சஞ்சுவான்' நாட்டுக் கூத்து இவராலேயே பழக்கப்பட்டு பின்னர் வீடியோ படமாகவும் தயாரிக்கப்பட்டது.



நாட்டுக்கூத்துமாமேதை பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுகிறார்

நாவாந்துறையில் சென்ற வருடம் நடைபெற்ற கலை விழாவிலே ஈழத்தின் சிறப்பாக வடபகுதியில் உள்ள மூன்று முதுபெரும் நாட்டுக் கூத்துக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். இவர்களுள் அண்ணாவியார் டானியல் பெலிக்கானும் ஒருவராகும். ஏனையவர்கள் அமரர் அண்ணாவியார் வி. வி. வைரமுத்து, அண்ணாவியார் வினசன்டிபோல் ஆகிய இருவராவர். இம் மூவருக்கும் இவ்வூர் மக்கள் பொன் ஆடை போர்த்தி பொற்கிழி வழங்கி கௌரவித்தமை ஈழத்தமிழ் நாட்டுக்கூத்து வரலாற்றில் முக்கிய நிகழ்ச்சியாக விளங்குகின்றது.

□

# சிறுகதை

## அவன்

அவனால்தான் நானிந்த நிலைமைக்கு வரமுடிந்ததென்பது எனக்குத் தெரியாததல்ல. நானுமொரு மனிதனென்றாகி நாலு பேருக்கு என்னையும் எனக்கு நாலுபேரையும் தெரிய நேர்ந்ததும் அவனால்தான்.

என்னுடன் சேர்ந்தே பிறந்து வளர்ந்தவன். ஆனாலும், சின்ன வயதில் அம்மாவிடங் கேட்ட கதைகளிலும், ஐயாவும் அப்புவும் வாங்கித்தந்த புத்தகங்களிலும், வரதலிங்க வாத்தியார் வியாசங்களுக்குப் போட்ட 'நன்று' 'மிகநன்று' களிலும் என்னை முந்திக்கொண்டு வளர்ந்தவன் அவன்தான். இதெல்லாம் பிறகுதான் தெரிய வந்தது. அவன் என்னோடிருப்பதை நானறிய நேர்ந்ததே என்பதின் வயதுகளின் பின்னடியில்தான்.

தன்னை அவன் இனங்காட்டப்போய் அதனால் நான்தான் அடையாளங் கொண்டேன். இருபது ஆண்டுகள் இப்படிப் போயின. இந்த இடையில்தான் எத்தனை நடந்தது...

ஆள் வலு சுழியன், பலபேர் கண்களிற்படாததெல்லாம் அவன் கண்ணிற்படும் அதையெல்லாம் நான் மற்றவர்களுக்குச் சொல்லப்போய்க் கண்டதென்னவோ, கண்டனந்தான் அதிகம்.

ஆனால், காலம் பிறகு அவனைச் சரியென்று சொன்னது. எதிர்த்தவர்கள் இகழ்ந்தவர்கள்கூட இதை ஏற்க நேர்ந்தது.

இவற்றாலெல்லாம் நான் நம்பிக்கை கொண்டேன். பிறகும் அப்படியே தயங்காது அவனை அநுசரித்தேன்....


நிலைமைகள் மாற மாற எதிர்பாராதது ஏதேதோவெல்லாம் நடந்ததில் நான் எச்சரிக்கையானேன். அவனால், அவன் சங்காத்தத்தால் பிரச்சினை வரும்போல் தெரிந்தது. ஏன் வீண் சிக்கலை? கொஞ்ச நாளைக்கு ஆளை விட்டு மெல்ல ஒதுங்கியிருக்க முடிவெடுத்தேன்

சரியில்லாத வேலைதான்; மனதுக்குக் கஷ்டந்தான். ஆனால் என்ன செய்ய?

இவ்வளவும் புரிந்தவனுக்கு இதைப் புரிந்துகொள்வதா, கஷ்டம்?

'எவ்வளவு பயமெடா உனக்கு...' என்று சிரித்துவிட்டுப் போனான்.

எப்படியிருந்தாலும்அவனால் வந்த அடையாளம் இருக்கவே செய்தது. அவனை விலக்கி விட்டு அவன் தந்த அடையாளத்தை மட்டும் நான் அணிந்திருப்பது சரியில்லை என்றும் உறுத்தும் மனது....



—சாந்தன்—

பிரச்சினைக் காலங்களிலும் அவன் பலதடவை சந்தித்தான். பலவற்றைச் சுட்டினான், சொன்னான். நான்தான் கண்டதாயே காட்டிக்கொள்ளவில்லை. அவன் சொல்வதெல்லாம் சரி. சத்தியம் என்று புரிந்தது. ஆனால் அவனுக்காக என்னைத் தியாகம் பண்ணும் துணிவு என்னிடமிருக்கவில்லை. இப்படியே அவனைக் கைவிடுவதால் நஷ்டம்எனக்கேயென்பதும் நல்லாய்த் தெரியும். நிலைமை கொஞ்சந் திருந்தட்டும், ஆளை எங்கும் விலகவிடாமல் என்னுடனேயே இருக்கவைத்து வட்டியும் முதலுமாக இரட்டிப்பு வேலை வாங்கிவிடவேண்டும்

திருந்தியது. ஆனால் அவனைத்தான் கனநாள் காணவில்லை. புறக்கணித்த கோபத்தில் போயிருப்பானோ?போயிருந்தால் எவ்வளவு பெரிய இழப்பு! எனக்கென்று பிறகு என்ன அடையாளம்? பலரைப் போல் நானும் பழம்பெருமை பேசித்தான் போக்கவேண்டும் மீதி நாளை!

இல்லை; நல்லகாலம், எதிர்பாராமல் ஒருநாள் தேடிவந்தான் அலுவலகத்திற்கு, ஒரு மத்தியானம். அவன எப்போது வருவான், எங்கே வருவான் எனபதெல்லாம் சொலலமுடியாது. சித்தன்போக்கு சிவம் போக்கு.

ஒன்றுமட்டும் புரிந்தது: நான் அவனை விட்டாலும் அவன் என்னை விடமாட்டான்!

கல்லும் நாயுமாய் அவனும் அவகாசமும் கொஞ்சநாள் ஒளித்து விளையாடினார்கள்....

இப்படி நெடுகவிடக்கூடாதென்றிருந்தேன ..

இன்று, பொழுதுபட, இப்படித்தான்— அலைச்சல்கள், அலுவல்கள் எல்லாம் முடித்து ஆறுதலாக ஒரு புத்தகமுங் கையுமாய்ச் சரிந்தபோது...

புத்தகத்தைக் கண்டுவிட்டோ, என்னவோ, அவன் எங்கிருந்தென்றில்லாமல் வந்துசோந்தான்.

இன்றைக்கு நான் ஆளை விடவில்லை.

□

## எழுதாதகடிதம்

மதிப்பிற்குரிய மனிதருக்கு,

உங்கள் முகம் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. -அதை முதலும் கடைசியுமாக ஒரேயொரு தடவைதான் கண்டிருக்கிறேன். என்றாலும், உங்களவர்கள் எல்லோரதும் போன்ற ஒரு முகந்தான். ஆனால், முறுக்கிய கூர் மீசைக்குப் பின்னால் ஒரு குழந்தை எட்டிப்பார்த்தது; அதுதான் வித்தியாசம். அதுவே பெரிய வித்தியாசமில்லையா?

தொப்பி கழற்றிய தலையின் நரையோடிய நெளிமயிர்கள் நெற்றியில் அழுத்தியிருந்தன. என்னிலும் பார்க்க ஏழெட்டு வயதாவது கூட இருக்கலாம் உங்களுக்கு....

உங்களெல்லாரையும் சேர்த்துப் பார்க்கிறபோது, முருங்கை மரத்தில் அப்பியிருக்கிற மயிர்க்கொட்டிகளும் சாரியாய் ஊரும் ஒழுக்கெறும்புகளுந்தான் என் நினைவுக்கு வருவன. அன்றைக்கும் அப்படித்தான் போனீர்கள், ஒழுக்கெறும்பு வரிசைபோல... மதிலைத் தாண்டிப் பாய்ந்து வளவை ஊடறுத்து வெட்டிவிட்ட பின்வேலிக்கண்டாயத்தால் அடுத்த வளவிற்குள்...

மரத்தடியில் வெறித்தபடி நின்ற என் முகத்தில் எதைக் கண்டீர்கள்? பெரிதாய் எதையோ பிடிக்கப் போகிறவன்போல் பெரும் நடப்பாய்ப் போன அந்த விறைத்த முகத்துத் தலைவன் பின்னால் ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரி...

அங்குமிங்குமாய் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஏதோ சொல்லிக்கொண்டு போனவர்களிடை நீங்களும் வந்தீர்கள். என்னருகில் தாண்டும்போது நீங்கள் சொன்னவை:

'நாங்கள் போகத்தான் வேண்டும்... நான் திரும்பிப் போக விரும்புகிறேன்...'

அந்த ஆங்கிலம் சரியாய் இருந்தது. அந்த இரு வரிகளும் ஆயிரங் கதைகள் சொல்லின. நான் புரிந்துகொண்டு நிமிர்வதற்கிடையில் நீங்கள் வேலியடிக்குப் போய் விட்டீர்கள்...

அந்தக் குரலும் குழந்தை முகமும்... உங்களைப்போல் இன்னும் வேறுபேர் இருத்திருக்கலாம். ஆனால் எய்யப்பட்ட அம்புகள் நீங்கள்...

இது நடந்து ஒரு வருஷமிருக்கும். இப்போது நீங்கள் சந்தோஷமாய்ப் போயிருக்கலாம்... எங்கிருந்தாலும் வாழ்க!

மிக்க நன்றி... எம்மைப் புரிந்துகொண்டமைக்கு...

□

## நன்றி

மணியத்தார் திருப்தியாக ஒரு ஏவறை விட்டார். செம்பில் நாலுமிடறு தண்ணீர் குடித்தார்.

இலையைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்த போது பின் முற்றத்தில் நின்ற சிவப்பி கண்களிற்பட்டது.

இன்னும் இங்கதான் நிக்கிறியோ...?'

— இலையை எறியாமலே திரும்பி உள்ளே வந்தார்.

சிவப்பி வாலை ஆட்டுவதாக நினைத்து முழு உடம்பையும் ஆட்டிக்கொண்டு சந்தோஷித்தது.

'ஏன் இலையைத் திருப்பிக் கொண்டு வாறியள்?'

— மனைவியின் கேள்விக்கு மணியத்தார் பதில் சொல்லாமல் முறைத்தார்.

'போய் ஒரு விறகுகட்டை கொண்டாணை...'

'அது பாவம்.... நிண்டிட்டுப் போகட்டும்...'

'பெட்டைச் சவத்தை வளத்துப்போட்டுக் குட்டிகளைக் காவுறது ஆர்?'

'தெருவிலை நிண்டதைப் பெட்டையெண்டும் பாராமல் பிடிச்சுக்கொண்டு வந்தது நீங்கள்தானே...?'

மணியத்தாருக்கு அடக்கமுடியாமல் கோபம் கிளர்ந்தது.

மனைவி ஓயவில்லை:

'...பெட்டையெண்டாலும் அதை நம்பித்தானே இருந்த நாங்கள், இவ்வளவு நாளும்...'


'அது அப்ப . இனி என்ன சவத்துக்கிதை ..?'

அவர் விறகுகட்டை. தேடப் போனார்.

சிவப்பி இன்னமும் வாலை ஆட்டிக்கொண்டு அண்ணாந்து வாசலைப் பார்த்தபடி நின்றது.

□

## ஒரு பாடலின் அவசியம்....



ஒவ்வொரு நிமிஷம் நான்
சிதைக்கப்படுகிறேன்
எனது ஆன்மா எந்நேரமும்
முடமாக்கப் பட்டுக்கொண்டிருக்கிறது.
என் சுதந்திரம் அடிக்கடி
பரிசீலனைக்கு உட்படுத்தப் படுகிறது.
எனது உடல் திறந்த வெளிக்கட்டடமாய்
சிதைபடுவதும் பின் சீர்திருத்தப்படுவதுமாக..... ..
வேலைகளோ வெகு மும்மரமாக.
எனக்காகக் காத்திருக்கும் பிரியநண்ப,
என் பாவங்கள், பலவீனங்களின் தன்மைகள்
உனக்குப் புரிகிறதா ?
இந்த இரத்தக் கடியல்களையும்
நகப்பிராண்டல்களையும் மறைக்க
நான் அணிந்துள்ள சிகப்புப் போர்வையின்
காரணங்கள் உனக்குப் புலப்படுகிறதா.......?
ஒவ்வொரு மாலை வேளைகளிலும்
உன் விடியலை நீ அடையாளம் காண்பாயாக
நீ சுதந்திரமான பறவை ஆவாய்
அதற்கேற்ப விடியல் நேரங்களில் நீ
உரத்துப் பாடுவாயாக.
என் சக்தியின் ஆளுமைப்பட்டன
அணி திரள,
என் பாடல்களை உன்குரல்
பரிச்சயங் கொள்ள,
உன் பாடல் அவசியம்.
ஒடிந்து போன என் ஆன்மாவையும்
உசுப்புவதாக ஒரு பாடல் பாடு
என் உடலின் குருதியின் கடைசித்துளியும்
காயும்வரை, உன்பாடல்களிற்கேற்ப
துலங்கல்கள் காட்டும்.

மைதிலி அருளையா □

---

தகங்களை தமிழ்த் தாய்ப் பதிப்பகம் வெளியிட்டால் நல்லது.''

வருடத்தில் ஒரு நாள் ஏப்ரல் முட்டாள் தினம்

கட்காகப் பாடுகின்றார்கள். தொழிலாளர் தினத்தில் படக் காட்சிகட்கு வகுப்புபேதம்

பான்மை இனத்தினர்)வடித்த நீலிக்கண்ணீர் கொழும்பில் அரங்கேறியுள்ளது. எமது உரி

றைய தேசிய வாதிகளான கொல்வின், டாக்டர் என் எம். ஆகியோரைப் பிரிட்டிஷ்

பிக்கை கொண்டேன். பிறகும் அப்படியே தயங்காது அவனை அநுசரித்தேன்....

நிலைமைகள் மாற மாற எதிர்பாராதது ஏதேதோவெல்லாம் நடந்ததில் நான் எச்சரிக்கையானேன். அவனால், அவன் சங்காத்தத்தால் பிரச்சினை வரும்போல் தெரிந்தது. ஏன் வீண் சிக்கலை? கொஞ்ச நாளைக்கு ஆளை விட்டு மெல்ல ஒதுங்கியிருக்க முடிவெடுத்தேன்

சரியில்லாத வேலைதான்; வில்லை. இப்படியே அவனைக் கைவிடுவதால் நஷ்டம்எனக்கே யென்பதும் நல்லாய்த் தெரியும். நிலைமை கொஞ்சந் திருந்தட்டும், ஆளை எங்கும் விலகவிடாமல் என்னுடனேயே இருக்கவைத்து வட்டியும் முதலுமாக இரட்டிப்பு வேலை வாங்கிவிடவேண்டும்

திருந்தியது. ஆனால் அவனைத்தான் கனநாள் காணவில்லை. புறக்கணித்த கோபத்தில் போயிருப்பானோ? போயிருந்தால் எவ்வளவு பெரிய

## எழுதாதகடிதம்

மதிப்பிற்குரிய மனிதருக்கு,

உங்கள் முகம் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. -அதை முதலும் கடைசியுமாக ஒரேயொரு தடவைதான் கண்டிருக்கிறேன். என்றாலும், உங்களவர்கள் எல்லோரதும்

மாதா...

அங்குமிங்குமாய் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஏதோ சொல்லிக்கொண்டு போனவர்களிடை நீங்களும் வந்தீர்கள். என்னருகில் தாண்டும்போது நீங்கள் சொன்னவை:

'நாங்கள் போகத்தான் வேண்டும்... நான் திரும்பிப் போக விரும்புகிறேன்...' அந்த ஆங்கிலம் சரியாய் இருந்தது. அந்த இரு வரிகளும் ஆயிரங் கதைகள் சொல்லின. நான் புரிந்துகொண்டு நிமிர்வதற்கிடையில் நீங்கள் வேலி

யாமல் கோபம் கிளர்ந்தது.

மனைவி ஓயவில்லை:

'...பெட்டையெண்டாலும் அதை நம்பித்தானே இருந்த நாங்கள், இவ்வளவு நாளும்...'


'அது அப்ப . இனி என்ன சவத்துக்கிதை ..?'

அவர் விறகுகட்டை. தேடப் போனார்.

சிவப்பி இன்னமும் வாலை ஆட்டிக்கொண்டு அண்ணாந்து வாசலைப் பார்த்தபடி நின்றது. □

உன் பாடல் அவசியம்.
ஒடிந்து போன என் ஆன்மாவையும்
உசுப்புவதாக ஒரு பாடல் பாடு
என் உடலின் குருதியின் கடைசித்துளியும்
காயும்வரை, உன்பாடல்களிற்கேற்ப
துலங்கல்கள் காட்டும்.

**மைதிலி அருளையா** □




□ வசாவிளான், கட்டுவன் நிலைமைகள்

□ தமிழ்த் தாய் பதிப்பசம் திறப்பு விழா.

□ யாழ்ப்பாண கச்சேரிஉயர் அதிகாரிகளின் ஆடைகள்

"போனகிழமை வசாவிளான், கட்டுவன், மயிலிட்டிப் பக்கம் போனனான்'' என்றான் விக்கி.

"கனகாலமாய் அந்தப் பக்கம் போகேல்லைப் போல–'' என்றான் சவுந்திரம்.

"எப்படி இருக்கு'' என்று கேட்டான் தாடிமாமா.

''அந்தப் பக்கங்களைப் போய்ப் பாக்க எவ்வளவு வேதினையாய் இருக்கு தெரியுமே.

''வசாவிளான் சந்தி, கட்டுவன் சந்தி எல்லாம் எப்படி பாழ்பட்டுப் போய் இருக்கு தெரியுமே. எவ்வளவு வீடுகள் கோயில்கள் எல்லாம் எப்படி நாசமாய் போய் இருக்கு எவ்வளவு தோட்டக் காணியள்.''

"யாழ்ப்பாணம் ரவுணையும் சுத்தியுள்ள இடங்களையும் பாத்தால் ஏதோ கனவு உலகத்தில் வாழுற மாதிரி இருக்கு. அங்காலை போனால் தான் உண்மையான நிலை தெரியுது.''

''உதுகள் எல்லாம எப்ப சீர் திருந்துறது. உந்த வீடுகள் எல்லாத்திலையும் சனங்கள் போய் எப்ப குடியேறி பழையபடி தோட்டங்கள் செய்து தங்கடை சீவனோபாயத்தைப் பாக்கிறது. யோசிச்சுப் பார்க்க எவ்வளவு கவலையாய் இருக்கு''

''இப்பவும் உடைஞ்ச கனவீடுகளில் சிறிலங்கா ஆமியும் சிறிலங்கா ஏயா போர்ஸ்சும் இருக்கினம்.'' □

''அண்டைக்கு யாழ்ப்பாணம் பஸ் ஸ்ராண்டுக்கு முன்னுக்கு தமிழ்த்தாய் பதிப்பகம் திறப்பு விழாவுக்குப் போனனியே விக்கி' எனக்கேட்டான் தாடிமாமா.

''இல்லை அண்டைக்கு எனக்கு வேறை வேலையாய் போச்சு.

### அயக்கிரீவன்

அதால போகேல்லை. ஏன் என்ன நடந்தது.'' என்றான் விக்கி.

''இல்லை. அங்கை எழுத்தாளர்மார். கவிஞர்கள் எண்டு கன பேர் வந்தவையாம்.''

''வந்து என்ன நடந்ததாம்.''

''வந்த ஆட்களில கன பேர் பேசினவையாம்.'

''ம் என்னவாம்''

''பேசின ஆட்கள் ஒருத்தரும் இப்ப எங்களுக்கு எப்பிடியான நூல்கள் தேவை எண்டதைப்பற்றி ஒண்டுமே சொல்லேல்லையாம். எங்கடை ஆட்கள் கனபேருக்கு எந்த இடத்திலை என்ன பேசிறது எண்டோ, எப்படியான பிரயோசனமான அலுவலைப் பாக்கிறது எண்டோ தெரியாது.''

''ஆர் என்ன தான் சொன்னால் என்ன சனங்களுக்கு பிரயோசனமாய் இருக்கக்கூடிய புத்தகங்களை தமிழ்த் தாய்ப் பதிப்பகம் வெளியிட்டால் நல்லது.''

'ஓமோம் அது உண்மைதான் எங்கடைசனம் இன்னும் எந்த விசியத்திலையுமே வெற்றி பெறேல்லை தீண்டாமை பொருளாதாரம், சமூகம், பெண் விடுதலை எண்டு எதை எடுத்தாலும் ஒரே தன்மைதான். ஆனபடியால் இன விடுதலையோடு இப்படியான பிரச்சனைகளில நாங்கள் விடுதலை பெற எழுத்தாளர்மாரும் எழுதவேண்டும். அவையின்ரை புத்தகங்களை தமிழ்த் தாய் பதிப்பகம் போல இருக்கிற பதிப்பகங்களும் வெளியிட வேணும்.'' □

''அண்டைக்கு கச்சேரிக்கு போனனான்.''

''அலுவல் இருந்தால் போகத் தானே வேணும்.''

''அங்கை ஒரு புதினம்.''

''என்னடாப்பா'' என விக்கி கேட்டான்

''அங்கை இருக்கிற கன பெரியாட்கள், அதுதான் உயர் அதிகாரிகள். சிங்கள ஆட்கள் போடுற மாதிரி கெலர் வைச்சு சேட் போட்டு இருக்கினம்''

''ஏனாம்.''

''இல்லை. அவை ரை கட்டிக் கொண்டு வரவேணும் எண்டு அரசாங்க உத்தரவாம்''

''ரை கட்டுறதைத் தட்டிக் கழிக்கத்தான் உந்த விளையாட்டு. சிங்கள ஆட்கள் மாதிரி அரைக்கை ஜிப்பா.''

''அதுக்கென்ன போடட்டுமன்''

''ரை கட்டுறது வெள்ளைக்காரன் விளையாட்டு உந்த அரைக்கை ஜிப்பா போடுறது சிங்கள ஆட்களின்ரை உடுப்பு மாதிரி ஏன் நாங்கள் உதுகளை எல்லாம் கையை விட்டுப் போட்டு எங்கடை தமிழரின்ரை கலாசாரத்தின்படி வேட்டி நாசனல் சால்வை போட்டால் என்ன'' எனக் கேட்டான் விக்கி. □

வருடத்தில் ஒரு நாள் ஏப்ரல் முட்டாள் தினம் வரும். அது எம்மை வருடத்தில் ஒரு நாள் மாத்திரமே ஏமாளி ஆக்குகின்றது. ஆனால் ஏப்ரல் பூல் தினத்துக்குப் பின்பு இந்நாட்டுத் தமிழ் மக்களையும், நாடு தழுவிய தொழிலாளர்களையும ஏமாற்றுவது மே தினமாகும். சிந்தித்தித்தால் சிரிப்பு வரும்! மனம் நொந்தால் அழுகை வரும்!

அமெரிக்காவில் தொழிலாளர்கட்கு நீதி கேட்டுப் 19ஆம் நூற்றாண்டில் சிக்காக்கோ நகரத்தில் உரிமைப் போராட்டம் நடந்தது.

இந்த உரிமைப் போராட்டமே பின்பு மே தினமாக உலகெங்கும் மலர்ந்தது. இம் மே தினத்திலே உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்ற குரல் கேட்கும். இவ்வாறு ஒருநாள் முழங்கும் குரல்களை அடுத்த மே தினம் வரை கேட்க முடியாது!

இம் 'மே' தினத்திலே தொழிலாளர்கட்காகப் பேசப் போய் முதலாளித்துவத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்ட அடோல்ப் பிஷர் அலபேட் தொழிலாளர்களால் நினைக்கப்பட வேண்டியவர்.

முதலாளித்துவ நாடு ஒன்றில் நடந்த சரித்திர நிகழ்வான மே தினம் சோசலிஷ்ட் நாடுகளால்தான் கூட அனுஷ்டிக்கப்படுகின்றது. ஆனால் மூன்றாம் உலக நாடுகளில் தமது அரசியல் எதிரிகளை ஏளனம் செய்யவே இத்தினம் பயன்படுகின்றது. முதலாளிகள் பணம் கொடுத்துத் தொழிலாளர்களை, இத்தினத்தைக் கேளிக்கையான நாளாகக் கொண்டாடும்படி ஏவி விடுகின்றார்கள். தொழிலாளர் உரிமையை அடக்குவோர் மேடையில் பிரதம பேச்சாளராகித் தொழிலாளியால் மாலையிடப்படுகின்றார்.

முதலாளித்துவச் சிந்தனையில் வளர்ந்து முதலாளித்துவ மடியில் குஞ்சரம் ஊர்ந்த பாடகர்கள் தொழிலாளர்கட்காகப் பாடுகின்றார்கள். தொழிலாளர் தினத்தில் படக்காட்சிகட்கு வகுப்புபேதம் அற்ற டிக்கட்டுக்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் தொழிலாளர் போக்கிற்கு நேர் விரோதமான படங்களும் போல் றூம் டான்ஸ் காட்சியுடன் கூடிய படங்களும் அன்றே திரையிடப்படும். இதைவிட என்ன முஸ்பாத்தி உலகத்தில் இருக்கு!

விலைவாசியை மறக்கப் பண்ண பழைய ரோமானிய அரசர்கள் சர்க்கஸ் நிகழ்ச்சிகளைக் ஒழுங்கு பண்ணினார்களாம் நாட்டில்! இங்கே என்ன என்றால் இலங்கை அரசு மே தினத்தன்றுதொழிலாளருக்கு நன்மையான திட்டம் ஒன்றை அறிவிக்கப் போவதாகச் செய்தி வந்தது. அரச ஊழியர்கள், தொழிலாளர்கள், எல்லோரும் வாயைப் பிளந்தார்கள், கடைசியில் கங்கை அமரன் இசையுடன் அது சங்கமித்து விட்டது. மே தினத்தன்றும், பின்பும் சீனி ஒரு கிலோ 32 ரூபா தான் விற்றது!

ரஷ்யாவில் இம்முறை மே தினக் கொண்டாட்டத்தில் லித்துவேனியக் குடியரசுக்கு வீர சுதந்திரம் கொடுக்கச் சொல்லி ஆர்ப்பரித்தார்கள். மேடையில் இருந்த ரஷ்ய அதிபர் கொர்பச்சேவ் ஆத்திரத்திரத்தில் இறங்கிச் சென்று விட்டார்.

அங்கு மே தினத்தில் தொழிலாளர் உரிமையைவிட இன உணர்வு முந்திவிட்டது. ஆனால் இலங்கை மே தினத்தில் குறிப்பாகக் கொழும்பில் என்ன பேசப்பட்டது? வவுனியாவில் 'புலி' என வேசம் இட்டு ஒருவர் வந்தார். தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் கொடுக்கப்பட வேண்டும் என்றார் ஒருவர் (அநியாயமாகக் கேட்பதாக இவ்வளவு நாளும் உணர்ந்தார்களோ தெரியவில்லை) வடக்கு, கிழக்கைப் புலிகளிடம் தோற்றது என்றார் அனுரா. மொத்தத்தில் சிறுபான்மை மக்கட்கு இந்நாட்டு அரசியல் வாதிகள் (பெரும்பான்மை இனத்தினர்)வடித்த நீலிக்கண்ணீர் கொழும்பில் அரங்கேறியுள்ளது. எமது உரிமைக்குயார்தான் குரல் எழுப்பினார்கள் அங்கே!

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழர்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்காததால் இங்கிலாந்துக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழர்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கவில்லை எனக் கலாநிதி அன்ரன்பால சிங்கம் கூறினார், இது சரி




யான ஒரு 'லோ பொயின்ற்' சிங்கள அரசுகள் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்கும்வரை அவர்களை ஒரு சல்லிக்காசுக்குக்கூடக் கணக்கு எடுக்கவில்லை.

ஆறுமுக நாவலருக்கு 5 சத முத்திரையும். கபரக் கொய்யாவுக்கு 25 சத முத்திரையும் அச்சடித்துக் கௌரவித்தது பழைய அரசுகள்.

எனவே எமக்குரிய மரியாதையை இவர்களிடம் நாம் பெற முடியாது. ஆனால் ஒன்று சொல்லிவைக்கிறோம். இலங்கையில் பெரும்பான்மை இனத்துக்கு இல்லாத தேசிய உணர்வு எமக்கு உண்டு. அன்றைய தேசீய வாதிகளான கொல்வின், டாக்டர் என் எம். ஆகியோரைப் பிரிட்டிஷ் அரசு தேடிய போது அவர்களைஒளித்து இந்தியா அனுப்பியவர்கள் தமிழர்களே! இந்திய வல்லரசுக்குப் பதிலடி கொடுத்தது சிறுபான்மை இனமே! கொழும்பில் கூடி நின்று வகுப்பு வாதம் பேசும் பழைய (பிறைம் மினிஸ்ரர்) மகன் அனுராவும், அம்மையார் ஸ்ரீமாவோவும் இதை உணர வேண்டும்.

நான் கொழும்பில் பொறளை மார்க்கமாக மினி பஸ்சில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். எனக்குப் பின்னால் இ. போ. ச. பஸ் வந்துகொண்டிருந்தது. எனக்கு அருகில் இருந்த சிங்களப் பிரயாணி சொன்னார். ''அந்த இ.போ.ச. பஸ் மினிடஸ்ஸை முந்தாது. ஏனெனில் அந்தச் சாரதியின் மினிபஸ் தான் நாங்கள் பிரயாணம் செய்யும் மினி பஸ்!'' இதிலிருந்து என்ன தெரிகின்றது? முதலாளித்துவம் முந்திப் போக அரசு அனுமதித்து உள்ளது. அரசு பின்னே தூண்டி நிற்கின்றது.

கொழும்பில் நடைபெற்ற மினிபஸ் தொழிலாளர் ஊர்வலங்கள் இதையே சொல்லாமல் சொல்லின.

இங்கே என்ன மே தினமா நடாத்தப் படுகின்றன?

தமிழ் மக்களைப் படுகொலை செய்து தமிழ் ஈழத்தைத் திருமலையில் பிரகடனம் செய்துவிட்டு பின்பு மே தினத்தைக் கொழும்பில் கொண்டாடியது ஒரு கட்சி. அதுதான் 'ஈ' யில் ஆரம்பித்து 'எப்' இல் முடியும் வெட்கக் கேடான அந்தயான் கட்சி.

மொத்தத்தில் வெட்கக் கேடான மே தினம் இலங்கையில் சில இடங்களில் நடந்துள்ளன.. மே தினத்தைக் கேலிக்கூத்து ஆக்காதீர். மே தினம் கேளிக்கை அல்ல!

ஒப்பம்
அப்புக்காத்து ஆறுமுகம். □




## அணையாத தீபம்!

அவனை எவராலும் நெஞ்சிலிருந்து நீக்கமுடியாது, ஈழத்தில் மட்டுமல்ல; உலகத்தின் சகல பகுதிகளிலும் இன்று அவன் பெயர் பேசப்பட்டுக் கொண்டேயிருக்கிறது.

தியாகம் என்னும் தெய்வீகமான வார்த்தைக்கு முழுமையான அர்த்தத்தை எமது நெஞ்சங்களுக்குள் படரச் செய்தவன் அவன்.

எமது மண் அந்தத் தியாகியை சிருஷ்டித்ததற்காக பெருமைப்படுகிறது. திரள் திரளாக உலாவித்திரியும் மேகங்களும், வானில் கூட்டம் கூட்டமாக கண்சிமிட்டிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களும், எமது தேகங்களைத் தழுவி புத்துணர்ச்சியைப் பரிசளிக்கும் சில்லென்ற காற்றும் அவன் ஞாபகங்களை எமக்குள் குவித்துக்கொண்டிருக்கின்றன.

எதிர்கால ஈழம் சுதந்திரம் என்ற வார்த்தைக்கு அடுத்ததாக அவன் நினைவுகளையே முத்தமிட்டுக் கொண்டிருக்கும்.

அவன்தான் தியாகி திலீபன்.

மரணம் ஒரு மனிதனை அழித்துவிடும்; ஆனால்- மக்களையும், அம்மக்களின் சுதந்திரத்தையும் நேசித்தவனை காலத்தால்கூட அழித்துவிட முடியாது.

மனசுக்குள் எழும், ஓர் இளைஞனுக்கே உரிய அற்புதமான ஆசைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, தன் தேகத்திற்குள் தேங்கியிருந்த உயிர் அமுதத்தை அணுவணுவாக ஒழுக அனுமதி வழங்கியவன் தியாகி திலீபன்.

ஊரெழு கிராமத்தில் பார்த்தீபன் என்ற பெயருடன், பனைமரங்களின் கீழே, பூவரசமர நிழல்களின மடியில் கிளுவை வேலி ஓரங்களில் ஓடி விளையாடித் திரிந்த அந்தச் சிறுவன், திலீபன் என்னும் தியாகியாய், அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் அன்புக் கரங்களினால் அணைக்கப்பட்டு விட்டான்.

அவன் பிரசவமாகி பத்தாம் மாதம் தாய் மரணமானாள். தேசம்தான் அவனது தாய் என்பதை காலம் தீர்மானித்து விட்டது போலும்.

அவன் உருண்டு புரண்டதும் நீலாம்பரி கேட்டு நித்திரை செய்ததும் தேசத் தாயின் மடியில்தான்.

பல்கலைக் கழக மருத்துவபீடத்திற்கு தெரிவான பின்பு, மக்களின் கண்ணீரைக் கண்டு கதறிக்கொண்டிருந்த அவன் உள்ளம், போராடத் தீர்மானித்தது.

பல்கலைக் கழகக் கல்வியை பக்குவமாய் ஒதுக்கிவிட்டு, புரட்சிக்குப் புறப்பட்டது அந்தப் புறா.

விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் பொறுப்

## விண்ணுலகில் உயிர்த்தேடல்

இன்றைய விண்யுக மனிதனுக்கு பெரும் சந்தேகமாக இருப்பது கோடானு கோடி பிரபஞ்சக்குப்பையில் பூமிமட்டும் தான் உயிரினங்களைக் கொண்டதா அல்லது வேற்றுலகிலும் உயிரினங்கள் உள்ளதா?

இன்று பெரும் விஞ்ஞான சர்ச்சைக்குரிய விடயம் இது. போதாத குறைக்கு பறக்கும் தட்டுகள் என்ற பீதி கிளப்பி விடப்பட்டது. விடயம் மேலும் சூடுபிடித்தது.

இன்று விண்ணக ஆய்வில் இறங்கியுள்ள ரஷ்யாவும், அமெரிக்காவும் வேற்றுலக உயிரின ஆய்வில் இறங்கின. நாம் தங்கியுள்ள சூரியத் தொகுதியில் இவர்களது முதல்உயிரினவாராய்வுஆரம்பமானது. இருபது ஆண்டுக் கணக்காக ஆராய்வில் ஈடுபடுகிறார்கள். முடிவுகள் ஏதுமில்லை.

இதற்குள் பிற நட்சத்திர மண்டலங்களை அலசுவதில் ஈடுபட்டுள்ளார்கள். சூரியத் தொகுதியில் உள்ளடங்கிய கிரகங்களை விட நட்சத்திரங்களை ஆய்வுசெய்வது இலகு. ஏனெனில் பூமியில் உள்ள வானியில் தொலை நோக்கிகள் சக்தி கூடியவை. அவற்றில் குறித்த தொலைவிற்கப்பால் உள்ளவை மட்டுமே தெரியும். அதனால் கிரகங்களை அவை கண்காணிக்க உதவமாட்டா. ஆகவே விண்கலங்களை அனுப்பியே கிரகங்களை ஆராய வேண்டும். இந்த ஆய்வில் இரு வல்லரசுகளும் ஈடுபட்டவேளை வேற்றுப் பிரபஞ்சங்கள், நட்சத்திரங்களிலும் உயிரினவாய்வு நடந்து வருகின்றது.


இந்த வேற்றுலக உயிரின ஆய்வு எதற்காக?

1. மனிதன் வாழக்கூடிய சாத்தியம் வேற்றுலகில் உண்டா என அறிவதற்கு.
2. மனிதன் குரங்கிலிருந்து பிறந்தானா அவனும் ஒரு வேற்றுலக உயிரினமா என ஆய்வதற்கு.
3. இதுவும் ஒரு விஞ்ஞான முன்னேற்றம். இவற்றை கூறியவர் அமெரிக்க விண்ணாய்வாளர்களில் ஒருவரான கார்ல் சாகன்

(Milkyway) என்ற பிரபஞ்சத் தொகுதியில் உள்ளது. இந்த பால்வழிப் பிரபஞ்சத்தில் நூறு பில்லியன் நட்சத்திரங்கள் உள்ளதாக அறியப்பட்டுள்ளது. இந்த நூறு பில்லியனும் உண்மையான மதிப்பீடு அல்ல. ஒரு கணக்கீடே.

முதலில் அந்த நூறு பில்லியன நட்சத்திரங்களில் உயிரின ஆய்வைத் தொடங்க வேண்டும். இந்த நூறு பில்லியனை ஆராய மூவாயிரம் ஆண்டுகள் வேண்டும்.) அதன் முதற்கட்டம் கிரகங்களைக் கொண்ட (அதாவது சூரியனைப்போல்) நட்சத்திரங்களை தெரிவுசெய்தல். அடுத்த கட்டம் அவற்றில் ஒட்சிசன் என்ற மனிதன் சுவாசிக்கும் வாயுவையும், நீரையும் தேடல்.

பூமியில் வாழும் மனிதன் சுவாசிப்பது ஒட்சிசன் என்றால் மற்றைய உலகிலும் ஒட்சிசனை சுவாசிக்க வேண்டும் என்பதில்லை. பூமியில் ஒட்சிசன் சுவாசித்து உயிர் வாழ்வது ஒரு தனித்துவம். இதுபோல் வேற்றுலகில் நைத



ET என்ற திரைப்படத்தில் சித்திரிக்கப்பட வேற்றுலக உயிரினம்.
படம்:- Science digest

ரசன் போன்ற வாயுக்களை சுவாசிக்கும் உயிரினங்கள் இருக்கக்கூடாது?

ஆகவே இந்த ஒட்சிசன் தேடும் படலம் வீண்வேலை என்றே தோன்றுகிறது.

இன்று பல நாடுகளின்

என்ற ரஷ்யர். இதேவகையில் லேஸர் வகைக் கதிர்களையும் ரஷ்யர்கள் தேடுகின்றார்கள். ஆனால் இன்று வரை எவ்வகை லேஸர்களையும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் முயற்சி தொடர்கிறது.

வேற்றுலகத்திலிருந்துவரும் வானொலி அலைகளையும், லேஸர்களையும் கண்டறியும் வேளையில் இந்தப் பிரபஞ்சத்தில் நம்மையும் இனம் காட்டுவதற்காக லேஸர்களையும், வானொலி அலைகளையும் அனுப்புவதற்கு ரஷ்யா திட்டமிட்டிருக்கிறது.

□ தி. தவபாலன் □

சென்ற ஆண்டு 'நெப்டியூன்' என்ற கிரகத்தை கடந்து சென்ற அமெரிக்காவின் 'வொஜேயர் – 2' விண்கலம் 'சிரியஸ்' என்ற நட்சத்திரத் தொகுதிவரை செல்லும் என்று அமெரிக்காவின் நாஸா தெரிவித்துள்ளது. அவ்வாறு சிரியஸ் தொகுதிக்குச் செல்கையில் வேற்றுலக உயிர்கள் இக்கலத்தை சந்தித்தால் நம்மை இனங்காண்பதற்காக அனைத்து நாடுகளின் இசைகள் அதில் பதிக்கப்பட்டுள்ளதாம். (இந்திய இசை உட்பட 15 இசைகள்) நம்மை வேற்றுலகில் இனங்காட்டுவதற்கு

## பாரதச்சுவடுகள்

(11)

- பாப்பாணன்

இழப்பதும் இறப்பதும் இவண் நிகழ்வானால்
இருப்பது என்ன பயன்
குழப்பமும் கொலையும தொடர்கதையானால்
குடியிருப்பது முடியா
அழப்பிறந்தோமா? அல்லவே எங்கும்
அந்நிய நாடேகி
பிழைத்திடுவோமென பெரும் பொருள்தந்து
பிரிந்தார் தாயகத்தை

இந்நி லையினில் இளைஞர் பலரிங்
கிருந்திடவே அஞ்சி
எந்தத் தேசம் ஏகியும் பிழைக்க
எண்ணிப் பறந்தனரே
சொந்தத் தாய் மண் சுதந்திரமின்றி
சுடுகாடாகியதால்
பந்தம் பாசம் பற்றுகள் விலக
பறந்திட எங்கெங்கோ

பிடித்தனர் சிறையுள் அடைத்தனர் அந்த
பெருமதிற் சிறைக்குள்ளே
குடித்தனர் உயிர்கள் கொத்திட வெட்டிட
கொடுத்தனர் ஆயுதங்கள்
நடித்தனர் வெளியே நல்லவர் போன்று
நாடுகள் நம்பிடவே
முடித்திடத் தமிழர் சரித்திரம் இங்கு
முயன்றனர் பல வழியில்

சிங்களச் சிறையும் உடைந்தது இருமுறை
சிரம் குனிந்தார் ஆள்வோர்
தங்களை விஞ்சிய தமிழர் வீரம்
தனை உணர்ந்தார் இனியும்
இங்குள தமிழன் இளையோன் முதியோன்
எவனென்றாயி யிடினும்
அங்குலமேனும் வளரவிடாது
அழித்திட முடிவெடுத்தார்

தப்பிப்போனவர் தத்தம் புகுபுலம்
தன்னில் இங்காளும்
துப்புக் கெட்டவர் செய்புன் செயல்களை
துலாம்பரமாய் எங்கும்
செப்பித்திரிந்தனர் சேர்த்தனர் பெருநிதி
செருக்கள மிங்காடும்
ஒப்பில் வீரர் உரியன பெற்று
உரிமைப் போராட

அசைத்திட முடியா அணியெனத் தமிழர்
ஆனது உலகறிந்தே
இசைத்தது தமிழர் இறங்கிடா வீரம்
இதுகண் டிவர் அதிர்ந்து
திசைபல ஓடியும் திரவியம் தேடியும்
திரும்பி வருகையிலே
விசைக் கணை ஆயுதம் விண்மண் வாகனம்
வெடித்திடும் குண்டு வகை

தன் தேசத்திற்குள் தேங்கியிருந்த உயிர் அழுத்தத்தை அணுவணுவாக ஒழுக அனுமதி வழங்கியவன் தியாகி திலீபன்.

ஊரெழு கிராமத்தில் பார்த்தீபன் என்ற பெயருடன், பனைமரங்களின் கீழே, பூவரசமர நிழல்களின மடியில் கிளுவை வேலி ஓரங்களில் ஓடி விளையாடித் திரிந்த அந்தச் சிறுவன், திலீபன் என்னும் தியாகியாய், அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் அன்புக் கரங்களினால் அணைக்கப்பட்டு விட்டான்.

அவன் பிரசவமாகி பத்தாம் மாதம் தாய் மரணமானாள். தேசம்தான் அவனது தாய் என்பதை காலம் தீர்மானித்து விட்டது போலும்.

அவன் உருண்டு புரண்டதும் நீலாம்பரி கேட்டு நித்திரை செய்ததும் தேசத் தாயின் மடியில்தான்.

பல்கலைக் கழக மருத்துவபீடத்திற்கு தெரிவான பின்பு, மக்களின் கண்ணீரைக் கண்டு கதறிக்கொண்டிருந்த அவன் உள்ளம், போராடத் தீர்மானித்தது.

பல்கலைக் கழகக் கல்வியை பக்குவமாய் ஒதுக்கி விட்டு, புரட்சிக்குப் புறப்பட்டது அந்தப் புறா.

விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் பொறுப்பாளனாய், அவன் இருந்த சமயம், அவனது விடுதலை வேட்கையினைக் கண்டும், ஆழமான அறிவைப் புரிந்தும் நான் பிரமித்திருக்கிறேன்.

தனிப்பட்ட ரீதியில் கூட அவனோடு பிரியம் வைத்திருக்கிறேன்.

பேசும்போது அடிக்கடி புன்னகைப்பதும், கேசத்தைக் கோதிக்கொண்டு மறு கையினை அசைப்பதும் அழகாய் இருக்கும்.

87ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி தாயகத்தின சுதந்திரத்தை நோக்கமாகக்கொண்டு ஐந்தம்சக் கோரிக்கையினை முன்வைத்து அவன் நீராகாரம் எதுவுமின்றி உண்ணாவிரதம் அனுஷ்டிக்க ஆரம்பித்த போது, இந்தியா அவனது கோரிக்கைகளை நிறைவேற்றி, அவனை உயிர்பிழைக்க வைக்குமென நாமெல்லாம் நம்பியிருந்தோம்

எமது நம்பிக்கையில் வெட்டுவிழுந்து விட்டது.

அவனது உயிர் துளிதுளியாக 12ஆம் நாள் முற்றாக வடிந்துபோனது.

அவன் மரணத்திற்குப் பின்பே இந்தியாவின் காந்திஜி நாட்டின் நிஜரூபம் வெளிப்பட்டது.

‘இலைகளை
இழந்துகொண்டிருந்த
மரம்
அன்று
ஒரு பூவை இழந்தது.
நட்சத்திரங்களை
இழந்துகொண்டிருந்த
வானம் —
அன்று
சந்திரனை இழந்தது!’

— என்று செப்ரெம்பர் 26 திகதியிட்டு, ‘காலமானது நீயல்ல; காலம் தான்’ என்ற மகுடத்தின் கீழ் என் கண்ணீர் வெள்ளைத்தாளை ஈரப்படுத்தியது.

நிஜமாக அவன் காலமாகவில்லை; காலம்தான் சடலமானது.

புல்தரைகளும், பூமரங்களும் அவன் வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்கின்றன.

திலீபனின் மரணத்தின்பின், இரண்டாம் தடவையாகக் காந்திஜி மரணித்துவிட்டார். இரண்டாவது தடவையும்கூட இந்தியனால்தான்....

ஒரு நிமிஷம்கூட ஓய்ந்திருக்காமல், விடுதலைக்காக விழித்திருந்த தியாகி திலீபன், எமது தேசமெங்கும் அணையாத தீபமாகிவிட்டான்.

எதிர்கால இளைஞர்களுக்கும் - யுவதிகளுக்கும், தியாகத்தின் செறிவைப்பற்றி அவன் பாடம் நடாத்திக் கொண்டிருக்கிறான்.

நிகழ்கால இளைஞர்களுக்கும் - யுவதிகளுக்கும் நெஞ்சுரத்தை அன்பளிப்புச் செய்கிறான்.

அவனை ஞாபகிக்கும் பொழுதில் நெஞ்சில் மொய்க்கும் சோகங்கள் உலர்ந்துவிடுகின்றன; மனசு, விடுதலை இராகத்தை இசைக்கத் தொடங்குகிறது.

இன்னும்..

□

---

வில் இரு வல்லரசுகளும் ஈடுபட்டவேளை வேற்றுப் பிரபஞ்சங்கள், நட்சத்திரங்களிலும் உயிரினவாய்வு நடந்து வருகின்றது.

இந்த வேற்றுலக உயிரின ஆய்வு எதற்காக?

1. மனிதன் வாழக்கூடிய சாத்தியம் வேற்றுலகில் உண்டா என அறிவதற்கு.
2. மனிதன் குரங்கிலிருந்து பிறந்தானா அவனும் ஒரு வேற்றுலக உயிரினமா என ஆய்வதற்கு.
3. இதுவும் ஒரு விஞ்ஞான முன்னேற்றம். இவற்றை கூறியவர் அமெரிக்க விண்ணாய்வாளர்களில் ஒருவரான கார்ல் சாகன் (Carl Sagan)

சரி வேற்று நட்சத்திரமண்டலத்தில் மனிதனை வாழக்கூடிய சாத்தியங்கள் உள்ளன எனக்கொள்வோம். அது பூமியிலிருந்து பல நூறு கோடி மைல்கள் தொலைவில் இருக்கும் மனிதன் அங்கு சென்று குடியேறுவது சாத்தியமா?

ஆகவே இக்கருத்தைக்கைவிடுவோம். இரண்டாவது கருத்தைக் கொள்வோம்..... அது சாத்தியமாகக் கூடியது. பூமியில் டைனோசர்கள் அழிந்த காலத்தின் பின் இன்றைய உலகம் பரிணமிக்கத் தொடங்கியது. பல உயிரினங்கள் தோன்றின. இவற்றின் பின் மனிதன் தோன்றினான். குரங்குகளின் பரிணாம வளர்ச்சியே இன்றைய மனிதன். சார்ள்ஸ் டார்வின் என்ற உயிரியலறிஞரின் கொள்கை. இது அவரால் ஊகிக்கப்பட்ட கொள்கை. ஆனால் ஒரு சில ஆதாரங்களையும் காட்டியுள்ளார்.

கோடானு கோடியான பிரபஞ்சங்கள் இந்த அண்டத்தில் உள்ளன. அங்கு பூமியை விட பல நூறு ஆண்டுகள் முன்னேறிய உயிரினங்கள் இருந்தன. நாம் இன்று சூரியமண்டலத்தை மீறிச்செல்ல அனுப்பிய வொயேஜயர்கள, பயனீர்கள் போன்ற கலங்களை அவை உபயோகித்து சூரிய மண்டலத்தை நாடி வந்தன. வந்த வேளை தம் சூழலிற்குசந்த பூமியில் குடியேறின. அவை தாம் மனிதர்.’’

இதுவே இன்றைய விண்யுக ஆய்வகர்களின் ஊகம். இதனைவெறும் கற்பனை எனக் கொள்ளலாகாது. நடக்கக்கூடிய சாத்தியம் இது. நமது பூமியும் நிலைத்து இன்னும் இரு நூறு வருடங்கள் வாழ்ந்தால் வேற்று நட்சத்திர மண்டலத்தில்மனிதனைக் குடியேற்றலாம்.

## உயிரினத்தேடல் முயற்சி

நாம் வாழும் பூமியையடக்கிய சூரியத்தொகுதி பால்வழி



ET என்ற திரைப்படத்தில் சித்திரிக்கப்பட வேற்றுலக உயிரினம்.
படம்:- Science digest

ரசன் போன்ற வாயுக்களை சுவாசிக்கும் உயிரினங்கள் இருக்கக்கூடாது?

ஆகவே இந்த ஒட்சிசன் தேடும் படலம் வீண்வேலை என்றே தோன்றுகிறது.

இன்று பல நாடுகளின் ஆய்வு ஒட்சிசன், நீர் தேடலாக இருக்கின்றது.

ஆனால் ரஷ்யா வானொலி அலைகளைத் தேடுகிறது. வேறுலகில் பூமியைவிட முன்னேறிய சமூகங்கள் இருப்பின், அவர்கள் தம்மை வெளிப்படுத்துவதற்காக எத்தனையோ காரியங்களை செய்யலாம். அத்தகைய காரியங்களில் ஒன்று வானொலிஅலைகளை அனுப்புதல். அப்படி வானொலி அலைகளை அனுப்பியிருப்பின் நம்மால்அவற்றை இனங்காணமுடியும். அவர்களின் மொழி விளங்காவிடினும் வேற்றுலகில் உயிரினங்கள் உண்டு என அறிந்து ஆய்வுகளைத் தொடரலாம் என்கின்றார். ‘மக்கோவற்ஸ்கி’ (Makoversky)

கள் இக்கலத்தை சந்தித்தால் நம்மை இனங்காண்பதற்காக அனைத்து நாடுகளின் இசைகள் அதில் பதிக்கப்பட்டுள்ளதாம். (இந்திய இசை உட்பட 15 இசைகள்) நம்மை வேற்றுலகில் இனங்காட்டுவதற்கு அமெரிக்காவின் முயற்சி இது.

வேற்றுலகில் உயிரினம்... இன்றைவரை மர்மமானது. நிச்சயமாக வேற்றுலகில் உயிரினங்கள் உண்டு. இந்த உண்மை வெகுகாலத்துள் அறியப்படும்.

குறிப்பு: விண்ணியல்பெயர்கள்.

வேற்றுலக உயிரி: Extra-terrestrial (ET)

பிரபஞ்சம்: Galaxy

வானொலி அலை: Radio rays

ஆதாரம்: Science in the U. S. S. R.
Newyork times Voyager - 2
Newsweek Voyager - 2
Science Journal
New Scientist

---

அழித்திட முடிவெடுத்தார்

தப்பிப்போனவர் தத்தம் புகுபுலம்
தன்னில் இங்காளும்
துப்புக் கெட்டவர் செய்புன் செயல்களை
துலாம்பரமாய் எங்கும்
செப்பித்திரிந்தனர் சேர்த்தனர் பெருநிதி
செருக்கள மிங்காடும்
ஒப்பில் வீரர் உரியன பெற்று
உரிமைப் போராட

அசைத்திட முடியா அணியெனத் தமிழர்
ஆனது உலகறிந்தே
இசைத்தது தமிழர் இறங்கிடா வீரம்
இதுகண் டிவர் அதிர்ந்து
திசைபல ஓடியும் திரவியம் தேடியும்
திரும்பி வருகையிலே
விசைக் கணை ஆயுதம் விண்மண் வாகனம்
வெடித்திடும் குண்டு வகை

படையினர் சுடுபடை கலமது இயக்கிட
பயிற்சி கொடுத்திடவும்
தடையெது மின்றி தருவித்தார்கள்
தக்க வல்லுநர்கள்
கொடையென வளர்ச்சிக் கொள்கையில் பெற்ற
கோடித் திரவியங்கள்
இடையறா தியந்திரத் துவக்குகள் வாங்க
இறைத்தனர் மனம் வந்தே

கூலிப்படைகளை கூவிஅ ழைத்தனர்
கூட்டியும் வந்தனரே
காலி செய்திடும் தமிழரை எனவே
காசினை வீசினரே
காலிப்படைகளை காக்கிச் சட்டையுள்
கையில் துவக்குடனெம்
வேலிக்குள்ளே வேட்டையாடி
விட்டார் படையுடனே!

-தொடரும்

---

## ஒரு தவறு

‘‘விண்ணுலகில் உயிர்த்தேடல்’’ என்னும் தலைப்பிலான இக்கட்டுரையின் முதல் ஒருபகுதி ‘‘விண்வெளி வினோதம்’ பகுதியில் செவ்வாய் அறிமுகம் என்னும் தலைப்பின் கீழ் தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதனால் வாசகர்களுக்கு ஏற்படும் சிரமத்திற்கு மன்னிப்புக் கோருகின்றோம்.

ஆ-ர்.

---

## வைரவரிகள்

□ மனிதருக்குச் சட்டங்கள் அவசியம் என்ற நிலை உருவானதும், சுதந்திரத்தை அனுபவிக்க அவர்கள் அருகதையற்றவர்கள் ஆகின்றனர்.

- பைதோகரஸ்

□ சண்டைகள் நீண்ட காலம் நீடிப்பதில்லை, குற்றம் ஒரு பக்கமே இருக்குமானால்.

- லா. ரோஷ்ஃபுக்கோ.

□ தர்மமாய் இராதது எதுவும் சிறந்ததாய் இருக்க முடியாது.

- ஸேம்யல் ஜான்சன்.

□ சிறியவற்றைத் துச்சமாகத் தள்ளுபவன் சிறுகச் சிறுக வீழ்ச்சி அடைவான்.

- அம்பாக்ரிஃபா.

---

## வள்ளுவ வாக்கியம்

தீரம்;

அவன் சுகத்தை நாடியிருக்கலாம். ஆனால் இடரையே நாடினான்.

செல்வத்தை விரும்பி இருக்கலாம். ஆனால் வறுமையை ஏற்றான்.

புகழ்ச்சியை விரும்பி இருக்கலாம், ஆனால் இகழ்ச்சியையும் தூற்றலையுமே ஏற்றுக் கொண்டான்.

பாதுகாப்பைத்தேடி இருக்கலாம். அவ்விதம் புகுந்திடாமல் பகைமையை எதிர் கொண்டான். நீடிய வாழ்வுக்குப் பதில் எந்நேரமும் வரும் மரணத்தை வரவேற்றுச் சென்றான்.

அவனைக் கண்டு சுகம் குறுகிற்று. செல்வம் நாணிற்று. பயம் விரண்டு ஓடிற்று. மரணம் வலுவிழந்து நின்றது. காரணம்;–

அவன் சுத்த வீரனாய் நின்றதே! அந்த வீரமைந்தனின் முன் ஆசையும் அச்சமும் அடி தளர்ந்து வீழ்ந்தன. துயரத்தைத் தேடி அவன் முன்னேறிச் சென்றான். வலிமையின் விசையெனச் சென்றான். கேடுகள் அனைத்தும் ஓடி மறைந்தன! நலிந்ததோர்க்கு நல்வாழ்வு பிறந்தது!

இருளில் சில முனகல்கள் கேட்டன. அவை தோல்வியுற்ற பகைமையின் குரல்கள்-

‘‘நாம் இன்பத்தை நம்பினோம். அவனோ துன்பத்தை நாடினான், தீரனாய் விட்டான்’’! என்ற ஒலி அங்கு காற்றில் எழுந்து மிதந்தது. (குறள் 630)

நாக. பத்மநாதன்.

# தரிசனமும் நிதர்சனமும்

தமிழ் மக்களின் மேம்பாட்டுக்கு ஒரு பொது நூல் நிலையத்தின் அவசியத்தை உணர்ந்திருந்த மறைந்த அதி வண. பிதா தீமோத்தி எம். எப். லோங் அடிகளார் கண்ட தரிசனமே யாழ். பொது நூல் நிலையம் ஆகும்.

யாழ்ப்பாணத் தமிழ் மக்களுக்கு ஒரு தேசிய நூல்நிலையமாகத் தாம் தரிசனமாகக் கண்ட பத்துலட்சம் பெறுமதியுள்ள பொது நூல் நிலையத்தை நிதர்சனமாக்கித் தருவதற்காகக் கரிசனையுடைய ஏனைய பொதுநலன் விரும்பிகளுடன் இணைந்து பத்து லட்சம் ரூபாவை குறிக்கோளாகக் கொண்ட யாழ். பொது நூலக நம்பிக்கை நிதியை யாழ். மாநகர முதல்வராக வரும் வாய்ப்பைப் பெற்ற சாம். ஏ. சபாபதியூடாக ஆரம்பித்து வைத்தார்.

வண. பிதா லோங் அடிகளாரது தரிசனமும், முன்னாள் யாழ். மாநகர முதல்வர் சாம். ஏ. சபாபதி போன்றவர்களது விடா முயற்சியும் தந்த பலனே யாழ். பொது நூல் நிலையமாகும்.

யாழ். பொது நூல் நிலையத்தைநிர்மாணிப்பதற்காகத் திரை கடல் கடந்து பெருந்திரவியம் ஈட்டித் தந்த வண. பிதாலோங்அடிகளாரொருவன் பாட்டுப் படுகொலையாகவும் மனிதகுலத்துக்கே விரோதமான ஒரு குற்றச் செயலாகவும் இத்தீவு மக்களின் வரிப் பணத்தில் இருந்து ஊதியம் பெறும் சட்டத்தினதும் ஒழுங்கினதும் பாதுகாவலர்களாலேயே தமிழ் மக்களின் பண்பாட்டுப் பெட்டகமாகவும் அறிவுக் களஞ்சியமாகவும் திகழ்ந்த யாழ். பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்டு சாம்பல் மேடாகக் கப்பட்டகொடுமையைக் கண்டாரில்லை.

அப்படுபாதகச் செயல் நிகழ்ந்த சமயம் பிதா. லோங் அடிகளார் மட்டும் உயிரோடு இருந்திருப்பாரேல் எரிந்த பொதுநூலகத்தை மீளவித்துப் புனரமைப்பதற்கு ஒரு போதும் திரும்பவும் திரை கடல் கடந்திருக்க மாட்டார் திரவியம் ஈட்டுவதற்காக. சங்கநாதம் புரிந்து போர்க் கொடி உயர்த்தியிருப்பார்.

நாமோ ஸ்ரீலங்கா அரசு தானே நியமித்த லயனல் பெர்னாண்டோ விசாரணைக் குழுவினால் அரசின் பாதுகாப்புக் கரங்களால் எரிக்கப்பட நூலகத்துக்கும் அதன் தேடற்கரிய சேர்வுகளான 97,000 புத்தகங்களுக்குமாக சேர்த்து சிபார்சு செய்யப்பட்டிருந்த கொடுப்பனவான ஒரு கோடி ரூபா நட்ட ஈட்டுத் தொகையைத் தானும் யாழ். மாநகர வரிஇறுப்பாளருக்கும் யாழ். பொதுநூலக மீள்விப்புக்கும், புதுப்பித்தலுக்கும் ஆதாயப்படுத்திக் கொள்ளுவதற்கு வக்கில்லாதவர்களாகவும், வகையறியாதவர்களாகவும் கையது நிலையில் வாழாவிருக்கிறோம்.

தங்களைத்தாங்களே தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டபிரதிநிதிகள் என்றும் தமிழ் மக்கள் சார்பில் பேசும் உரிமை ஏகபோகமாகத் தம்முடையதே என்றும் தம்பட்டம் அடித்து வந்தவர்களால் லயனல் பெர்னாண்டோ விசாரணைக் குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட நட்ட ஈட்டுக் கொடுப்பனவு ஒரு கோடிரூபாவும் வழங்கப்படாமலு. அரசினால் முடக்கப்பட்டமையைத் தானும் வேண்டியவாறு முறையாகப் பாராளுமன்றப் பதிவேடுகளிலேனும் அம்பலப்படுத்திப் பதிவிடட இயலாது போனமை துர்பாக்கியமானதே.

1983 மே 18ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலையடுத்து கொண்டுவரப்பட்ட அவசர காலம் குறித்த விவாதங்களில் கலந்து கொண்டு நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில்அப்போதைய எதிர்க்கட்சித்தலைவர் சொன்னார். எரிக்கப்பட்ட யாழ். பொதுநூலகத்துக்கு லயனல் பெர்ணன்டோ கமிஷன் ஒரு கோடி ரூபா நட்டஈட்டுக் கொடுப்பனவைச் சிபார்சு செய்திருந்த போதிலுங்கூட இதுவரை ஆக ஒரு இருபது லட்சம் ரூபா மட்டுமே அரசினால் வழங்கப்பட்டிருப்பதாக அப்போதைய எதிர்க் கட்சித் தலைவர் இவ்விதமாக கப்படவே இல்லை.

அப்படியாயின் வழங்கப்பட்டதாக அப்போதைய எதிர்க் கட்சித் தலைவரால் மழுப்ப முனைந்ததும் குளறுபடி செய்யப்பட்டதுமான தொகை யாதோ?

அரசின் பாதுகாப்புக்கரங்களால் நூலகம் எரிக்கப்பட்டது என்ற உண்மையைப் பதிவில் ஒப்புக்கொள்வதாகும். லயனல் பெர்னாண்டோ விசாரணைக் குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட கொடுப்பனவை நட்ட ஈடாக வழங்குவது ஆகவே ஜே ஆரின் குறுக்கு மூளை வேறுவிதமாக வேலை செய்தது.



அதனால் சமகாலத்தில் யாழ். மாநகர எல்லைகளுக்குள் விளைவிக்கப்பட்டசேதங்களுக்கு லயனல் பெர்னாண்டோ விசாரணைக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்ட கொடுப்பனவுகளான நட்டஈட்டுத் தொகைகளை பாதிக்கப்பட்டவர்களால் தொடரப்பட்ட வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரணையில் இல்லாதபட்சத்தில் உரியவர்களுக்கு வழங்குமாறு யாழ். அரசாங்க அதிபருக்கு எழுத்து மூலமாக வழங்கப்பட்ட அறிவுறுத்தல் யாழ்.பொது நூலகத்துக்கு சிபார்சு செய்யப், பட்ட தொகை புறநீங்கலாக ஏனைய அனைத்துக்கொடுப்பனவுகளையுமே உள்ளடக்கியிருந்தது.

லயனல் பெர்னாண்டோ விசாரணைக் குழுவினால் கொடுப்பனவுக்குச் சிபார்சு செய்யப்பட்டிருந்த நட்டஈட்டுத் தொகைகளுள் எரிந்த தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைமைப் பணியகம், யாழ். நகர்பாராளுமன்றஉறுப்பினர் மற்றும் குடாநாட்டில்இருந்து அப்போது வெளிவந்துகொண்டிருந்த ஒரே ஒரு தொலைத் தொடர்பு சாதனத்துக்கான தொகைகளும் உள்ளடங்கும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த ஒரே ஒரு தொலைத் தொடர்புச்சாதனமான மேற்படி பத்திரிகை தீக்கு இரையாக்கப்படக் காரணமே யாழ். பொது நூல் நிலையத்துக்கு விளைவிக்கப்பட்டிருந்த பேர

மற்றும் வெ... ரிகை நிருபர்கள ...னும் மேற்படி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு வதந்திகளாக அடிபட்ட செய்தியை உறுதி செய்துகொள்ள அனுமதியாது இருப்பதே அந்த ஏடு கொளுத்தப்படக் காரணமாக இருத்தல் வேண்டும்.

தலைநகரில் இருந்துவரும் தமிழ், சிங்கள. ஆங்கில தேசிய தினசரிகளோ இல்லது இலங்கையின் ஒலிபரப்புக்கூட்டுத்தாபனமோ நூலகம் தகனம் செய்யப்பட்ட தகவலைபற்றி மூச்சுக்கூட விடாது இருட்டடிப்புச்செய்திருந்தன.

இந்திய அமைதிப்படை அக்டோபர் 10 இல் விடுதலைப் புலிகள்மீது தாக்குதல் நடத்த முன் அனர்த்தங்களை இருட்டடிப்புச் செய்வதற்காக ''ஈழ முரசு'' ''முரசொலி'' பத்திரிகைகளைக் குண்டு வைத்து தகர்த்து ''நிதர்சனம்'' கருவிகளை அப்புறப்படுத்தி ''உதயன்'' பத்திரிகைக் காரியாலயத்தையும் ஷெல் தாக்குதலுக்கு இலக்காக்கியதை ஒத்த நிகழ்வே அதுவும்.

ஆயினும் நூலகத்துக்கு நேர்ந்த பேரழிவைக் காண்பிக்கும் ஒளிப்படங்கள் சகிதம் சென்னைக்கு விரையப்பட்ட ஒருவரால் அங்கு நடாத்தப்பட்ட பத்திரிகையாளர்மாகாநாட்டால் செய்தி அனைத்து உலக வானொலிகள் பத்திரிகைகள் சஞ்சிகைகள் யாவற்றுக்கும் எட்டவே கணப்பொழுதில் மேற்படி பண்பாட்டுக்கொலை உலகச்செய்தியாக மாறிவிட்டது. கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு என்பர். ஆயினும் சம்பந்தப்பட்ட இருட்டடிப்போ ஒரு வாரம்தானும் நிலைக்கவில்லை.

மக்களுக்காக குரல் கொடுத்து வரியிறுப்பாளர்களுக்குச் சொந்தமான நூலக நட்ட ஈட்டை வலியுறுத்திப் பெற்றுத் தந்திருக்க வேண்டிய யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்களை அன்று நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய ஸ்தாபனமான தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஏன் குடாநாட்டில் அன்று வெளிவந்து கொண்டிருந்த ஒரே ஒருதொலைத் தொடர்பு சாதனமும் கூட பொது நூலக நட்டஈட்டு விவகாரத்தை அழுத்திவலியுறுத்தாது இருட்டடிப்பும் செய்து தத்தமக்கு லயனல் பெர்னான்டோ கமிஷனால் சிபார்சு செய்யப்பட்ட நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகளைத் தமக்கு ஆதாயப்படுத்திக் கொண்டனர் பொது வாழ்வில் தூய்மை பேணாதவர்கள்தாமா தமிழர் உரிமையை வென்றுதந்திருப்பார்கள்

யாழ். பொது நூலகம் அர

...ம்சேத... ...ன்றவற்றிற்கு சிவப்பு நாடாவைக் கடந்து கொடுப்பனவுகளை வழங்குவதற்காக நிர்வகிக்கப்படும் ஜனாதிபதி நிவாரண நிதியில் இருந்து ஒரு பத்து இலட்சம் ரூபாவை விடுவித்து ஜனாதிபதி யாழ் பொதுநூலக நம்பிக்கை நிதி எனும் பெயரில் வங்கியில் இட்டு ஒரு தனிக் கணக்கை ஆரம்பித்திருந்தார் என்பதோடுபொது மக்களையும் அந்நிதிக்கு அன்பளிப்புக்களைச் செய்யுமாறு அழைப்பும் விடுத்திருந்தார்.

ஆகவே, அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரால் தெரிவிக்கப்பட்ட பிரகாரம் அரசினால் வழங்கப்பட்ட தொகை ரூபா இருபது லட்

யவர்கள் எதை அவரது கூற்றில் மறந்தோ வேண்டுமென்றோ யாழ். பொதுநூலகம் என்று குறிப்பிடாதுயாழ். நகர மண்டபம் என்று கூறிவிட்டார். தீக்கிரையாக்கியது நூல் நிலையமன்றி நகர மண்டபம் அல்ல! யாழ். பொலீஸ் நிலையத் தாக்குதலின் போது தகர்ந்ததே யாழ். நகரமண்டபம், அதுவே உண்மை

எரிக்கப்பட்ட நூலகத்துக்கு நட்ட ஈடு கோரி யாழ். மாவட்ட நீதி மன்றில் தொடரப்பட்டிருந்த வழக்கையும் மேற்படி உண்மைகள்அம்பலத்துக்கு வராது காக்க தலைமைப்பீடத்தின் பணிப்பின்படி தமிழர் விடுதலைக் கூட்ட

வாக கைவிடப்பட்டிருக்கும் போது ஒரு தேசிய வீரர் அந்தஸ்துக்கு சுவாமிகளை உயர்த்தும் அரசின் நோக்கம் தூய்மையானதாக இருந்திருப்பின் குறைந்த பட்சம் நூலகத்தைச் சேரவேண்டிய கொடுப்பனவான ஒரு கோடி ரூபா நட்ட ஈட்டையல்லவா அது முதலில் வழங்கியிருக்க வேண்டும்?

அந்தக் கொடுப்பனவை ஆதாயப்படுத்திக் கொள்ள மாட்டாத நாம் எடுக்கும் விழா அப்பெரியாருக்குளப்படி மனநிறைவைத் தந்திருக்கும்?

நூலகத்தின் நுழைவாயிலில் கம்பீரமாக நிற்கும் வெள்ளையுடை அணிந்த, வெள்ளை



எரியுண்ட யாழ் நூலகம்

சமும் லயனல்பெர்னான்டோ கமிஷனால் சிபார்சு செய்யப்பட்ட நட்ட ஈட்டுக் கொடுப்பனவோ அல்லது அதன் ஒரு பாகமோ அல்ல! மாறாக ஜனாதிபதி நிவாரண நிதியில் இருந்து பத்து இலட்சம் ரூபா நிவாரணமும், எஞ்சிய தொகை பதினொரு இலட்சமும் பொதுமக்கள்மனமுவந்து அளித்திருந்த நன்கொடைகளுமே.

சிபார்சு செய்யப்பட்ட ஒரு கோடி ரூபா நட்ட ஈட்டின் இழப்புக்கு வழங்கப்பட்ட நிவாரணமும் நன்கொடையும் எம்மாத்திரம்?

**அரசு**

ஆயினும், யாழ். பொது நூலகம் அரசின் பாதுகாப்புக் கரங்களால் தீக்கிரையாக்கப்பட்டது என்ற பேருண்மையை முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆரினால் தானும் நீண்ட காலம் மூடி மறைக்க முடியவில்லை. 1986ஆம் ஆண்டு ஜூலை 26, 27இல்தாம்முதல் தடவையாக நடாத்திய சர்வதேசபத்திரிகையாளர்மாநாட்டிலே உண்மையைத் தம்

ணியின் நிர்வாகத்தின் கீழ் இருந்த யாழ். மாநகர சபையால் திரும்பப் பெறப்பட்டது.

பிதா லோங் அடிகளாரின் இழப்பு இப்போது போல் முன் எப்போதுமே அத்தனை தூரம் உணரப்பட்டிருக்கமாட்டாது. அரசு தரும் கௌரவத்தை வண. பிதாவும் விரும்பியிரார். தாம் தரிசனமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களுக்கு ஒரு தேசிய நூலகமாகத் திகழ்வதற்கு அவர் நிதர்சனமாக்கித் தந்த அறிவாலயம் தொடர்ந்தும் ஒரு சாம்பல் மேடாக வரலாற்றுச் சிதை

உள்ளம் கொண்ட அந்த வெள்ளை மனிதர் கல்லாக கலைஞன் வடித்த சிலையாக இல்லாது உயிரோடு இருந்திருப்பராகில் நூலகத்துக்கு இழைக்கப்பட்ட மோசடிகளை அம்பலப்படுத்தியிருக்க மாட்டாரா?

சுவாமி லோங் அடிகளார் தமிழ் மக்களுக்கு ஒரு தேசிய வீரரே தான். அன்னாருக்கு ஏற்ற ஞாபகச் சின்னம் புதிய தபால் முத்திரையோ வேறெதுவுமோ அல்ல. அவர் தரிசனமாகக் 'கண்ட நூலகத்தை மீள்வித்து புதுப்பித்து உன்னதமான நிலைக்கு உயர்த்துவதே. □

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பெறும் சட்டத்தினதும் ஒழுங்கினதும் பாதுகாவலர்களாலேயே தமிழ் மக்களின் பண்பாட்டுப் பெட்டகமாகவும் அறிவுக் களஞ்சியமாகவும் திகழ்ந்த யாழ். பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்டு சாம்பல் மேடாக்கப்பட்டகொடுமையைக் கண்டாரில்லை.

அப்படுபாதகச் செயல் நிகழ்ந்த சமயம் பிதா .லோங் அடிகளார் மட்டும் உயிரோடு இருந்திருப்பாரேல் எரிந்த பொதுநூலகத்தை மீள்வித்துப் புனரமைப்பதற்கு ஒரு போதும் திரும்பவும் திரை கடல் கடந்திருக்க மாட்டார் திரவியம் ஈட்டுவதற்காக.

மாறாக விடுதலைவேட்கை மிகுந்த அயர்லாந்து மண்ணின் மைந்தனான அப்பெருமகன் அப்படுபாதகச் செயலைப் புரிந்தோரிடம் இருந்தே அதற்கான உரிய நட்ட ஈட்டுத் தொகையை வாதாடிப் போராடிப் பெறுவதற்காகச்

1983 மே 18ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களையடுத்து கொண்டுவரப்பட்ட அவசர காலம் குறித்த விவாதங்களில் கலந்துகொண்டு நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில்அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். எரிக்கப்பட்ட யாழ். பொதுநூலகத்துக்கு லயனல் பெர்ணாண்டோ கமிஷன் ஒரு கோடி ரூபா நட்டஈட்டுக் கொடுப்பனவைச் சிபார்சு செய்திருந்த போதிலும்கூட இதுவரை ஆக ஒரு இருபது லட்சம் ரூபா மட்டுமே அரசினால் வழங்கப்பட்டிருப்பதாக அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் இவ்விதமாக ஒரு முழுப் பூசனிக்காயை எதற்காக ஓர் இலை சோற்றுக்குள் புதைக்க முயன்றிருத்தல் வேண்டும்? லயனல் பெர்னாண்டோ குழுவினால் சிபார்சுசெய்யப்பட்ட கொடுப்பனவே எரிந்த நூலகத்துக்கான நட்டஈடு! அந்த நட்டஈடு ஒருபோதும் வழங்

கொடுப்பனவுக்குச் சிபார்சு செய்யப்பட்டிருந்த நட்டஈட்டுத் தொகைகளுள் எரிந்த தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைமைப் பணியகம், யாழ். நகர்பாராளுமன்றஉறுப்பினர் மற்றும் குடாநாட்டில்இருந்து அப்போது வெளிவந்துகொண்டிருந்த ஒரே ஒரு தொலைத் தொடர்பு சாதனத்துக்கான தொகைகளும் உள்ளடங்கும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த ஒரே ஒரு தொலைத் தொடர்புச்சாதனமான மேற்படி பத்திரிகை தீக்கு இரையாக்கப்படக் காரணமே யாழ். பொது நூல் நிலையத்துக்கு விளைவிக்கப்பட்டிருந்த பேரழிவை உலகின் கண்களுக்கு இரட்டிப்பு செய்வதற்காகவே.

அதனை எரியூட்டி விட்டே படுபாவிகள் யாழ், பொது நூலகத்தில் கை வைத்திருந்தார்கள். யாழ் நூலகம் எரிக்கப்பட்டமையைத் தலைநகர் கொழும்பில் இருந்த பி பி சி.

படுத்திய ஸ்தாபனமான தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஏன் குடாநாட்டில் அன்று வெளிவந்து கொண்டிருந்த ஒரே ஒருதொலைத் தொடர்பு சாதனமும் கூட பொதுநூலக நட்டஈட்டு விவகாரத்தை அழுத்திவலியுறுத்தாது இருட்டடிப்பும் செய்து தத்தமக்கு லயனல் பெர்னான்டோ கமிஷனால் சிபார்சு செய்யப்பட்ட நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகளைத் தமக்கு ஆதாயப்படுத்திக் கொண்டனர் பொது வாழ்வில் தூய்மை பேணாதவர்கள்தாமா தமிழர் உரிமையை வென்றுதந்திருப்பார்கள்

யாழ். பொது நூலகம் அரசின் பாதுகாப்புக்கரங்களினால் தீயூட்டப்பட்டது எனும் பேருண்மையை ஒப்ப மறுத்த ஜே. ஆர்., லயனல் பெர்னான்டோ கமிஷன் சிபார்சு செய்திருந்த நூலகத்துக்கான கொடுப்பனவான ஒரு கோடி ரூபா நட்ட ஈட்டுத் தொகைக்குப் பதிலாக, இயற்கை அனர்த்தங்களால்


கோடி ரூபா நட்ட ஈட்டின் இழப்புக்கு வழங்கப்பட்ட நிவாரணமும் நன்கொடையும் எம்மாத்திரம்?

## அரசு

ஆயினும், யாழ். பொது நூலகம் அரசின் பாதுகாப்புக் கரங்களால் தீக்கிரையாக்கப்பட்டது என்ற பேருண்மையை முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆரினால்தானும் நீண்ட காலம் மூடி மறைக்க முடியவில்லை. 1986ஆம் ஆண்டு ஜூலை 26, 27இல்தாம்முதல் தடவையாக நடாத்திய சர்வ தேசபத்திரிகையாளர்மாநாட்டிலே உண்மையைத் தம் வாயாலேயே ஒப்புக்கொண்டு விட்டார். 1981 ஜூனில் நடந்த யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிர்வகிப்பதற்கு தம்மால் யாழ்ப்பாணம் அனுப்பப்பட்ட விசேட பொலிசார் தாம் அங்குள்ள யாழ். நகர மண்டபத்தைத் தீக்கு இரையாக்கி

ஒரு தேசிய நூலகமாகத் திகழ்வதற்கு அவர் நிதர்சனமாக்கித் தந்த அறிவாலயம் தொடர்ந்தும் ஒரு சாம்பல் மேடாக வரலாற்றுச் சிதை

துவுமோ அல்ல. அவர் தரிசனமாகக் கண்ட நூலகத்தை மீள்வித்து புதுப்பித்து உன்னதமான நிலைக்கு உயர்த்துவதே, □



# மகுடி என்றொரு மானிடன்

-திக்கவயல்-

திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்பவர் ஓர் இசைக் கலைஞர். சம்பந்தர் காலத்தவர். அடியார்களின் தேவாரத்தையும் தொண்டர்களின் பதிகத்தையும் யாழிலே இசை அமைத்துப் பாடும் வல்லமை கொண்டவர். அந்தக்கலைஞர் ஒருநாள் தடுமாறினார். காரணம் சம்பந்தரின் பதிகம் இசைக்குள் அடங்காமல் போனதுதான்!

அஃது போன்று மகுடி என்ற இந்த மானிடனின் கேள்வி பதில்கள் நூலகர்கள் குறிப்பிடும் எந்த வகுப்பு எண்களிலும் அடக்க முடியாதது. அரசியல் தத்துவம், கவிதை, சமயம், முற்போக்கு விஞ்ஞானம் என்ற எந்தத் துறையிலும் அவர் பதிலளித்து உள்ளார் அவரின் கேள்வி, பதில்களைக் கவிதையாக்கலாம்; கட்டுரையாக்கலாம்; நாவல் ஆக்கலாம்; இழுக்க இழுக்கவும் மடிக்க மடங்கவும் கூடிய குறளின் வடிவமைத்துக் கொண்டதே மகுடியின கேள்வியும் பதிலும்!

பண்டையகிரேக்கத்திலே ஏன் என்று கேள்வி கேட்பவர்களுக்கு இதுதான் எனப் பதிலளித்து மக்களை நல்வழிப்படுத்தியதுபோல, உலக மாந்தரை நல்வழிப்படுத்தும் ஒரு கலங்கரை விளக்கமாக மகுடி அமையும். கத்தோலிக்க சமயத்தின் பிளவுக்குக் காரணமாக இருந்தவர் மாட்டின்லூதர் எனபவர். அவரைப் பற்றிக் குறிப்பிடும் போது வரலாற்று ஆசிரியர்கள் ''மக்கள் சிந்திக்கின்றார்கள். லூதர் கூறுகின்றார்'' எனக் குறிப்பிட்டனர் அது போன்ற ரீங்கார இசைவடிவம் கொண்டதே மகுடி என்ற மாமனிதனின் பதில்கள்.

## வினோபாவும் மகுடியும்

வினோபாவைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவரைப் பார்ப்பதற்கு நீங்கள் எங்கும் போக வேண்டியதில்லை. வீட்டு வாசல்களிலே நின்றால் அவர் வந்து சந்திப்பார் எனச் சொல்லப்படுவதுண்டு மகுடி என்ற இமானிடன் இந்திய உபகண்டத்திலே மராட்டியப்பத்திரிகைகள் தொடங்கி இலங்கையின் பிரபல்ய People Voice வரை கார்ட்டூனிஸ்டாக இருந்தவர் உபகண்டத்திலிருந்து இக்குட்டித் தீவு வரை அவரின் கால்படாத மண் இல்லை, இவர் தன்னை மாத்திரம் அன்றி மற்றவர்களையும் வீழ்த்தாத மனோநிலையைக்கொண்டவர். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற தாரகமந்திரத்தின் முன்னோடியாகவும் இருக்கின்றார்.

## புரட்சியில் பூத்த பூ

றொபெஸ்பியர், டான்டன், மரட், ஆகியோரின் புரட்சி எழுத்துக்களே பிரஞ்சுப் புரட்சிக்கும், பஸ்ரீல் சிறை உடையவும் காரணங்களில் ஒன்றாகின. அங்கே இரத்தம் சிந்தும் புரட்சிக்குக் காரணமான அவர்களின் எழுத்துக்கள் இங்கே இரத்தம் சிந்தாத சிந்தனைப் புரட்சியாக மகுடியாரால் வரவழைக்கப்பட்டது.

கந்தன் அஃறிணை; நாய் உயர்திணை என்ற அவரின் பதில்கள் கத்தியைத் தீட்டாது புத்தியைத் தீட்டி ஆலயக் கதவுகள் பலவற்றைத் திறந்தது. பாட்டின் திறத்தாலே வேதாரணியக்கதவை சம்பந்தர் திறந்தார். பதிலின் திறந்தாலே மனிதன் இருதயத்தை மகுடி திறந்தார்.

சுதந்திரத்தை விலைபேசி விற்ற கிளிக்கூடு வியாபாரிகள் 'பெற்' வளர்த்த பெரும் பணக்காரர்கள் இனி எம் வேலை அடுக்காது என அவற்றை விடுதலை செய்தனர் மகுடிக்கு அன்றி வேறு யாருக்குத்தான் இப்பெருமை.

## சீதனக்கோட்டை வீழ்ந்தது

ஓ மகுடியே! சீதனம் என்ற கோட்டையை விழுத்திய பெருமை உமக்கன்றோ சாரும். சீதனம் வாங்கிக் கல்யாணம் செய்தோரை சீதனமும் வேண்டும் சிங்கார நாச்சியும் வேண்டும் என நகைச் சுவையாகக் குறிப்பிட்டு ஓட வைப்பார். இது அன்றி அவர் இது பற்றிக் குறிப்பிட்ட நூற்றுக்கணக்கான பதில்கள் ஆண்களின் சிந்தனையைக் கிளறி, சீதனம் என்ற கோட்டையை வீழ்த்திப் பல பெண்களைச் சுமங்கலிகள் ஆக்கியது. மகுடிக்கு அன்றி யாருக்கு இந்தப் பெருமை?

மல்கம் ஆதிஷேசய்யா போன்ற அறிவாளிகள் தமது நூலுக்குக் கலைஞர் மு. கருணாநிதி ஒரு முகவுரை தந்தால் அது தனது வாழ்க்கையின் பெரும் பேறு என்று குறிப்பிட்டார்கள். அவ்வாறான அறிவாளிகளே இவ்வாறு வேண்டி நிற்கும் போது கலைஞரே பல ஈழத்தவர்களிடம் ''யார் இந்த மகுடி?'' அவரை ஒரு முறை காண வேண்டும் எனக் கேள்வி எழுப்பினாராம். அது ஒன்றே இந்த மானிடன் பல நூற்றாண்டுகள் உயிர் வாழப் போகின்றான் என்பதற்கு உரிய அறிகுறிகளாகும். □

(அடுத்த வாரம் முடியும்)




மகுடியாரின் பார்வையில்
இன்றைய இளைஞரின் தலைமுடி வளர்ப்பு

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## உயர்திரு வல்லிபுரம் மாணிக்கம்

தோற்றம் 03- 06- 1908

திருநிழல் 16- 05- 1988

திதி: 25- 05- 1990

துலங்க வைத்தனை தொட்ட துறைகளை
தூயனாய் எம்முள் வாழ்ந்து காட்டினை
நலங்கள் நாம்பெற நாளும் உழைத்தனை
நமது கைம்மாறைப் பெறாது மறைந்து நீ
கலங்க வைத்தனை ஐயா உன் நினைவுகள்
காலத்தால் அழியாது எம் நெஞ்சிலே
இலங்கும் எமக்கு நல்வழி காட்டிடும்
இனியனே நீ ஆத்ம சாந்தி கொள்!

இங்ஙனம்
அன்பு மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

மாணிக்கபுரி
சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

(R/499)